குறுந்தகவல் செய்திகள்
உடனுக்குடன் தமிழில்
உங்கள் Dialog வலையமைப்பில்
Type REG VK send to 87960
நாள் ஒன்றுக்கு : ரூ.1.67 + பெறுமதிசேர் வரிகள்

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/141/News/2020 www.virakesari.lk
விசேட பதிப்பு

குறுந்தகவல் செய்திகள்
உடனுக்குடன் தமிழில்
உங்கள் Dialog வலையமைப்பில்
Type REG VK send to 87960
நாள் ஒன்றுக்கு : ரூ.1.67 + பெறுமதிசேர் வரிகள்

மலர் :90 இதழ்: 205 கொழும்பு விகாரி வருடம் பங்குனி மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை (02.04.2020) ஹிஜ்ரி — 1441 ஷஃபான் 08 விலை :ரூ.30 பக்கங்கள் :12 +8

ஏப்ரல் 20 இல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் சாத்தியமில்லை

இணையம், அரச தொலைக்காட்சிகள் ஊடாக கற்கைநெறிகளை முன்னெடுக்க நடவடிக்கை - அரசாங்கம் அறிவிப்பு

(ஆர்.யசி)

இம்மாதம் 20 ஆம் திகதி நாட்டிலுள்ள சகல அரசபாடசாலைகளையும்மீண்டும்ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே விரைவில் இணையம் மற்றும் அரச ஊடகங்கள் மூலம் மாணவர்களுக்கான கற்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. 2

யாழ்., குருநாகல், மருதானையில் புதிய தொற்றாளர்கள் கண்டுபிடிப்பு

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்க பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது...

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 146 ஆக உயர்வு

(எம்.எப்.எம்.பஸீர்)

இலங்கையில் கொரோனா வைரஸ் குடும்பத்தின் கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை நேற்று இரவு 7 மணியாகும் போது 146 ஆக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கொழும்பு மருதானை ஆகிய பகுதிகளில் புதிதாக மூன்று தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து இந்த எண்ணிக்கை 9

புத்தளம் கொரோனா தொற்றாளர்

மலேஷியாவிலிருந்து வந்த விமானத்தில் பயணித்தவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை

அடையாளம் காணப்பட்ட 10 தொற்றாளர்களும் அங்கொடைக்கு

(எம்.எப்.எம்.பஸீர்)

புத்தளம் கடையான்குளம் பகுதியில் அடையாளம் காணப்பட்ட 50 வயதான கொரோனா வைரஸ் தொற்றாளருடன் கடந்த 17 ஆம் திகதி மலேஷியாவில் இருந்து இலங்கைக்கு ஒ.டி.185 எனும் விமானத்தில் வந்த அனைவரையும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகுமாறு, கொவிட் 19 தொற்று பரவலை தடுப்பதற்கான தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவர் இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார். புத்தளம் கடையான்குளம் தொற்றாளர் 2

நடுக்கடலில் சிக்கிய 2000 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் ஆஸி. நோக்கி கடத்தப்பட்டதாம்

கைது செய்யப்பட்டவர்களும் அதிகாரிகளும் தனிமைப்படுத்தலுக்கு

(எம்.எப்.எம்.பஸீர்)

இலங்கை கடற்படையினரால் தென் ஆழ் கடலில் வைத்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் பெறுமதி சுமார் 2000 கோடி ரூபாவையும் விட அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந் நிலையில் இந்த போதைப் பொருளானது பாகிஸ்தானிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கி, அங்குள்ள கடத்தல்காரர்களுக்கு 9

ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டதையடுத்து தியத்தலாவை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக மக்கள் வரிசையில் நின்றபோது எடுத்த படம். (படம்:பதுளை நிருபர்)

ஊரடங்கை மீறிய 8739 பேர் கைது

2149 வாகனங்கள் பறிமுதல்

(செ.தேன்மொழி)

ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்பட்டமை தொடர்பில் 12 நாட்களுக்குள் 8739 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 2149 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. 9

அதிகாரிகள் மீது முஸ்லிம் சமூகம் நம்பிக்கையிழக்கும் நடவடிக்கை

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தெரிவிப்பு

(எம்.ஆர்.எம்.வஸீம்)

முஸ்லிம் சகோதரரின் ஜனாஸாவை புதைப்பதற்கு அனுமதியிருந்தும் அதற்கு மாற்றமாக அந்த ஜனாஸா தகனம் செய்யப்பட்டதானது மிகவும் கவலை அளிக்கும் செயலாகும். இவ்வாறான செயற்பாடுகள் முஸ்லிம் சமூகம் அதிகாரிகள் மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துவிடும் என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தெரிவித்துள்ளது. 2

6 மாவட்டங்களில்

ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை தொடரும்

(எம்.மனோசித்ரா)

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் அவதான பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு , கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 2

தற்போதைய நெருக்கடியில் எதற்கு முன்னுரிமை அளிப்பதென்பது எதிர்க்கட்சிக்கு தெரியாதா?

அரசியல் செய்யும் நேரமா இது? அரசாங்க பேச்சாளர் கெஹெலிய கேள்வி

(ரொபட் அன்டனி)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு பாதிக்கப்பட்டுள்ள நிலையில் எதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்ற விடயத்தை மறந்த எதிர்க்கட்சியினர் செயற்படுகின்றனர். இந்த அனர்த்தத்திலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதே தற்போது முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய விடயமாகும் என்று அரசாங்கத்தின் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். மாறாக அரசியல் வேலைத்திட்டங்களுக்கு தற்போது முன்னுரிமை அளிக்கவேண்டிய தில்லை. அரசியல் சுயலாபம் தேடவே எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தை 9

வெளிநாட்டவர்களின் விசா எல்லை நீடிப்பு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற் கொண்டு தற்போது இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் பெற்றுக் கொண்டுள்ள அனைத்து வகையான விசாக்களுக்குமான செல்லுபடியாகும் காலத்தை மேலும் 30 நாட்களுக்கு நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் படி இம் மாதம் 12 ஆம் திகதி முதல் மே மாதம் 12 ஆம் திகதி 2

பிரதமர் தலைமையில் இன்று சர்வகட்சி கூட்டம்

(எம்.மனோசித்ரா)

கொரோனா வைரஸ் தொடர்பில் நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இன்று காலை 11 மணியளவில் சர்வ கட்சி தலைவர் கூட்டம் இடம்பெறவுள்ளதாக 2

ஏப்ரல் 30 க்கு முன் (சா/த) பரீட்சை பெறுபேறுகள்

(ஆர்.யசி)

நாட்டில் மோசமான நிலைமைகள் காணப்பட்டாலும் கூட ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் என தெரிவித்துள்ள அரசாங்கம் உயர்தர பரீட்சை, தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் 9

இலங்கையின் நிலைவரம் குறித்து ஜனாதிபதியுடன்

உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் கலந்துரையாடல்

(ஆர்.யசி)

"கொவிட் 19" கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றசுகாதார வேலைத்திட்டம் குறித்து ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவிற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் தேரோஸ் அத்னோம் கெப்ரிஎசிஸ் நன்றிகளை தெரிவித்துள்ளார். 9

கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கையை பாதிக்கக்கூடாது

மதக்கோட்பாடு வேண்டாம்

மருத்துவ ஆலோசனையை பின்பற்ற வேண்டும் என்கிறது ஜே.வி.பி.

(எம்.மனோசித்ரா)

கொரோனா வைரஸ் பரவலானது தேசிய பிரச்சினையாகும். எனவே இதனை அரசியல் நோக்கமாகக் கொண்டு பயன்படுத்திக் கொள்வது அரசாங்கத்தின் ஒழுக்க விதிமுறைகளுக்கு 2

ஜனாதிபதிக்கும் ஐ.தே.க.வுக்கும் இடையிலான சந்திப்பில் அவதானம்

(எம்.மனோசித்ரா)

கொரோனா வைரஸ் ஒழிப்பிற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சாதாரண மக்களின் வாழ்க்கையை பாதிப்பதாக இருக்கக் கூடாது என்பதில் அரசாங்கம் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் அரச சேவையாளர்கள் வியாபாரிகள் மற்றும் பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புபட்டோர் சுயதொழில் செய்பவர்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்களுக்கு வழங்கப்படக் கூடிய தீர்வுகள் 9

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
வீரகேசரி நாளிதழை இலவசமாக
e-paper வடிவில் பார்வையிட
www.virakesari.lk
இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்
இலவசம்
கொரோனா COVID-19
இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை
28/03/2020
199
113
009
001
614,811
137,336
28,269

பிரதமர்....

(தொடர்ச்சி)

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதன்போது கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமையால் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் பிரதமரின் கவனத்திற் கொண்டு செல்லப்படும் என்றும் இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார்.

கட்சித் தலைவர் கூட்டத்தில் முன்னாள் சபாநாயகர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட பிரதான கட்சிகளினதும் ஏனைய அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மாத்திரமின்றி சுகாதாரத்துறை அதிகாரிகளும் இதில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து கட்சி தலைவர்களையும் அழைத்து கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் கலந்தாலோசிக்குமாறு பல்வேறு தரப்பினராலும் கோரப்பட்டு வந்த நிலையில் மார்ச் மாதம் 24 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் கட்சி தலைவர் கூட்டம் இடம் பெற்றது.

இதன் போது நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. அத்தோடு வீட்டிலிருப்பவர்களுக்கு மருத்துவ சேவையினைப் பெற்றுக்கொடுத்தல், நாளாந்த சம்பளத்திற்கு வேலை செய்பவர்களுக்கான நிவாரணங்கள், தேயிலை உள்ளிட்ட பெருந்தோட்ட த் துறைகளில் தொழில் செய்பவர்கள், மீனவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் முகங்கொடுத்துள்ள சவால்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. அதற்கமைய இன்று இடம்பெறவுள்ள கட்சி தலைவர் கூட்டத்தில் ஏற்கனவே வலியுறுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பான முன்னெடுப்புகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

6 மாவட்டங்களில்...

(தொடர்ச்சி)

ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நீடிக்கும் என்று அரசாங்கம் அறி வித்துள்ளது.

அதேவேளை ஏனைய மாவட்டங்களில் நேற்று புதன்கிழமை காலை 6 மணிக்கு தற்காலிகமாக ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டு மீண்டும் பகல் 2 மணிக்கு அமுல்படுத்தப்பட்டது. இம்மாவட்டங்களில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்கு சட்டம் நடைமுறையிலிருக்கும் என்றும் அரசாங்கம் மேலும் அறிவித்துள்ளது.

ஊரடங்கு சட்டம் தொடர்பில் அரசாங்கம் மேலும் அறிவித்துள்ளதாவது:

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்து வேறு எந்தவொரு தேவைக்கும் மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை திறம்பட செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறைமைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள காலத்தில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பவற்றை வீடுகளுக்கே சென்று விநியோகிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

எந்த மாவட்டமானாலும் விவசாயம் சிறு தேயிலை தோட்டங்களில் வேலை செய்வோர் மற்றும் ஏற்றுமதி அல்லது ஏனைய உற்பத்திகளில் ஈடுபடுவோருக்கு ஊரடங்கின் போது தத்தமது தொழில்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை மக்களின் நலனுக்காகவேயாகும். எனவே இந்த நடைமுறைகளுக்கு கட்டுப்படுமாறு அரசாங்கம் பொது மக்களை கேட்டுக் கொள்கிறது.

களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. எவருக்கும் இந்த பிரதேசங்களுக்குள் செல்வதற்கோ அல்லது அந்த பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்கோ அரசாங்கத்தால் அறிவிக்கப்படும்வரை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

புத்தளம்....

(தொடர்ச்சி)

நெருங்கிப் பழகிய 10பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மலேஷியா, இந்தோனேஷியா, தாய்லாந்துக்கு கடந்த பெப்ரவரி மாதம் ஆன்மீக சுற்றுலா முன்னெடுத்திருந்த குழுவின் ஒருவருக்கே இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது முதலில் கண்டறியப்பட்டது. அதனையடுத்து புத்தளம் கடையான்குளம் பகுதி முழுதும் தனிமைப்படுத்தப்பட்டது. அதில் அடையாளம் காணப்பட்ட பலர் புத்தளம் சாஹிரா கல்லூரி தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 20 பேரின் இரத்த மாதிரிகளை அனுராதபுரம் வைத்தியசாலையின் விஷேட பரிசோதனை அதிகாரிகள் விஷேட பரிசோதனைகளுக்கு உட்படுத்தினர். இதன்போதே அதில் 10 பேருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவர்கள் அனைவரும் ஆன்மீக சுற்றுலா சென்று திரும்பியவருடன் நெருக்கமான தொடர்பாடல் வட்டத்தில் இருந்தோர் என தெரியவந்துள்ளது.

இந்த 10 பேருக்கும் இதுவரை கொரோனா அறிகுறிகள் தென்படவே இல்லை என சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கூறுகின்றார். இவ்வாறான நிலையில் அவர்களுக்கு கொரோனா இருப்பது பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அவர்கள் 10 பேரும் நேற்று அதிகாலை, இராணுவத்தின் விஷேட பஸ் வண்டி ஊடாக அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களில் 8 பேர் ஆண்கள் என்பதுடன் இருவர் பெண்களாவர்.

இந்நிலையிலேயே புத்தளம் கடையான்குளம் முதல் தொற்றாளர் மலேஷியாவில் இருந்து இலங்கைக்கு வந்த விமானத்தில் வருகை தந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ள 36 பேருக்கு தனிமையில் இருக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டவர்களின்...

(தொடர்ச்சி)

வரையில் இவ்வாறு விசா செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கான விசாக்களை நீடிப்பது தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அனைத்து வகையான விசாக்களின் செல்லுபடி காலம் மார்ச் 14 முதல் ஏப்ரல் 12 வரையான 30 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது.

எனினும் நாட்டில் கொரோனா வைரஸ் பரவுவதை கருத்திற்கொண்டு தற்போது இலங்கையில் தரித்திருக்கும் வெளிநாட்டவர்கள் பெற்றுக்கொண்டுள்ள அனைத்து வகையான விசாக்களுக்குமான செல்லுபடி காலத்தை மேலும் 30 நாட்களுக்கு நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுமாறு அரசாங்கம் இலங்கையில் தரித்திருக்கும் வெளிநாட்டவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான விசாக்களின் செல்லுபடி காலம் மே மாதம் 12 ஆம் திகதிவரை நீடிக்கப்படுகிறது.

விசா நீடிப்புடன் செலுத்துதல் மற்றும் கடவுச்சீட்டில் புறக்குறிப்பிடுதல் பற்றி கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை தொடர்பாக வெகுவிரைவில் அறிவிக்கப்படும். எனவே முன்னைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் விசா பிரிவிற்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்காலப்பகுதியில் எவரேனும் நாட்டை விட்டு வெளியேற விரும்பினால் எந்தவொரு அபராதமும் இன்றி விமான நிலையத்தில் விசா கட்டணத்தை செலுத்துவதன் மூலம் நாட்டை விட்டு வெளியேற முடியும்.

விசாக்களை பெற விரும்புபவர்கள் அவர்களது கடவுச்சீட்டுக்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் விசா பிரிவினரிடம் ஏற்கனவே ஒப்படைத்திருப்பின் அங்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் செல்லுபடி காலமும் மேலும் 30 நாட்களுக்கு அதாவது மே மாதம் 12 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் நாட்டை விட்டு வெளியேற விரும்பினால் மாத்திரம் கடவுச்சீட்டினை இத்திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக குறித்த பற்றுச்சீட்டினதும் விமான பயணச் சீட்டினதும் நிழற் பிரதிகளை dcvisa@immigration.gov.lk, acvisa@immigration.gov.lk, acvisa1@immigration.gov.lk, acvisa2@immigration.gov.lk, aceta@immigration.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்ப வேண்டும்.

இது தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0771588724 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பினை ஏற்படுத்த முடியும்.

மதகோட்பாடு....

(தொடர்ச்சி)

இழுக்காகும். வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு இறப்பவர்களின் மரண சடங்குகளில் மத கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும் என்பதை விட மருத்துவ ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும் என்பதே தற்போது அவசியமாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா வைரஸ் பரவலினால் முழு உலகமும் அச்சுறுத்தலுக்கு முகங் கொடுத்துள்ளது. இதனை முற்றாக அழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தற்போதுள்ள நிலைவரத்தின் படி ஏனைய நாடுகளை விடவும் இலங்கையில் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவே எண்ணுகின்றோம். இதுவரையில் இலங்கையில் புதன்கிழமை மாத்திரமே ஒரே தினத்தில் அதிகளவான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனினும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைந்தவொரு எண்ணிக்கையாகும். எனவே வைரஸானது முழு நாட்டிலும் தீவிரமாக பரவுமளவுக்கு பாரதூரத்தன்மையை அடையவில்லை. ஒருசில பிரதேசங்களிலில் மாத்திரமே தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்றிணைவதன்மூலம் இதனை முற்றாக ஒழிக்க முடியும் என்று நம்புகின்றோம்.

சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்புத் துறையினருடன் பொது மக்கள் கைகோர்க்க வேண்டும். ஆரம்ப கட்டத்திலேயே அரசாங்கத்தின் சில குறைபாடுகள் தீர்க்கப்பட்டிருந்தால் தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். உதாரணமாக இலங்கையில் துறைமுகம் மற்றும் விமான நிலையம் என்பனவே வைரஸ் தொற்று பரவுவதற்கான பிரதான காரணிகளாகக் காணப்பட்டன. எனினும் ஆரம்பத்தில் விமான நிலையத்தை மூடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக இருந்தது. பின்னர் சுகாதாரத்துறையினரின் அழுத்தங்களுக்கமையவே விமான நிலையங்கள் மூடப்பட்டன.

விமான நிலையங்கள் மூடப்பட்ட பின்னர் வெளிநாடுகளிலிருந்து தாய் நாட்டுக்கு திரும்புபவர்கள் அனைவரும் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்ட போதிலும் பெரும்பாலானவர்கள் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. எனவே தான் தற்போது பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. இதனை ஆரம்பகட்டத்திலேயே அரசாங்கம் செயற்படுத்தியிருக்கலாம். இவ்வாறான சில பொறுப்பற்ற செயற்பாடுகளாலேயே தற்போது இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத்துறை பிரதானமாகக் காணப்படுவதோடு சமூக இடைவெளியைப் பேணுவதும் அத்தியாவசியமாகிறது. இதற்கு ஊரடங்கு சட்டம் மிக அத்தியாவசியமானதாகக் காணப்படுகிறது. எனவே அதனைத் தொடர வேண்டியுள்ளது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக வீட்டுக்குள்ளேயே இருப்பதாலும் பலர் அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். எனவே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுத்துள்ள ஒரு செயற்திட்டத்தால் பிரிதொரு விடயம் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. அதாவது கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்படும் அதே வேளை நீண்டகால மருந்துகள் எடுக்கும் நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே இவ்விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

வைரஸ் கட்டுப்படுத்தலுக்காக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களால் பாதிக்கப்படும் ஏனைய விடயங்களுக்கான தீர்வு துரிதமாக முன்வைக்கப்பட வேண்டும். இதனை வெறும் சுற்று நிருபத்திற்குள் மாத்திரம் உள்ளடக்கிவிடாது கீழ் மட்டத்திலிருந்து நேரடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அனைவருக்கும் அவற்றை கிடைக்கச் செய்ய வேண்டும். இதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் திறனற்றவை என்றே கூற வேண்டும். ஊரடங்கு சட்டம் பல நாட்கள் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் அது தற்காலிகமாக நீக்கப்படும் போது மக்கள் ஒன்று கூடுகின்றனர். இதனால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதன் பயன் அற்றுப் போகின்றது. இதற்கான ஸ்திரமான தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

மரணச் சடங்குகள்

வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழப்பவர்களின் மரண சடங்குகள் தொடர்பில் வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. முழு உலகமும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் மதக்கோட்பாடுகளின் படி செயற்பட வேண்டும் என்பதை விட மருத்துவ ஆலோசனைகளின்படி செயற்பட வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

அரசியலாக்க வேண்டாம்

தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை தேசிய பிரச்சினையாகும். எனவே இது எவ்வித பேதமும் இன்றி அனைவரும் பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபட வேண்டிய தருணமாகும். இந்த சந்தர்ப்பத்தில் இதனை ஒரு அரசியல் குழு மாத்திரம் கையிலெடுத்துக்கொண்டு செயற்படுவது அரசாங்கத்தின் ஒழுக்க நெறிகளுக்கு இழுக்காகும். பசில் ராஜபக்ச என்பவர் அமைச்சரோ பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது ஒரு அரச அதிகாரியோ அல்ல. ஒரு அரசியல் கட்சியின் ஸ்தாபகராவார்.

அதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்சவின் கட்சியின் தேசிய அமைப்பாளராக செயற்பட்டுள்ளார். எனவே அவர் தலைமையில் ஜனாதிபதி செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை எந்த அடிப்படையில் என்று எமக்கு விளங்கவில்லை. இவ்வாறானதொரு நெருக்கடியான சூழலை தேர்தலை நோக்காகக் கொண்டு பயன்படுத்திக் கொள்வது பெரும் தவறாகும்.

பாராளுமன்றத்தைக் கலைத்தல்

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் நோக்கம் பாராளுமன்றத்தை முடக்கி அனைத்து நடவடிக்கைகளையும் தானே முன்னெடுக்க வேண்டும் என்பதாகும். அவ்வாறில்லை என்றால் வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே அவர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கலாம். பாராளுமன்றத்தைக் கலைக்காமல் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குச் சென்றிருக்கலாம். எவ்வாறிருப்பினும் இது ஒரு தேசிய பிரச்சினை என்பதால் தேசிய தீர்வு அவசியமாகும் என்றார்.

அதிகாரிகள்....

(தொடர்ச்சி)

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த கொரோனா வைரஸினால் மரணித்த சகோதரரின் இறுதிக் கிரியைகள் தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ. முபாறக் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நோயாளிகளை கையாளுதல் பற்றிய மருத்துவ நடைமுறை வழிகாட்டல்கள் அண்மையில் வெளியிடப்பட்டதை நாம் அறிவோம். இதில் இவ்வைரஸ் காரணமாக மரணித்தவர்களின் பிரேதங்கள் தகனம் செய்ய வேண்டுமென்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், ஏனைய சிவில் அமைப்புகள், வைத்தியர்கள் மற்றும் முஸ்லிம் பிரமுகர்கள் என பலரும் இதுதொடர்பில் செயற்பட்டனர். இதன் விளைவாக குறித்த விடயம் ஜனாதிபதி மற்றும் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

உலகின் பல நாடுகள் கொரோனா வைரஸினால் இறந்தவர்களின் பிரேதங்களை எரிக்கவும் புதைக்கவும் அனுமதித்துள்ளதை மேற்கோள்காட்டி, இலங்கைவாழ் முஸ்லிம்களின் இவ்வாறான ஜனாஸாக்கள் புதைக்கப்பட நடவடிக்கை எடுக்கும்படி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவும் கடந்த 24 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கொரோனா தடுப்பு குழுவின் தலைவரும் ராணுவ தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டோரிடம் கடிதங்கள் மூலம் வேண்டிக்கொண்டது.

இம்முயற்சிகளின் விளைவாக கொரோனா வைரஸினால் இறந்தவர்களின் பிரேதங்களை நிபந்தனைகளுடன் புதைக்கவும் முடியும் என்ற மருத்துவ நடைமுறை வழிகாட்டல் கடந்த 27ஆம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டது. எனினும் மேற்குறிப்பிட்ட புதிய வழிகாட்டலின் அடிப்படையில் குறித்த முஸ்லிம் சகோதரரின் ஜனாஸாவை புதைப்பதற்கு அனுமதியிருந்தும் அதற்கு மாற்றமாக அந்த ஜனாஸா தகனம் செய்யப்பட்டதானது மிகவும் கவலை அளிக்கும் செயலாகும். இவ்வாறான செயற்பாடுகள் முஸ்லிம் சமூகம் அதிகாரிகள் மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துவிடும்.

இவ்விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டல்கள் உரிய முறையில் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் உரிய அதிகாரிகளுக்கும் கொண்டுபோய் சேர்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்பதை ஞாபகமூட்டுகின்றோம்.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் கொரோனா தடுப்பு குழுவின் தலைவர் லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா உள்ளடங்கிய ஒரு குழு நேற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியது. அத்துடன் இவ்விடயம் மீண்டும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனவே எதிர்காலத்தில் எல்லா விடயங்களும் நல்ல முறையில் நடப்பதற்கு அனைத்து முஸ்லிம்களும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அனைவரையும் கேட்டுக் கொள்கின்றது.

ஏப்ரல் 20....

(தொடர்ச்சி)

பாடசாலை எப்போது ஆரம்பிக்கப்படுகின்றதோ அப்போதிருந்து இரண்டு வாரங்களுக்குள் மாணவர்களின் பல்கலைக்கழக விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அமைச்சர்களான பந்துல குணவர்த்தன மற்றும் டலஸ் அழகபெரும தெரிவித்தனர். பாடசாலைகளை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்க முடியாமலிருக்கின்றமை மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர்களின் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள சிரமங்கள் ஏற்பட்டுள்ளமை குறித்து தெளிவுபடுத்தும் வகையில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர்கள் இருவரும் இதனை தெரிவித்தனர்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதுள்ள நிலைமைகளில் அரச பாடசாலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற சரியான திகதியை அறிவிக்க முடியாதுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமைகள் தொடர்ந்தும் நீடிக்கின்ற காரணத்தினால் இப்போதைக்கு பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது. அதேபோல் பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர்களின் விண்ணப்பங்களை பெற்றுக்கொடுக்கவும் சிரமமாக உள்ளது. எவ்வாறு இருப்பினும் அரச பாடசாலைகள் எப்போது ஆரம்பிக்கப்படுகின்றதோ அதில் இருந்து இரண்டு வார காலத்திற்குள் பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர்களின் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் நிதியும் கடந்த மாதம் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனை வழங்க அரச நிதியில் திறைசேரியில் இருந்து 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும் இப்போது திறைசேரியிலும் நிதி பற்றாக்குறை நிலவுகின்ற காரணத்தினால் அரச வங்கிகளின் மூலமாக நிதியை பெற்று மாணவர்களின் கணக்குகளுக்கு நிதியை செலுத்தியுள்ளோம்.

ஆகவே கடந்த மாதம் தாமதமான புலமைப்பரிசில் நிதி இப்போது வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்விக்கான ஊடக நிகழ்வுகள் நடத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் வீடுகளில் இருந்தே கல்வி கற்றும் விதத்தில் கல்விக்கான ஊடகம் ஒன்று அவசியம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கமைய அரச தொலைக்காட்சியில் அதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படவுள்ளது என்றார்.

டலஸ் அழகப்பெரும

கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதன்போது கருத்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விண்ணப்பத்திற்கான இறுதித் திகதியாக ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும் கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி வரையில் சகல பாடசாலைகளிலும் இரு தினங்கள் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என விசேட கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் நிலைமைகளை கருத்தில் கொண்டு இப்போது மாற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதாவது பாடசாலைகள் எப்போது ஆரம்பிக்கப்படுகின்றதோ அன்றில் இருந்து இரண்டு வார காலத்திற்கு (14 நாட்கள்) பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்கள் எவரும் குழப்பமடைய வேண்டிய அவசியம் இல்லை.

பாடசாலைகளை ஏப்ரல் 20 ஆம் திகதி ஆரம்பிக்கலாம் என இருந்தாலும் உறுதியாக எந்தவொரு தீர்மானமும் எடுக்க முடியாதுள்ளது. தற்போதுள்ள வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக எம்மால் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை உள்ளதால் மாணவர்களுக்கான இணைய கற்கையை முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். நாட்டில் பாடசாலைகளில் கற்கையை தொடரும் 47 இலட்சம் மாணவர்கள் உள்ளனர். அதேபோல் ஆரம்ப கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் இவர்கள் அனைவரையும் இணைத்தால் 5.5 மில்லியன் மாணவர்கள் நாட்டில் உள்ளனர். ஆகவே இவர்களை கருத்தில் கொண்டு ஜனாதிபதியின் தலையீட்டில் துரித கல்விமுறை ஒன்றினை முன்னெடுக்க தீர்மானம் எடுத்துள்ளோம். அரச ஊடகங்களில் தமிழ், சிங்கள அலைவரிசையில் மாணவர்களுக்கு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் இந்த கற்கைகள் ஆரம்பிக்கப்படும். மேலதிக தகவல்கள் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படும் என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அதிவிசேட ஒழுங்கு முறைப்படுத்தல் நடவடிக்கை

கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் வங்கிகளுக்கு வசதியாக இலங்கை மத்திய வங்கி அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துகின்றது.

கொவிட் 19 ஆல் பாதிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு சில சலுகைகளை வழங்குவதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு நெகிழ்ச்சித்தன்மையை வழங்கும் முகமாக பல அதிவிசேட ஒழுங்குமுறை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை முடிவுசெய்துள்ளது.

வழமை போன்று பெரும்பான்மையான கடன்பெறுநர்களால் கடன்களை திருப்பிச்செலுத்த முடியாமையால் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பில் உட்பட்ட உட்செல்லும் போக்கு, பொருளாதார செயற்பாட்டில் ஏற்படும் அசாதாரண இடையூறுகள் மற்றும் ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட மூலதனத் தாங்கியிருப்புக்கள் தற்போதைய மற்றும் எதிர்கால திரவத்தன்மை நிலைகள் ஆகியவற்றால் வங்கித் துறையில் ஒட்டு மொத்த தாக்கு பிடிக்கும் தன்மையை கருத்திற்கொண்டு நாணயச் சபை இந்நடவடிக்கைகளை தீர்மானித்திருக்கின்றது.

அதற்கிணங்க, கொவிட் 19 இல் பாதிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அவசர அடிப்படையில் உதவுவதற்கு வங்கிகளுக்கு கூடுதல் இடத்தை வழங்க மேல் குறிப்பிடப்பட்ட அதிவிசேட நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த நாணயச் சபை முடிவு செய்துள்ளது.

FOCUS ON BUSINESS
வீரகேசரி
வணிக உலா
www.virakesari.lk
kesari25@virakesari.lk
www.biz.lk

பாற்பண்ணையாளர்களிடமிருந்து தொடர்ச்சியாக பால் கொள்வனவில் ஈடுபடும் Pelwatte Dairy

முன்னணி உள்நாட்டு பாலுற்பத்தி நிறுவனமான Pelwatte Dairy Industries, தனியார் நிறுவனம் நாட்டின் கொரோனா தொற்று (COVI19) நிலைமை தொடர்பில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதோடு, உள்நாட்டு பாற்பண்ணை விவசாயிகளிடமிருந்து தொடர்ந்து பால் சேகரிப்பதை உறுதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. முழு உலகும் தொற்று நோய் சவாலை எதிர்கொண்டுள்ள நிலையிலும், பாற்பண்ணை விவசாயிகளின் வாழ்வாதாரம் எவ்விதத்திலும் பாதிப்படைய கூடாது என்பதை கருத்தில் கொண்டே உள்ளூர் பாலுற்பத்தி நிறுவனமான Pelwatte, இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

"உள்ளூர் பால் பதப்படுத்தும் நிறுவனம் என்ற வகையில் எங்கள் முக்கிய அக்கறைகளில் ஒன்று, நாங்கள் பால் சேகரிப்பைத் தொடர்வதும், எங்கள் உற்பத்தியைத் தொடர்வதுமாகும். பாற்பண்ணை விவசாயிகளிடமிருந்து தொடர்ச்சியாக பால் சேகரிக்கப்படுவது அவசியமாகும், ஏனெனில் அவர்களின் வாழ்வாதாரம் அதை சார்ந்துள்ளது. அதனாலேயே நாம் தொடர்ந்து பால் சேகரிப்பை மேற்கொள்வதுடன், இது கொள்வனவு செய்யப்பட்ட பாலுக்கான பணத்தொகையை உரிய நேரத்தில் செலுத்துவதையும் உறுதி செய்கின்றோம். இதன்மூலம், நெருக்கடியான இந்த கால கட்டத்தில் பாற்பண்ணை விவசாயிகளின் வாழ்வாதாரத்தின் மீதான எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது விவசாயிகளை பாதுகாப்பதே தமது நோக்கமாகும், என Pelwatte Dairy Industries இன் முகாமைத்துவ பணிப்பாளர், அக்மால் விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய இக்கட்டான நிலைமையினை கருத்தில் கொண்டு, Pelwatte தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுடன், உற்பத்தி செயல்பாட்டின் போது கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவுள்ளது. இதன் மூலம் ஊழியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களும் பாதுகாக்கப்படுகின்றனர் என்பதை உறுதி செய்வதாகவும் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் விநியோக சங்கிலி முகாமைத்துவம் தொடர்பில் விளக்கமளித்த, Pelwatte இன் பிரதி பொது முகாமையாளர் (விநியோக சங்கிலி மற்றும் சந்தைப்படுத்தல்), சுசந்த மல்வத்தை, உலகெங்கிலும் உள்ள பல பால் மற்றும் பால் உற்பத்தி நாடுகள் தொற்றுநோய் நிலைமையின் கீழ் உள்ளதையும் மீறி, கடினமான காலங்களில் நாங்கள் எமது தயாரிப்பு ஓட்டத்தை பராமரிப்பது மற்றும் விநியோகச் சங்கிலியுடன் தொடர்ந்து செயல்படுவது மிக அவசியமாகும். வேகமாக வளர்ந்து வரும் உள்ளூர் பாற்பண்ணை உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாக, பால் பொருட்களை உற்பத்தி செய்யும் செயன்முறையை தொடர்வதோடு, இந்த தயாரிப்புகளை வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தவிர்த்து இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கிறோம், என்றார்.

உள்ளூர் பாற்பண்ணை விவசாயிகளுக்கு கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் நிறுவனத்தின் தேவைக்கேற்ப அவர்களால் வழங்க இயலாமை போன்ற கூடுதல் சூழ்நிலைகள் காரணமாக, நிறுவனத்தின் முயற்சியையும் மீறி பால் சேகரிப்பதில் தாம் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக பாலுற்பத்தி நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

பலவிதமான பாலுற்பத்திகளை சந்தைப் படுத்தும் இந்நிறுவனம் தனது குளிரூட்டப்பட்ட மற்றும் உறையவைக்கப்பட்ட உற்பத்திகளின் போது 100% பால் கொழுப்பினை மாத்திரமே பயன்படுத்துகிறது. அதேபோல் எவ்விதச் செயற்கை சுவையூட்டிகள் அல்லது சேர்க்கைகளும் இல்லாமல் பால்மா உற்பத்தியினையும் மேற்கொள்கிறது. Pelwatte இன் முழு பால்மா உற்பத்திச் செயன்முறையும் 24 மணி நேரத்திற்குள் முடிவடையும் பொறிமுறையின் மூலம் தயாரிக்கப்படுகிறது. மேலும், வெறும் 72 மணி நேரத்திற்குள்தயாரிப்புகள் நுகர்வோர் மற்றும் வர்த்தக நிலையங்களைச் சென்றடைவதையும் உறுதிசெய்வதாக நிறுவனம் குறிப்பிடுகிறது.

இலங்கையின் சர்வதேச விமானநிலையங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுப்பு

விமானநிலையம்; விமானசேவைகள் நிறுவனம் தெரிவிப்பு

(நா.தனுஜா)

இலங்கையின் சர்வதேச விமானநிலையங்களில் சுகாதார அமைச்சு மற்றும் அதிகாரசபைகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று உரிய மருத்துவப் பொறிமுறைகளுக்கு அமைவாகவே பயணிகளைத் தொற்றுத்தடுப்புக் கண்காணிப்பு நிலையங்களுக்கு அனுப்பும் செயன்முறைகளும் முன்னெடுக்கப்பட்டன. எனவே உறுதிசெய்யப்படாத தவறான தகவல்களை சமூகவலைத்தளங்களில் பரப்புவதன் மூலம் மக்களைப் பிழையாக வழிநடத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், தன்னலம் பாராது நாட்டுக்காக சேவையாற்றும் விமானநிலைய ஊழியர்களுக்கு மதிப்பளிக்குமாறும் விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் நிறுவனம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

விமானநிலையம், விமானசேவைகள் நிறுவனம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் ஆகியவற்றின் சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் பிரிவினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணிகளைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கண்காணிக்கும் செயற்பாடு தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பல்வேறு தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. எனவே அதுகுறித்துத் தெளிவுபடுத்தவதற்கு விரும்புகின்றோம். நாம் மக்களுக்கான விமானசேவையை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் சேவையில் ஈடுபடும் அனைவருக்கும் உரிய சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டிருப்பதுடன், உரிய முன்னெச்சரிக்கை நடைமுறைகள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளன. கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் முழு உலகையுமே அச்சுறுத்திக்கொண்டு இருக்கும் நிலையில், ஒரு தேசிய இலக்கை முன்நிறுத்தி எமது ஊழியர்கள் அனைவரும் தமது உயிரைப் பணயம்வைத்து, ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில் இலங்கையின் சுகாதார அதிகாரக் கட்டமைப்புக்களினால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். ஈரான், இத்தாலி மற்றும் தென்கொரியாவிலிருந்து இலங்கைக்கு வரும் விமானங்கள், அல்லது 14 நாட்களுக்கு முன்புவரை (மார்ச் 14 ஆம் திகதியிலிருந்து) அந்த நாடுகளுக்குப் பயணஞ்செய்திருந்தவர்கள் நாட்டிற்குள் நுழைவது கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து தடை செய்யப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியிலிருந்து பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து, சுவீடன் மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகளிலிருந்து விமானங்கள் இலங்கைக்கு வருகை தருவது மற்றும் மார்ச் 15 இலிருந்து 14 நாட்களுக்கு முன்னர் அந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டவர்கள் நாட்டிற்குள் நுழைவது இடைநிறுத்தப்பட்டது.

அதேவேளை மேற்குறிப்பிட்ட நாடுகளிலிருந்து மார்ச் மாதம் 15 ஆம் திகதி காலை 11 மணி முதல் நள்ளிரவு 12 மணிக்குள் இலங்கைக்கு வருகைதந்த பயணிகள் அனைவரையும் தொற்றுத்தடுப்புக் கண்காணிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அதே தினத்தில் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் அனைத்து சர்வதேச விமானப்போக்குவரத்து செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டன.

ஐக்கிய இராச்சியம், பெல்ஜியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து புறப்படும் விமானங்கள் அல்லது அந்தநாடுகளுக்கு மார்ச் 16 ஆம் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னதாகப் பயணஞ்செய்தவர்கள் நாட்டிற்குள் நுழைவது மார்ச் 16 நள்ளிரவு 12 மணியிலிருந்து தடைசெய்யப்பட்டது. இந்நாடுகளில் இருந்து மார்ச் 15 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 16 ஆம் திகதி 12 மணிவரை நாட்டிற்கு வருகை தந்தவர்களைத் தொற்றுத்தடுப்புக் கண்காணிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த மார்ச் 17 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியிலிருந்து கட்டார், கனடா, பஹ்ரேனிலிருந்து பயணிகள் இலங்கைக்கு வருவதும், 17 ஆம் திகதிக்கு முன்னர் 14 நாட்கள் அந்நாடுகளுக்குச் சென்றுவந்தவர்கள் நாட்டிற்குள் நுழைவதும் தடை செய்யப்பட்டது. இறுதியில் இலங்கைக்கான அனைத்து சர்வதேச பயணிகள் விமானசேவைகளும் மார்ச் மாதம் 19 ஆம் திகதி அதிகாலை 4 மணி தொடக்கம் 25 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை இடைநிறுத்தப்பட்டன. பின்னர் அது 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, தற்போது ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் சர்வதேச விமானநிலையங்களில் சுகாதார அமைச்சு மற்றும் அதிகாரசபைகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று உரிய மருத்துவப் பொறிமுறைகளுக்கு அமைவாகவே பயணிகளைத் தொற்றுத்தடுப்புக் கண்காணிப்பு நிலையங்களுக்கு அனுப்பும் செயன்முறைகளும் முன்னெடுக்கப்பட்டன. எனவே உறுதிசெய்யப்பட்டாத தவறான தகவல்களை சமூகவலைத்தளங்களில் பரப்புவதன் மூலம் மக்களைப் பிழையாக வழிநடத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், தன்னலம் பாராது நாட்டுக்காக சேவையாற்றும் மற்றும் விமானநிலைய ஊழியர்களுக்கு மதிப்பளிக்குமாறும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தியவசிய பொருட்களை

PickMe App மூலம்

HNB டெபிட் மற்றும் க்ரெடிட் அட்டையை உபயோகித்து கொள்வனவு செய்வோருக்கு கட்டணமற்ற விநியோகம்

- HNB டெபிட் மற்றும் க்ரெடிட் அட்டையை உபயோகித்து Pick Me App மூலம் அத்தியவசிய பொருட்களை கொள்வனவு செய்யும் போது, விநியோக கட்டணம் உட்பட முழு கொள்வனவு கட்டணத்திலிருந்து ரூபா250/= முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
- இச் சேவை தெரிவு செய்யப்பட்ட பகுதிகளுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது இப்பகுதிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு Pick Me App இனை பிரவேசிக்கவும்.

*இச்சலுகை ஏப்ரல் மாதம் 10ம் திகதி வரை 4 விநியோகங்களுக்கு மட்டுமே

COMRE

HNB Cards
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
PickMe™

ஃபிச் ரேட்டிங்: AA-(lka)
ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.
Hatton National Bank PLC - PQ 82

VIRAKESARI
வீரகேசரி
2020 ஏப்ரல் 02 ஆம் திகதி வியாழக்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) பிரைவேட் லிமிட்டெட்,
267, ராஜ மாவத்தை, ஏக்கல, ஜா–எல. Tel. : 011 7522750, 011 7522751, 011 7522754, 011 7522755
Fax : 011 7522752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

மருத்துவ துறையினரின் எச்சரிக்கை

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்று மிகவும் அபாயகரமான நிலையில் பரவி வருகின்ற நிலையில் இலங்கையிலும் மிகவும் அவதானமாக செயற்படவேண்டிய கால கட்டத்தில் இருக்கின்றோம். தற்போதைய நிலையில் சீனாவை தவிர ஏனைய பல்வேறு நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று மிகவும் அபாயகரமான முறையில் பரவி வருகின்றது.

நேற்றுக் காலை வரை உலகில் 850000 பேர் இந்த தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 42000 பேர் இந்த வைரஸ் காரணமாக உயிரிழந்துள்ளனர். இத்தாலி, ஸ்பெயின், அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளிலேயே அதிகளவு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இத்தாலி, ஸ்பெயின் மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று தாக்கம் மோசமான நிலையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. அமெரிக்காவில் மட்டும் 184 ஆயிரம் பேர் இந்த தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அமெரிக்காவில் அதிகளவான தாக்கம் இதனால் ஏற்படும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உலகில் நிலைமை இவ்வாறு இருக்கையில் தற்போதைய சூழலில் இலங்கையிலும் இன்னும் நாடு கொரோனா வைரஸ் தொற்று பரவல் விடயத்தில் அபாயகரமான நிலையிலேயே இருப்பதாக மருத்துவத்துறையினரால் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது. விசேடமாக அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டிய காலப்பகுதி என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையை பொறுத்தவரையில் இதுவரை 142 பேரை இந்த கொரோனா வைரஸ் தொற்று தாக்கியுள்ளது. அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 17 பேர் முற்றாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 123 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதுமட்டுமன்றி நாட்டின் பல வைத்தியசாலைகளிலும் 173 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்ட அவதான சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுமே 20 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்தவகையில் பார்க்கும் போது இலங்கையில் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதை காண்கின்றோம். இந்த நிலையில் அடுத்துவரும் நாட்கள் தொடர்பில் வைத்திய பரிசோதனை சபையின் பணிப்பாளர் வைத்தியர் ஜெயருவான் பண்டார முக்கிய பல்வேறு விடயங்களை முன்வைத்திருக்கின்றார்.

உலக நாடுகளில் ஆரம்பத்தில் அதாவது கொரோனா தொற்றாளர்கள் குறித்து முதல் வாரங்களில் மிகவும் மெதுவான உயர்வு நிலை காணப்பட்ட போதிலும் பின்னர் மிக வேகமாக அந்த நாடுகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரண வீதமும் அதிகரித்தது. உலக சுகாதார மையத்தின் கொரோனா வரைபட நிரலை பார்க்கையில் இன்று மிகவும் உயரிய தாக்கத்தை அதுகாட்டுகின்றது. அதேபோன்று இலங்கையிலும் அவ்வாறான அச்சுறுத்தல் உள்ளது. முதல் சில வாரங்களில் மிகவும் மெதுவாக கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டாலும் கூட அடுத்த ஒரு இரு வாரங்களில் மிக வேகமாக பரவக்கூடிய நிலைமை இருப்பதாக நாம் கருதுகின்றோம் என்று வைத்திய பரிசோதனை சபையின் பணிப்பாளர் வைத்தியர் ஜெயருவான் பண்டார கூறியிருக்கின்றார்.

இந்நிலையில் இதனை சாதாரண விடயமாக கருத முடியாது. இது நாட்டிற்கு மிகவும் அச்சுறுத்தலான விடயமாகும். இதற்கான காரணம் எமது சமூகத்தில் கலந்துள்ள கொரோனா தொற்றாளர்கள் இன்று கொரோனா வைரஸை சமூகத்தில் பரப்ப ஆரம்பித்துள்ளனர். ஆகவேதான் அடுத்த இரு வாரங்களை மிகவும் அச்சுறுத்தலான காலமாக நாம் கருதுகின்றோம். ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே இதிலிருந்து விடுபட வேண்டுமானால் அதில் பிரதான பங்களிப்பை பொதுமக்களே முன்னெடுக்க வேண்டும். தாமாக நோயினைக் காவும் செயற்பாடுகளை கைவிட்டு மிகவும் அவதானமாக இருக்க முடியுமென்றால் அதுவே சிறந்த வழிமுறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதன்படி எதிர்வரும் இரண்டு வாரங்கள் என்பது மிகவும் அவதானமான மற்றும் விழிப்புடன் இருக்க வேண்டிய காலமாக காணப்படுகின்றமை தெளிவாகின்றது. மிக முக்கியமாக பொது மக்கள் இதன் பாரதூரத்தன்மையை உணர்ந்து இந்த அச்சுறுத்தலிலிருந்து மீள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகும். இதேவேளை எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் கவனமாகவும் பொறுப்புடனும் அனைவரும் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஊரடங்கு சட்டத்தை நீடிப்பது தொடர்பாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் யோசனைகளை முன்வைத்துள்ளது.

இலங்கையில் 80 வீதம் சமூக இடைவெளி பேணப்படுகிறது. முழுமையாக ஒரு கிராமத்தை அல்லது நகரத்தை தனிமைப்படுத்தல் மிக அவதான மட்டத்திலுள்ள பிரதேசங்களை அடையாளப்படுத்தி தொடர்ச்சியாக ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்தல், ஏனைய பிரதேசங்களில் தற்காலிகமாக ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பித்தல் என்ற 3 கட்டங்களில் சமூக இடைவெளி பேணப்படுகிறது. சமூகத்தில் 80 வீத சமூக இடைவெளியை பேணுவதில் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகின்றோம். அத்தோடு வங்கி சேவை, மருந்து மற்றும் உணவு உள்ளிட்ட சேவைகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களை மேலும் வலுப்படுத்த வேண்டும். அத்தோடு ஊரடங்கு சட்டத்தை மீறமலிருப்பதற்கும் மாவட்டங்களுக்கு பயணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார சந்தை, மீன்பிடித்துறைமுகம், மெனிங் சந்தை மற்றும் தேசிய விற்பனை நிலையம் போன்ற முக்கிய பொது இடங்களில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். அத்தோடு ஒவ்வொருவரும் தனிநபர் நலன் தொடர்பில் தொடர்ந்தும் அவதானம் செலுத்த வேண்டும். மேலும் முகக்கவசம் தொடர்பில் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு முறையாகப் பின்பற்றினால் வைரஸ் பரவலில் அடுத்த கட்டத்திற்கு செல்வதைத் தவிர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மனித மற்றும் ஏனைய திறன்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கான விசேட வைத்தியசாலைகள் நிறுவப்பட வேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அதேபோன்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்களோ ஏனைய சுகாதாரத்துறை பணியாளர்களோ தொற்றுக்குள்ளானால் பாரிய மனிதவள குறைபாடு ஏற்படும். எனவே வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அத்தோடு வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களை 15 நிமிடங்களில் கண்டறிவதற்காக ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை முறைமையை இலங்கையிலும் அறிமுகப்படுத்தினால் மிகச் சிறந்ததாக அமையும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தவகையில் இலங்கையை பொறுத்தவரையில் அடுத்து வரும் இரண்டு வாரங்கள் என்பது மிகவும் முக்கியமானதாகும். ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் அந்த விதிமுறைகளை மதித்து செயற்படவேண்டும். மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையில் இது சவாலான ஒன்றாகவே உள்ளது. ஆனால் தற்காலிகமாக இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் மக்கள் அனைவரும் செயற்பட வேண்டும். சுகாதாரத் துறையினர் வெளியிட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் மிகவும் அபாயகரமானவை என்று சுகாதார துறை சார்ந்தோர் முன்வைத்துள்ள விடயத்தை எக்காரணம் கொண்டும் அலட்சியம் செய்துவிடக்கூடாது. அதேபோன்று அதிகாரத்தில் இருக்கின்ற தரப்பினரும் மக்களின் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருள் தேவைகள் தொடர்பில் உரிய பொறிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்பதனை வலியுறுத்துகின்றோம்.

கொரோனா வைரஸ் தாக்கமானது நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகின்றது. மருத்துவ உலகிற்கு பெரும் சவாலாக விளங்கும் கொரோனாவை உலகில் இருந்தும் விரட்டியடிக்கும் நோக்கில் முன்னெடுப்புகள் இடம்பெற்று வருகின்றபோதும் உரிய சாதக விளைவுகளை பெற்றுக் கொள்வதென்பது மிகவும் கடினமான ஒரு காரியமாகவே காணப்படுகின்றது. கொரோனா மனித குலத்தை வேரறுத்து வருகின்ற நிலையில் கொரோனாவை வேரறுக்க வேண்டியது மிகவும் அவசியமாகவும் அவசரமாகவும் மேற்கொள்ள வேண்டிய ஒரு விடயமாக உள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உலகளாவிய ரீதியில் ஒன்பது இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உள்ளாகியுள்ளனர். நாற்பதாயிரத்துக்கும் அதிகமானவர்களை கொரோனா இதுவரை காவுகொண்டிருக்கின்றது. இன்னும் பல உயிர்களை கொரோனா காவுகொள்ளக் காத்திருப்பதும் வெளிப்படையாகவே தெரிகின்றது. இத்தாலியில் கொரோனாவின் தாக்கம் இப்போது அதிகமாக உள்ள நிலையில் எதிர்காலத்தில் அமெரிக்க, இத்தாலி உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளையும் மிஞ்சிய நிலையில் அதிகளவிலான பாதிப்பினை எதிர்கொள்ளும் அபாயமுள்ளதாகவும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆரம்பத்தில் கொரோனா வைரஸை சைனா வைரஸ் என்று குறிப்பிட்டு அசட்டை செய்திருந்தார். கொரோனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்துவது குறித்து அவர் தொடக்கத்தில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இதனாலேயே கொரோனா வைரஸ் தாக்கமானது இப்போது அமெரிக்காவில் வேகமாகப் பரவி வருகின்றது.

இந்த நிலைய தொடருமானால் அமெரிக்கா விரைவில் மிகப்பெரும் பாதிப்பினை எதிர்கொள்ளும் அபாயமுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு நிலையினைக் காண முடிகின்றது. இன்னும் இரண்டு வார காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளதும் தெரிந்த விடயமேயாகும். இதேவேளை ஊரடங்கு சட்டத்தினை அடிக்கடி தளர்த்துவதன் காரணமாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக்கூடிய அபாயநிலை காணப்படுவதாகவும் எனவே அரசாங்கம் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டத்தினை அமுல் படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கைகள் பலவும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் கொரோனாவை கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றபோதும் சிலரின் பிழையான செயற்பாடுகளும் ஒத்துழையாத தன்மையும் வருத்தம் தருவதாக உள்ளது. மருத்துவ துறையைச் சேர்ந்தவர்களும் பாதுகாப்புத் தரப்பினரும் தமது உயிரைப் பணயம் வைத்து பொதுமக்களின் நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் செயற்பட்டு வருகின்றார்கள். இந்நிலையில் அவர்களின் மேலான செயற்பாடுகளுக்கு நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குவது மிகவும் அவசியமாகும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

கொரோனாவிற்கு இன்னும் உரிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத நிலையில் இது விரைவில் சாத்தியமாக வேண்டும் என்பது உலக மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.இதனிடையே ஜப்பான் கொரோனாவை கட்டுப்படுத்தும் நோக்கில் மருந்துத்தொகுதி ஒன்றினை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளதும் நீங்கள் அறிந்த விடயமேயாகும். அத்தோடு நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் நோக்கில் ஆயுர்வேத மருந்துகள், கசாயங்கள் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் ஆகியோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

கொரோனா ஒரு கொடிய சக்தியாக இப்போது உருவெடுத்துள்ளது. சமூகம், பொருளாதாரம், இயல்பு வாழ்க்கை, உளவியல் நிலைமைகள், கலாசாரம் மற்றும் தொடர்புகள் போன்ற பலவிடயங்களிலும் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கின்றது. உலகம் இனி எப்போது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் என்ற ஏக்கம் ஒவ்வொருவரிடமும் அதிகமாகவே காணப்படுகின்றது. இந்த ஏக்கம் நிறைவேற இன்னும் எத்தனை காலம் காத்திருக்க வேண்டிவரும் என்றும் தெரியவில்லை.

கொரோனா பற்றி நாம் இப்போது அதிகமாகவே பேசுகின்ற நிலையில் கொரோனா உலகிற்கு பாடங்கள் பலவற்றையும் கற்றுக்கொடுத்திருப்பதாக ஏற்கனவே புத்திஜீவிகள் வலியுறுத்தி இருந்தும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது. ஒரு நாடு அபிவிருத்தி அடைவதற்கும் மேலும் பல நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கும் அந்நாட்டு மக்களிடையே ஐக்கியம், சமாதானம், விட்டுக்கொடுப்பு, இணக்கப்பாடு, நல்லிணக்கம் என்பன அவசியமாகும். இந்த நல்ல விடயங்களை கொரோனா இப்போது ஞாபகப்படுத்தி இருக்கின்றது. கொரோனாவை வெற்றிகொள்ள நாட்டு மக்களிடையே ஐக்கியமும் ஒத்துழைப்பும் தேவை என்று வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில் கொரோனாவுக்கு மட்டுமன்றி எல்லா விடயங்களுக்கும் இது அவசியம் என்பதை நாடு நன்றாகவே உணர்ந்து கொண்டுள்ளது. அரசியல்வாதிகள் இதை உணர்ந்து ஐக்கியத்திற்கு வலுசேர்க்க வேண்டும்.இனவாதத்துக்கும் பிரிவினைகளுக்கும் சாவுமணி அடிக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்று குறித்து அறிந்து கொள்ளப்பட்ட நிலையில் சில உலக நாடுகள் துரித நடவடிக்கையினை மேற்கொண்டு தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன. இது ஒரு சிறந்த முன்னுதாரணம் ஆகும்.இந்த முன்னுதாரணத்தை உலகின் ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும். இதனால் இழப்புகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.

துரைசாமி நடராஜா

சுத்தம் தொடர்பாக இப்போது சற்று அதிகமாகவே பேசப்பட்டு வருகின்றது. சுத்தமாக இருந்தால் கொரோனாவை வெற்றி கொள்ள முடியும் என்று பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கொரோனா வந்ததால் தான் சுத்தம் பலருக்கு ஞாபகத்திற்கு வந்திருக்கின்றது. இந்த நிலை மாற்றமடையவும் வேண்டும்.சுத்தம் எப்போதும் அவசியம் என்பதனை ஒவ்வொருவரும் விளங்கிச் செயற்படுதல் வேண்டும்.

எனவே கொரோனா வானது, சுத்தமாக இருந்தால் சுகமாக வாழலாம் என்பதனை மறந்திருந்த உலக மக்களுக்கு மீண்டும் ஒரு முறை நினைவூட்டி இருக்கின்றது. ஒவ்வொரு கலாசாரத்திலும் சுதேச அறிவு காணப்படுகின்றது. இந்த சுதேச அறிவு என்னவென்று தேடவேண்டிய சந்தர்ப்பத்தினை கொரோனா உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. சுதேச அறிவின் அடிப்படையில் எமது வாழ்க்கைக்கு தேவையானவற்றை நாம் உரியவாறு பயன்படுத்த வேண்டும். எமது சுதேச அறிவிலும் பொருளுண்டு என்ற பாடத்தினை கொரோனா கற்றுக்கொடுத்திருக்கின்றது.

மேலைத்தேய கலாசாரத்தில் மூழ்கிப்போன நிலையில் எம்மவர்கள் எமது கலாசாரத்தின் பெருமையையும் முக்கியத்துவத்தினையும் மறந்து செயற்பட்டு வந்தனர். இந்த நிலையில் எமது கலாசாரம் எந்தளவிற்கு மேலானது என்பதனையும் கொரோனா வலியுறுத்தத் தவறவில்லை. கும்பிடும் கலாசாரம் இதில் முக்கியமானதாகும்.

கோளமயமாக்கல் செயற்பாடுகள் இப்போது வேகமாக இடம்பெற்று வருகின்றன. கோளமயமாக்கலின் கீழ் ஒரு நாடு இன்னொரு நாட்டில் தங்கி இருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்படுவதாகவும் விமர்சனங்கள் இருந்து வருகின்றன. கோளமயலாக்கலின் கீழ் நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் அதிகரித்துள்ளன. மக்கள் வருகையும் அதிகரித்துள்ளது. இந்நிலைமைகள் கொரோனா மற்றும் எய்ட்ஸ் போன்ற பல நோய்கள் பரவுவதற்கு உந்துசக்தியாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சுற்றுலா பயணிகளின் வருகையால் ஏற்படும் பாதிப்புக்கள் கருத்தில் கொள்ளப்படாது அவர்களது வருகையால் கிடைக்கும் வருமானம் தொடர்பிலேயே உலக நாடுகள் கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றமையும் தெரிந்த விடயமாகும்.

கோளமயமாக்கல் மற்றும் மேல்நாட்டு சிந்தனை என்பன அவசியமானது என்றபோதும் அவற்றில் பயனுள்ளவற்றையே நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு பாடத்தையும் கொரோனா எமக்கு கற்றுக்கொடுத்துள்ளது. கோளமயமாக்கலின் கீழ் அரசாங்கத்தின் வகிபாகம்குறைவடைந்துள்ள நிலையில் தனியார் ஆதிக்கம் மேலோங்கி காணப்படுகின்றது. இந்த நிலையில் நாட்டின் அபிவிருத்தியிலும் மக்கள் நல செயற்பாடுகளிலும் அரசாங்கத்தின் வகிபாகத்தினை கொரோனா உணர்த்தி இருக்கின்றது. தனியார் துறையினரால் எல்லாவற்றையும் மேற்கொள்ள முடியாது என்பதையும் கொரோனா உணர்த்தி இருக்கின்றது.கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் இப்போது எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது என்பதே சகலரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கொரோனா என்பது இலங்கை உள்ளிட்ட சில உலக நாடுகளுக்கு புதிய அனுபவமாகும். மண்சரிவு, வெள்ளம், புயல், குண்டு வெடிப்பு, இடி, மின்னல் போன்றவற்றால் ஏற்படும் அனர்த்தங்களின் போது எவ்வாறு நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். ஆனால் கொரோனா வைரஸ் தாக்கம் போன்றவற்றிற்கோ அல்லது புவிநடுக்கம் போன்ற நிலைமைகளுக்கோ எவ்வாறு முகம்கொடுப்பது? என்பது குறித்து நாம் சிந்திக்கத் தவறியுள்ளோம். கொரோனா இதனை நமக்கு ஞாபகப்படுத்தி இருக்கின்றது. தாய்வான் போன்ற நாடுகள் தொற்றுக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டு வருகின்றன. அந்நாட்டு மக்களை இத்தகைய விடயங்களில் தயார்ப்படுத்தி இருக்கின்றன. இலங்கைக்கும் இது ஒரு பாடமாகும். இதனடிப்படையில் இலங்கையும் அனர்த்தங்கள் பலவற்றுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசியல் ரீதியான, மதரீதியான, மொழிரீதியான, இனரீதியான துருவமயமாக்கல் நடவடிக்கைகளை கைவிட்டு அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டு சவால்களை வெற்றிகொள்ள வேண்டும்.

கொரோனா வைரஸை துரத்தியடிப்பதற்காக கை கழுவுதல் உள்ளிட்ட பல்வேறு சுகாதார செயற்பாடுகளையும் மேற்கொள்ளுகின்றோம். இதனடிப்படையில் விரைவில் கொரோனாவை உலகத்தில் இருந்து நாம் கை கழுவிவிட வேண்டும்.இல்லையேல் மனிதகுலம் பல்வேறு பாதக விளைவுகளையும் சந்திக்க வேண்டி வரும் என்பதை மறுப்பதற்கில்லை.

உலகச் செய்திகள்

கொரோனாவினால் திக்குமுக்காடும் உலகம் அதிகரித்துக்கொண்டிருக்கும் உயிரிழப்புகள்

உலகளவில் கடைசி 7 தினங்களில் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை 100% அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது,

உலக அளவில் கொரோனா வைரஸுக்கு பலியானோர் எண்ணிக்கை 44 ஆயிரத்தை கடந்துவிட்டது. நேற்று மாலை நிலைவரப்படி 44,136 பேரை கொரோனா வைரஸ் பலியாக்கியிருக்கிறது. அதே போல் கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை 8.76 இலட்சத்தைக் கடந்துள்ளது. சுமார் ஒருலட்சத்து 88 ஆயிரம் பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் 386 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது; இதுவரை 38 பேர் மரணமடைந்துள்ளனர். 132 பேர் குணமடைந்துள்ளனர்,

இத்தாலியில் மட்டும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளது. ஸ்பெய்ன் நாட்டில் 8 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். கிட்டதட்ட 96 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1 இலட்சத்து 88 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்தை தாண்டியது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகளின்படி, அமெரிக்காவில் கொரோனா வைரஸ் காரணமாக இறப்பவர்களின் எண்ணிக்கை 4,076 ஐ எட்டியுள்ளது, இது சனிக்கிழமை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையை விட இரு மடங்காகும். சனிக்கிழமை இறந்தவர்களின் எண்ணிக்கை 2,010 ஆக இருந்தது.

உலகளவில் கடைசி 7 தினங்களில் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை 100 அதிகரித்துள்ளது.

25ஆம் திகதி 21,282 ஆக இருந்த உயிரிழப்பு தற்போது 43,522 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது,

சி.என்.என். தொகுப்பாளருக்கு கொரோனா தொற்று

சி.என்.என். செய்தி தொகுப்பாளர் கிறிஸ்டோபர் குவாமோவுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 200இற்கும் அதிகமான நாடுகளுக்கு பரவியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவிலும் கொரோனா வைரஸ் கடுமையாக பரவி வருகின்றது. அங்கு வைரஸ் தொற்று அதிகரித்து வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில், சி.என்.என். செய்தி தொகுப்பாளர் கிறிஸ்டோபர் குவாமோவுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் எதிர்கொள்ளும் சவாலான நெருக்கடி

கொரோனா குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகம் எதிர்கொள்ளும் மிகவும் சவாலான நெருக்கடி கொரோனா வைரஸ் தொற்றுநோய் என ஐ.நா. பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் முழுவதையும் கொரோனா வைரஸ் ஒரு சேர பீதியில் ஆழ்த்தியுள்ளது. கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது உலக வல்லரசு நாடான அமெரிக்கா என்பதிலிருந்தே, அந்த நோயின் தீவிரத்தை உணர முடியும். வளர்ந்த நாடுகளில் மிகப் பெரும் தாக்கத்தை கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ளது. வளர்ந்து வரும் நாடுகளும் கொரோனாவின் பிடியிலிருந்து தப்பவில்லை. இந்த சூழலில், 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் மிகவும் சவாலான சுகாதார நெருக்கடியாக கொரோனா தொற்று உள்ளது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், 'ஐக்கிய நாடுகள் பேரவையின் 75 ஆண்டு கால வரலாற்றில் இது போன்ற ஒரு உலக சுகாதார நெருக்கடியை நாங்கள் எதிர் கொள்ளவில்லை. சுகாதார நெருக்கடியை விட மிகவும் தீவிரமானது. இது ஒரு மனித நெருக்கடி என்றார்.

ஐக்கிய நாடுகள் பேரவை நிறுவப்பட்ட பிறகு, மிக மோசமான உலக நெருக்கடியாக, ஏன் கொரோனா பெருந்தொற்றை நீங்கள் கருதுகிறீர்கள் என்று குட்டரெசிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த குட்டரெஸ், 'ஒரு புறம் உலக மக்கள் அனைவருக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. இன்னொரு புறம் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்துகிறது' என்றார். மேலும், இந்த பெருந்தொற்றை முடிவுக்குக் கொண்டு வர உடனடியாக ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை எனவும் பரிசோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை ஆகிய சுகாதார திறனை அதிகரிக்க வேண்டும் எனவும் ஐ.நா. பொதுச் செயலாளர் வலியுறுத்தினார்.

வான்கோவின் புகழ்பெற்ற ஓவியங்கள் திருட்டு

சிங்கர் லோரன் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த வின்சென்ட் வான்கோவின் வசந்தகால தோட்டம் ஓவியம் உட்பட பல அரிய பொக்கிஷங்களை முகமூடி கொள்ளையர்கள் சிலர் திருடிச் சென்றுவிட்டனர். இதனையடுத்து பொலிஸார் அவர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.

நெதர்லாந்தைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் வின்சென்ட் வான்கோ. இவர் கடந்த 1884ஆம் ஆண்டு வசந்தகால தோட்டம்



என்ற பெயரில் வரைந்த ஓவியம் உலக அளவில் புகழ் பெற்றதாகும். இந்த ஓவியம் தலைநகர் அம்ஸ்டர்டாமில் உள்ள சிங்கர் லோரன் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப் பட்டு வந்தது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் காரணமாக இந்த அருங்காட்சியகம் கடந்த 12ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது. முகமூடி கொள்ளையர்கள் சிலர் அருங்காட்சியகத்தின் ஜன்னல் கண்ணாடியை உடைத்து உள்ளே நுழைந்துள்ளனர்.

அவர்கள் வின்சென்ட் வான்கோவின் வசந்தகால தோட்டம் ஓவியம் உட்பட பல அரிய பொக்கிஷங்களை திருடிச் சென்றுவிட்டனர். பொலிஸார் அவர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்த வைத்தியருக்கு கொரோனா தொற்று

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்த வைத்தியருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொஸ்கோவில் கொரோனா நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ரஷ்ய ஜனாதிபதி புட்டின் சென்றார்.

அங்கு பணிபுரியும் வைத்தியர்கள், செவிலியர்கள் என பல்வேறு மருத்துவ ஊழியர்களிடம் அவர் ஆலோசனை நடத்தினார். அப்போது அந்த மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டென்னிஸ் புரோட்சென்கோவிடமும் அவர் பேசினார்.

டெனிசிடம் பேசும்போது ஜனாதிபதி புட்டின் எந்த வித முகமூடியும் அணியாமலும், கைகளை குலுக்கியும் சாதாரணமாக நடந்துகொண்டார். இந்நிலையில், புட்டினுடன் பேசிய மருத்துவ தலைமை வைத்தியர் டென்னிஸ் புரோட்சென்கோவுக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து டென்னிஸ் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். ஆனால் தற்போது அவரது நிலைமை சீராக உள்ளதாக தகவல் வெளியா

கியுள்ளது. இதற்கிடையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தொடர்ந்து மருத்துவ பரிசோதனைகள் செய்துவருவதாகவும் அவர் நல்ல உடல்நிலையில் இருப்பதாகவும் கிரெம்ளின் மாளிகை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

20 அழகிகளுடன் தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொண்ட மன்னர்

கடும் கோபத்தில் தாய்லாந்து மக்கள்

கொரோனாவுடன் தாய்லாந்து மக்கள் போராடி வரும் நிலையில், அந்நாட்டு மன்னர் ஜேர்மனியில் ஒரு ஹோட்டலில் 20 அழகிகளுடன் தன்னைத் தானே தனிமைப்படுத்திக்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மன்னரின் இந்த செயற்பாட்டுக்கு தாய்லாந்து மக்கள் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

உலகமும் முழுவதும் கொரோனா வைரஸ் பரவலை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், மறுபுறம் தாய்லாந்தின் மன்னர் மகா வஜிரலோங்க்கோர்ன், ஜேர்மனியில் ஆடம்பரமான ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளார்.

ஆனால், அவர் தனிமையில் தனியாக இல்லை. அவருடன் 20 அழகிகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அரண்மனை போன்ற அந்த ஹோட்டலுக்கு, அவர் தனது பல ஊழியர்களையும் அழைத்துச் சென்றுள்ளார். அதே நேரத்தில், கொரோனாவின் பயம் காரணமாக, அவர் தனது குடும்ப உறுப்பினர்கள் சிலரை திருப்பி அனுப்பியுள்ளார்.

'டெய்லி மெயில்' பத்திரிகையின் கூற்றுப்படி, 'ராஜா வஜிரலோங்க்கோர்ன் கடந்த பெப்ரவரி முதல் ஜேர்மனியில்தான் இருந்து வருகிறாராம். கொரோனா நெருக்கடியை அடுத்து ஜேர்மனியின் ஆல்பைன் ரிசார்ட்டில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மன்னர் தனது ஊழியர்களுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

'தி வீக்' என்ற பத்திரிகை, '67 வயதான ராஜாவுடன் 20 பெண்கள் மற்றும் ஏராளமான ஊழியர்கள் ஹோட்டலில் தங்கியுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

வைரஸின் தாக்கம் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, அப்பகுதியில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் விருந்தினர் இல்லங்களை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், விருந்தினர்கள் ஒரே குழுவாக இருப்பதால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

கொரோனா வைரஸ் ஜனவரி 12ஆம் திகதி முதல் தாய்லாந்தில் பரவி வருகிறது. அதன் பின்னர் இன்றைய நிலையில் 1,524 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 9 பேர் இறந்துள்ளனர்.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் மன்னர் ஜேர்மனிக்கு தப்பிச் சென்றது குறித்து நாட்டு மக்கள் கோபத்தில் உள்ளனர். சமூக வலைத்தளங்களிலும் மக்கள் மன்னரை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

ENCL Bookshelf

உங்கள் அபிமான எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின்
அனைத்து பதிப்புக்களையும் பார்வையிட
இங்கே அழுத்தவும்

https://bookshelf.encl.lk

தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம்

தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணங்களையும் சுகாதாராப் பாதுகாப்பினையும் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஹட்டன் டிக்கோயா வனராஜா ஆலயத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று புதன்கிழமை (01 முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை மலையக தன்னெழுச்சி இளைஞர் குழு ஒழுங்கு செய்திருந்தது, இதன்போது சுகாதார அறிவுறுத்தலுக்கமைய ஒரு மீற்றர் இடைவெளியில் நின்றவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணங்களைப் பெற்றுக்கொடு, தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய், கொழும்பு வாழ் இளைஞர்களுக்கு உடனடியாக நிவாரணங்களை பெற்றுக்கொடு, இளைஞர்களின் தேவைகளை பூர்த்திசெய் போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தன்னெழுச்சி இளைஞர் குழுவின் தலைவர் கணேசன் உதயகுமார் கருத்து தெரிவிக்கையில்,

மலையக மக்கள் வறட்சி காரணமாகவும் ஊரடங்குச் சட்டம் காரணமாகவும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். அரசாங்கம் நிவாரணம் தருவதாக தெரிவித்த போதிலும் இதுவரை நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. அவர்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்கு உடனடியாக நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நாங்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை ஒழுங்கு செய்தோம்.

அரச ஊழியர்களையும் தனியார் ஊழியர்களையும் வேலைக்கு போகவேண்டாம். வீட்டில் இருங்கள் என்று அரசாங்கம் சொல்கின்றது. ஆனால் தோட்டத்தொழிலாளர்களை மாத்திரம் வேலைக்கு செல்லுமாறு சொல்கிறது. இதில் என்ன நியாயம் இருக்கின்றது. அவர்கள் வேலைக்கு போகும்போது அவர்களின் குழந்தைகளை சிறுவர் பராமரிப்பு நிலையத்திலேயே விட்டுச் செல்கின்றனர். அங்கு மாத்திரம் குழந்தைகள் கூட்டமாக இருக்கலாமா? இது தொடர்பாக பேசுவதற்கு எவரும் இல்லை.

மலையகத்தை சேர்ந்த இளைஞர்கள் யுவதிகள் கொழும்பில் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அவர்களுக்கு இதுவரை எந்தவித நிவாரணமும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. எனவே அரசாங்கமும் அரசியல் பிரதிநிதிகளும் இதனை கருத்தில் கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கும் மலையக இளைஞர்களுக்கும் நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனா தொற்றாளர் பயணித்ததாக சந்தேகிக்கப்படும் வேன் தீவைத்துளிப்பு

(கம்பளை, புஸல்லாவை நிருபர்கள்)

அக்குரணை பிரதேசத்தில் அண்மையில் இனம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர் பயணித்ததாக நம்பப்படும் வேன் ஒன்றை கம்பளை பொலிஸார் இனம் கண்டுள்ளனர். எனினும் குறித்த வேன் தொற்று நீக்கம் செய்யப்படாமையினால் பிரதேசவாசிகள் பீதிக்குள்ளானதையடுத்து பின்னர் குறித்த வேன் இனம் தெரியாத நபர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

புஸல்லாவை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்குச் சொந்தமான குறித்த வேனை இராகலை பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவர் நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து வாடகை அடிப்படையில் செலுத்தி வந்ததாகவும் இந்நிலையிலேயே கடந்த 15 ஆம் திகதி குறித்த வேனில் கொரோனா தொற்றுக்குள்ளானவர் கட்டுநாயக்காவில் இருந்து அக்குரணை பகுதிக்கு பயணித்ததாகவும் தெரியவந்துள்ளது.

மேற்படி வேன் கம்பளை சிங்ஹப் பிட்டிய பகுதியில் வாகனம் பழுது பார்க்கும் இடம் ஒன்றில் நிறுத்தி வைத்திருந்த நிலையில் (நேற்று முன்தினம் மாலை (31) கம்பளை பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த உளவுப்பிரிவு பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

இந்நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட வேனில் கொரோனா நோயாளி பயணித்து 14 நாட்களுக்கு மேல் கடந்துள்ளமையால் அதில் தொற்று நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையென உடபளாத்த பிரதேசத்திற்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி பொலிஸாரிடம் தெரிவித்ததாக தெரியவருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் (31) இரவு தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் தங்கியிருக்கும் மலையக இளைஞர்கள் வீடுசெல்ல அமைச்சரவை அனுமதி

இராணுவத்தின் உதவியோடு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு என்கிறார் ஆறுமுகன்

கொழும்பு உட்பட வெளி மாவட்டங்களில் தங்கியிருக்கும் மலையக இளைஞர்களை அவரவரது பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பதுடன் ஜனாதிபதி கோத்தபாயவும் சம்மதம் தெரிவித்திருப்பதாக தோட்ட உட்கட்டமைப்பு இளைஞர் வலுவூட்டல் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஓரிரு தினங்களில் இராணுவத்தின் உதவியோடு அவரவர் பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் ஆறுமுகன், அங்கு சென்றதும் தயவு செய்து 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும் என்ற கேரிக்கையையும் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதனால் வெளி மாவட்டங்களில் தங்கியிருக்கும் தங்களுக்கு பாரிய பிரச்சினை இருப்பதாகவும் ஆகவே தங்களை வீடுகளுக்கு செல்வதற்கு அனுமதிக்குமாறும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் மலையக இளைஞர்கள் சிலர் கடந்த வாரம் கோரிக்கை விடுத்தார்கள்.

இக்கோரிக்கைகள் தொடர்பில் நேற்று நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர், இராணுவத் தளபதி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு கொண்டுசென்றேன். இதனைத் தொடர்ந்து தற்போது இவர்கள் வீடுகளுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இன்றுள்ள சூழ்நிலையில் பணம் இருந்தாலும் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை உள்ளதையும் எடுத்துக்கூறினேன். அதனைத் தொடர்ந்து அவர் கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களில் தங்கியிருக்கும் மலையக இளைஞர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்புவதற்கு சம்மதம் தெரிவித்தார்.

வத்தளை பகுதியில் உள்ள சிலர் இரத்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் வீடுகளுக்கு செல்பவர்கள் தங்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும். இன்னும் ஓரிரு தினங்களில் இளைஞர்களை இராணுவத்தின் உதவியோடு அவரவர் பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீடுகளுக்கு செல்லும் இளைஞர்கள் தயவு செய்து 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும். இன்று உலகமே கொரானாவால் பாதித்துள்ள இந்த நேரத்தில் நாம் ஒத்துழைப்பு தந்தால் மாத்திரமே இதனை ஒழிக்க முடியும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

நீர்கொழும்பு சென்று வந்ததால்

இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப்பேர் அட்டனில் தனிமைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

(அட்டன் நிருபர்)

நீர்கொழும்பு சென்றுவந்த நிலையில் அட்டன் நகரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப்பேர் நேற்றுமுன்தினம் இரவுமுதல் (31) 14நாட்களுக்கு சுய தனிமைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அம்பகமுவ சுகாதார வைத்திய பிரிவின், பொது சுகாதார பரிசோதகர்களாலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 29ஆம் திகதி அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அட்டனிலுள்ள வர்த்தகரொருவரும் அவரது சாரதியும் நீர்கொழும்பு சென்று வந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவும் அபாய வலயமாக நீர்கொழும்பு பகுதி அறிவிக்கப்பட்டுள்ளதாலேயே, பாதுகாப்பு கருதி அங்கு சென்றவர்களையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் சுய தனிமைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அட்டன் ஹிஜ்ராபுர பகுதியைச் சேர்ந்த வர்த்தகரினதும் (ஆறு உறுப்பினர்கள்) அவரது சாரதியினதும் (இருவர்) குடும்பங்களே இவ்வாறு தனிமைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

சாரதி கொழும்பு சென்றதால் அவரின் இரு பிள்ளைகளும் சகோதரர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் இன்னும் வீடு திரும்பவில்லை. எனவே, இரு தரப்புகளில் இருந்தும் மொத்தமாக 8 பேர் தனிமைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணம் இதுவரையிலும் மக்களை சென்றடையவில்லை

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் வேலுகுமார்

(வத்துகாமம் நிருபர்)

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத்திட்டங்கள் இன்னும் மக்களைச்சென்றடையவில்லை. எனவே, இது விடயத்தில் அரசாங்கம் துரிதமாக செயற்படவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மக்களுக்காக பல நிவாரணத் திட்டங்களை அரசாங்கம் அறிவித்தது.

வீடுதேடி வந்து அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என்பது உட்பட பல விடயங்கள் அதில் இருந்தும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. கண்டி மாவட்டம் மட்டுமல்ல நாட்டில் பல இடங்களிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது.

'கொரோனா' வைரஸை கட்டுப்படுத்துவதற்காக பொறுப்புடன் செயற்படும் அதேவேளை, மக்களுக்கு தேவையான அத்தியாவசிய சேவைகளை தங்குதடையின்றி அரசாங்கம் வழங்க வேண்டும். வைரஸிலிருந்து மக்களை பாதுகாப்பதுபோல், பட்டினி சாவில் இருந்தும் அவர்களை மீட்டெடுக்க வேண்டும்.

நாமும் களத்தில் இருந்து சேவைகளை வழங்கி வருகின்றோம். மக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஜனாதிபதி செயலணியின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளோம். எனவே, ஒரு சில பகுதிகளில் மட்டுமல்லாது அனைத்துப் பிரதேசங்களுக்கும் அரச சேவையும் நிவாரணம் வழங்கலும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்தபோது படல்கும்பர – புத்தள பிரதான வீதியில் வாகனமொன்றில் சட்டவிரோதமாக மதுபானம் விநியோகித்த சந்தேகநபர்கள் இருவரை படல்கும்பர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(நமுனுகுல நிருபர்)

கடமையிலிருந்த பெண் தொழிலாளர்களுக்கு முகக்கவசங்களை வழங்கி வைத்தார் சுரேஷ்

(பதுளை நிருபர்)

கொரோனா தொற்று அச்சத்துக்கு மத்தியிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் பசறை, ஹாலி எல மற்றும் பசறை உள்ளிட்ட பெருந்தோட்டங்களுக்கு சென்ற இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வடிவேல் சுரேஸ் கடமைகளிலிருந்த பெண் தொழிலாளர்களுக்கு கொரோனா தொற்று குறித்து சுகாதார ஆலோசனைகளை வழங்கியதுடன் அவர்களுக்கு முகக்கவசங்களையும் வழங்கினார்.

கைதிகளை ஏற்றிச்செல்லும் பஸ் விபத்து: அறுவர் காயம்

(பொகவந்தலாவ நிருபர்)

சிறைக்கைதிகளை ஏற்றிச்செல்லும் பஸ் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த சிறைச்சாலை பொலிஸ் கான்ஸ்டபில்கள் அறுவர் பேர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியாவிலிருந்து நேற்றுமுன்தினம் பதுளை நோக்கி சென்ற பஸ் (31 மாலை 5.30 மணியளவில்) நுவரெலியா ஹக்கல பகுதியில் பாரிய வளைவொன்றில் தடம் புரண்டு குடியிருப்பொன்றின்மீது வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் கைதிகள் எவரும் இல்லையொன்றும் அதில் பயணித்த சிறைச்சாலை பொலிஸ் அதிகாரிகள் ஆறுபேர் காயமுற்று நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்களில் மூவர் ஆண்களும் மூவர் பெண்களுமாவர்.

அனர்த்த நேரத்தில் அரசியல் செய்வது வேதனையளிக்கிறது

வன்மையாக கண்டிக்கிறோம் என்கிறார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய

(ஆர்.யசி)

தேசிய அனர்த்த காலத்தில் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகளைக் கூட அரசியல் சுய இலாபத்திற்காக மாற்றிக்கொள்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கொரோனா வைரஸ் தொற்றுநோய் அனர்த்தத்தை பயன்படுத்தி அரசியல் செய்ய எவரும் முயற்சிக்க வேண்டாம் எனவும் வலியுறுத்துகின்றார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை அடுத்து மக்களை பாதுகாக்கும் விதத்தில் மக்களுக்காக வழங்கப்படும் சலுகைகளையும் அத்தியாவசிய தேவைகளையும் பூர்த்திசெய்வதற்கு வழங்கப்படும் உதவிகளை அரசியல் பிரசாரமாக மாற்றிக்கொள்வதாக கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் கொரோனா தொற்றுநோய் பரவல் மக்களை அதிகம் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதன் காரணமாக மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டே நாம் பொதுத் தேர்தலைக்கூட பிற்போட நேர்ந்தது. அவ்வாறு இருக்கையில் இந்த கால கட்டத்தில் தேர்தல் சட்டத்தை மீறும் விதத்தில் அரசியல் கட்சிகள் செயற்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது எந்தளவு மோசமான தூரம் சென்றுள்ளது என்றால் மக்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் சமுர்த்தி கொடுப்பனவுகளில் கூட அரசியல் இலாபம் பெறப்படும் விதத்தில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கும் வகையில் இவர்கள் செயற்படுகின்றனர். அரச அதிகாரிகள் மூலமாக பொதுமக்களுக்கு சமுர்த்தி நிதி பங்கிடப்படுகின்ற நேரங்களில் அவர்களுடன் இணைந்து அரசியல் பிரதிநிதிகள் தமது கட்சியையும் சின்னத்தையும் பிரசித்தப்படுத்தும் செயற்பாடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கீழ்மட்ட அரசியல்வாதிகள் மட்டுமல்லாது உயர் மட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் கூட இந்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாக மாறியுள்ளது. இது குறித்து நாம் மிகவும் அதிருப்தியில் உள்ளோம். அதிருப்தியடைவது மட்டுமல்ல இந்த செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது எனவும் இந்த கால எல்லைக்குள் அரசியல் பக்கசார்புகளை கைவிட்டு பொதுவான வேலைத்திட்டம் ஏதேனும் இருப்பின் அதனை கையாள வேண்டும் எனவும் நாம் ஏற்கனவே சகல தரப்பையும் அறிவுறுத்தியுள்ளோம்.

எனினும் இவர்கள் மறைமுகமாக இந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் வாகனங்களில் அரசியல் சின்னங்களை பிரசித்தபடுத்தி செயற்படுகின்றனர். அதுமட்டும் அல்லாது நகரசபைகளில் மாகாணசபைகளில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கும் செயற்பாடுகளில் கூட முழுமையாக அரசியல் தலையீடுகள் உள்ளன. இவ்வாறு மக்களின் இக்கட்டான சூழ்நிலையிலும் அரசியல் செய்ய முயற்சிப்பதன் மூலமாக எமது நாடு எந்த திசையில் பயணிக்கின்றது என்பதை உணர முடிகின்றது. நாம் மதம் இனம் மறந்து அனைவரும் ஒன்றிணைந்து நாடாக இயங்கிக்கொண்டுள்ள இந்த நேரத்தில் அரசியல்வாதிகள் ஏன் இவ்வாறு மோசமாகவும் கீழ்த்தரமாகவும் செயற்படுகின்றனர் என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது. இந்த தேசிய அனர்த்த சூழலில் அதனை அரசியலாக பயன்படுத்திக்கொள்ள வேண்டாம் என சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

மக்களுக்கான நிவாரணங்களை அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்துகிறது அரசு

தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர்கள் வலியுறுத்தல்

(நா.தனுஜா)

ஊரங்குச்சட்டத்தின் விளைவாகத் தமது வருமானத்தை இழந்து உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாட்டை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்கு இலவச நிவாரணப்பொருட்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அதனை அரசாங்கம் தனது அரசியல் நோக்கங்களுக்காகவும் நலன்களுக்காகவும் பயன்படுத்திக்கொள்வது எமக்கு மிகுந்த விசனத்தை அளிக்கிறது. இதுகுறித்து தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூட்டணியின் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டமொன்று திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதன்படி சில விடயங்கள் குறித்து இணக்கப்பாடொன்று எட்டப்பட்டது.

முதலாவதாக கொரோனா வைரஸ் உலகில் பல்வேறு நாடுகளுக்கும் பரவியிருக்கும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பல தலைவர்கள் ஆரம்பத்திலேயே எச்சரித்த போதிலும் சரியான தருணத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாக தற்போது உணவுப்பொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கும் ஊரடங்குச்சட்டத்திற்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது.

இலங்கை மிகவும் சிறியநாடாகும். இந்நாட்டிற்குள் வெளிநாட்டவர்கள் நுழையக்கூடிய ஒரே மார்க்கம் விமானநிலையம் மாத்திரமேயாகும். அவ்வாறிருக்க ஆரம்பத்திலேயே விமான நிலையங்களை மூடுவதற்கோ அல்லது விமானநிலையத்தின் ஊடாக வருபவர்களை உரிய பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முதலாவதாக சுற்றுலாப்பயண வழிகாட்டியொருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாகக் கண்டறியப்பட்டபின்னர் கூட இலங்கை கொரோனா வைரஸ் அண்டமுடியாத நாடுஎன்றே சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்குப் பிரசாரம் செய்யப்பட்டது.

இது குறித்து கடந்த ஜனவரி மாதம் 24 மற்றும் பெப்ரவரி 5 ஆம் திகதிகளில் சஜித் பிரேமதாஸவினால் எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அத்தகைய ஆபத்து நிலையொன்று இல்லையென்றே சுகாதார அமைச்சரும் அரசாங்கத்தினரும் கூறிவந்தனர். அத்தகைய அலட்சியப் போக்கே தற்போதைய நெருக்கடி நிலைக்குக் காரணம் என்பதே எமது கருத்தாகும். எது எவ்வாறெனினும் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்பதாலும் அதற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டிய தேவையிருந்தமையினாலும் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மந்த நிலையடைந்தன. எனினும் இறுதியில் தேர்தலைவிடவும் நாட்டுமக்களின் நலனை முன்னிறுத்திப் பொதுத் தேர்தலைப் பிற்போடுவதாக அறிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டிற்கு நன்றி தெரிவிக்கின்றோம். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் காரணமாகவே தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் உறுதிப்படுத்தப்பட்டது என்பதை நினைவு படுத்த வேண்டும்.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டத்தின் விளைவாகத் தமது வருமானத்தை இழந்து உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாட்டை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்கு இலவச நிவாரணப்பொருட்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அதனை அரசாங்கம் தனது அரசியல் நோக்கங்களுக்காகவும் நலன்களுக்காகவும் பயன்படுத்திக் கொள்வது எமக்கு மிகுந்த விசனத்தை அளிக்கிறது. இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

அடுத்ததாக நாட்டின் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களைத் தவிரவேறு பல நோயாளர்களும் உள்ளனர். அதேபோன்று மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருப்பதாகவும் எம்மால் அறியமுடிகிறது. இதற்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்பது பற்றியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது. அதற்கு அரசாங்கம் தனியார் மருந்தகங்களின் உதவியையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற யோசனையை முன்வைக்கின்றோம். இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எவ்வித இன மத கட்சிபேதமுமின்றி அனைத்துத் தரப்பினரதும் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் அதனை எவரும் தமது தனிப்பட்ட நலன்களுக்காக பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 21 வரை தமது சேவையை இடைநிறுத்தியுள்ளது

(நா.தனுஜா)

உலகளாவியரீதியில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் பயணத்தடைகளின் காரணமாக தமதுஅனைத்துப் பயணிகள் விமானசேவைகளையும் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்திருக்கிறது. தற்போது அமுலில் உள்ளபயணத்தடைகளின் காரணமாக வேதமதுவிமானசேவை இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் நிலைவரம் குறித்துத் தொடர்ந்தும் அவதானம் செலுத்திவருவதாகவும் அறிவித்திருக்கும் அந்நிறுவனம் பயணத்தடைகள் நீக்கப்படும் பட்சத்தில் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னதாகவே தமது விமான சேவைகளை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறது. எனினும் இக்காலப்பகுதியில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரவேண்டிய அவசியம் ஏற்படுமாயின் அதற்குத்தமது விமானங்கள் இயங்கும் என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கூறியிருக்கிறது. கடந்த 40 வருடகாலங்களில் முதற்தடவையாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இத்தகையதொரு நெருக்கடி நிலைக்கு முகங்கொடுத்திருப்பதாகவும் தமது கட்டுப்பாட்டில் இல்லாத இவ்விடயத்தினால் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கும் தமது வாடிக்கையாளர்களுக்கு வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அந்நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து ஏதேனும் சந்தேகங்கள் காணப்படுமாயின் 011 7771979 என்ற தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெறமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பசியால் மரணிக்காமல் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

மரிக்கார் தெரிவிப்பு

(எம்.ஆர்.எம்.வஸீம்)

கொரோனாவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுபோன்று மக்கள் பசியால் மரணிக்காமல் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக அரசாங்கம் நாட்கூலி மற்றும் சுயதொழில் செய்யும் குடும்பங்களுக்கு வாராந்தம் 5ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதியொன்றை இலவசமாக வழங்க வழங்கவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

ஊரடங்கு சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும் காலத்தில் அரசாங்கம் வழங்கும் நிவாரணப்பொதி தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கொரோனாவை கட்டுப்படுத்த அரசாங்கம், சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்பு படையினர் மேற்கொண்டுவரும் முயற்சியை நாங்கள் வரவேற்கின்றோம். அதேபோல் எங்களால் முடிந்த உதவியை வழங்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதேபோன்று கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதுடன் நாட்டில் வாழும் மில்லியன் கணக்கான மக்கள் பசியால் தவிக்கவிடாமலும் பாதுகாக்க வேண்டும். மேலும் நாட்டில் 80இலட்சம்பேர் தொழில் செய்துவருகின்றனர். இவர்களில் 30 இலட்சம் பேர் மாதச் சம்பளம் பெறுபவர்கள். 17இலட்சம் பேர் அன்றாடம் கூலித்தொழில் செய்பவர்கள். அதேபோன்று 25இலட்சம்பேர் சுயதொழில் செய்பவர்கள். கொரோனா வைரஸை கட்டுப்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் ஊரடங்கு சட்டம் போன்ற நடவடிக்கையால் கூலித்தொழில் செய்பவர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்கள் என 42இலட்சம் பேர் இன்று எந்த வருமானமும் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். நிவாரண அடிப்படையில் அரசாங்கம் இவர்களின் வீடுகளுக்கு பொருட்களை அனுப்பினாலும் அதனை கொள்வனவு செய்ய அவர்களிடம் பணம் இல்லாத நிலையில் இருக்கின்றனர்.

அதேபோன்று மாதச்சம்பள பெறுபவர்கள் வங்கிக்கு சென்று தங்களது பணத்தை பெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. ஏ.டீ.எம். இயந்திரத்துக்கு செல்லமுடியாத நிலை இருக்கின்றது. அதனால் அரசாங்கம் நிவாரண பொதிகளை வீட்டுக்கு கொண்டுபோய் கொடுத்தாலும் அதனை கொள்வனவு செய்ய முடியாத நிலையே இருக்கின்றது. அதனால் அரசாங்கம் ஊரடங்கு சட்டத்தை எந்தளவு காலத்துக்கு நீடித்தாலும் பரவாயில்லை. ஆனால் வீடுகளில் உணவுக்கு வசதியின்றி இருக்கும் மக்களுக்கு இலவசமாக உலர் உணவுப் பொதிகளை வழங்கவேண்டும்.

குறிப்பாக இன்று ஒரு குடும்பத்துக்கு ஒரு வாரத்துக்கு சுமார் 5ஆயிரம் ரூபா செலவு ஏற்படுகின்றது. அதனடிப்படையில் மாதத்துக்கு 25ஆயிரம் ரூபா செலவாகின்றது. அதனால் அரசாங்கம் வீடுகளுக்கு நிவாரண பொதிகளை அனுப்புவதனால் மக்களுக்கு அதனை பெற்றுக்கொள்ள வசதியில்லை. அதற்கு மாற்றமாக வாராந்தம் 5ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதியொன்றை இலவசமாக வழங்கவேண்டும். பிள்ளைகளுக்கு பால்மா இல்லாமல் பல குடும்பங்கள் தவித்துக்கொண்டிருக்கின்றன.

அத்துடன் அரசாங்கத்துக்கு இந்த இலவச பொதியை வழங்கமுடியும். உலக சந்தையில் எரிபொருட்களின் விலை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அரசாங்கம் சாதாரணமாக எரிபொருளுக்கு 5டொலர் பில்லியனை செலவிட்டு வருகின்றது. ஆனால் தற்போது 2டொலர் பில்லியனே செலவிடுகின்றது. அதன் மூலம் அரசாங்கத்துக்கு மாதாந்தம் 570 பில்லியன் ரூபா மீதமாகின்றது. அதனால் நாட்கூலி செய்பவர்கள் மற்றும் சுயதொழில் செய்யும் குடும்பங்களுக்கு வாரத்துக்கு 5ஆயிரம் ரூபா அடிப்படையில் 4 வாரங்களுக்கு செலவிட்டால் 84பில்லியன் ரூபாவே அரசாங்கத்துக்கு செலவாகின்றது. எரிபொருள் மூலம் கிடைக்கப்பெறும் இலாபத்தில் இதனை அரசாங்கத்துக்கு வழங்கமுடியும். அதனால் அரசாங்கம் கொரோனோ வைரஸை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுபோல் மக்கள் பசியின்றி உயிர் வாழ்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக நாட்கூலி வேலை செய்பவர்கள்,சுயதொழில் செய்யும் குடும்பங்களுக்கு 5ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொதியொன்றை வாராந்தம் இலவசமாக வழங்கவேண்டும் என தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம் என்றார்.

கொரோனா வைரஸின் மூலம் மரணித்த ஒருவரின் இறுதி கிரியைகள் பற்றிய ஜம்இய்யதுல் உலமாவின் அறிவுறுத்தல்

(எம்.ஆர்.எம்.வஸீம்)

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுமரணித்த ஒருவரின் இறுதிக்கிரியைகளை அரசாங்கம் விடுத்திருக்கும் விதிமுறைக்கமைய மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனஅகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தெரிவித்துள்ளது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பத்வாக்குழு செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எல்.எம் இல்யாஸ் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முஸ்லிமான ஒருவர் மரணித்தால் அவரைக் குளிப்பாட்டுவது, கபன் செய்வது,தொழுகை நடத்துவது மற்றும் அடக்கம் செய்வது முஸ்லிம்கள் மீதுபர்ளுகிபாயாவாகும். பர்ளுகிபாயா என்பது இவற்றை முஸ்லிம்களில் சிலர் நிறைவேற்றிவிட்டால் போதுமானது. அவ்வாறுயாரும் அக்கடமைகளை நிறைவேற்றாவிட்டால் முஸ்லிம்கள் அனைவரும் பாவிகளாக ஆகிவிடுவார்கள்.

அவ்வாறே தொழுகை நடத்துவதற்குமுன் ஜனாஸா குளிப்பாட்டப்பட்டிருப்பது அவசியமாகும். நீரில் மூழ்கி அல்லது இடிபாடுகளுக்குள் சிக்குண்டு ஒருவர் மரணித்து, அவரது ஜனாஸா கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்களில், அதைக் குளிப்பாட்டமுடியாத இக்கட்டான சூழ்நிலைஏற்படுகின்றது. இந்நிலைகளில் தொழுகை நடத்த முடியுமா எனும் விடயத்தில் மார்க்க அறிஞர்களிடம் கருத்து வேறுபாடுகள் உள்ளன. பெரும்பான்மையான மார்க்க அறிஞர்கள் ஒரு ஜனாஸா மீதுதொழுகை நடத்துவதற்கு குளிப்பாட்டல் நிபந்தனையாகும் என்பதால் குளிப்பாட்ட முடியாமலாகுமிடத்து தொழுகை நடத்த முடியாதுஎன்று கூறுகின்றனர்.

என்றாலும் சிலமார்க்க அறிஞர்கள் ஜனாஸாத் தொழுகையின் நோக்கம் மரணித்தவருக்கு துஆ செய்வதாகும். அவ்வாறே ஜனாஸாவுடைய நான்கு கடமைகளில் சிலகடமைகளை நிறைவேற்ற முடியாது என்பதால் நிறைவேற்றமுடியுமான கடமைகளைவிட்டு விடமுடியாது என்று கூறுகின்றனர். இதற்கு ஒருகாரியத்தில் இயலாத சில விடயங்களுக்காக இயலுமானவிடயங்களையும் சேர்த்துவிட்டுவிட முடியாது எனும் அடிப்படையைஆதாரமாகக் கூறுகின்றனர்.

இவ்வடிப்படையில் கொரோனாவைரஸ் தாக்கிமரணித்த ஒருவரது உடலிலிருந்து மற்றவர்களுக்கு வைரஸ் பரவ வாய்ப்புள்ளது என்பதால் அவ்வாறு மரணிப்பவர்களின் உடல் முற்றுமுழுதாகபையினால் மூடப்படும். எனவே அதைக் குளிப்பாட்ட அல்லது தயம்மும் செய்யமுடியாத நிலை ஏற்படும்.

இந்நிலையில் மேற்கூறப்பட்ட இரண்டாவது கருத்தின் அடிப்படையில் கொரோனாவைரஸ் தாக்கிமரணிக்கும் ஜனாஸாவை குளிப்பாட்ட முடியாது போனாலும் அதற்காக ஜனாஸாத் தொழுகையை நடத்தி அடக்கம் செய்வது அவசியமாகும்.

கொரோனா மூலம் மரணிக்கும் ஒருவரின் இறுதிக் கிரியைகள் விடயத்தில் அரசாங்கம் சிலநடைமுறைகளைப் பிரகடனப்படுத்தியுள்ளது. அவற்றில் மரணித்தவரது ஜனாஸாவை குளிப்பாட்ட முடியாது, ஜனாஸாவை எரிக்கவேண்டும். அடக்குவதாக இருந்தால் ஆறு அடிகள் ஆழமாகஇருத்தல் வேண்டும். மேலும் அரசாங்க அதிகாரிகள் முன்னிலையில் அடக்கம் செய்யப்படல் வேண்டும். மிகவும் நெருங்கிய ஒரு சில உறவினர்களே அடக்கம் செய்யப்படும் இடத்திற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். பிரத்தியேக இடத்தில் அடக்கம் செய்தல் வேண்டும் என்பன போன்ற அறிவுரைகள் உள்ளன. மேற்குறிப்பிட்ட மார்க்கசட்டத்தின் அடிப்படையில் மரணித்தவரின் உடலைக் குளிப்பாட்ட அல்லது தயம்மும் செய்யமுடியாதுஎன்பதால் தொழுகை மாத்திரம் நடத்தி அரச அதிகாரிகளின் அறிவுரைகளுடன் அதிக நபர்கள் ஒன்று சேராமல் முக்கிய சிலர் மாத்திரம் ஒன்று சேர்ந்து ஜனாஸா தொழுகை மற்றும் அடக்கும் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும். மற்றவர்கள் இவ்வாறான நிர்ப்பந்த நிலையில் மறைமுக ஜனாஸாத் தொழுகையை தொழுதுகொள்ள மார்க்கத்தில் அனுமதியுள்ளது. அல்லாஹுதஆலா இத்தகைய நோயினால் மரணிப்பவர்களுடைய பாவங்களை மன்னித்து அவர்களுக்கு ஜன்னத்துல் பிர்தௌஸை அருள்வானாக. அத்துடன் அவர்களது குடும்பத்தினருக்கு மன ஆறுதலைக் கொடுத்தருள்வானாக. குறிப்பாக இத்தகைய ஜனாஸாக்களை அரச அதிகாரிகளின் அறிவுரைகளுடன் மையவாடியில் பிரத்தியேக இடத்தில் அடக்கம் செய்வதற்கு ஒத்துழைக்குமாறு மஸ்ஜித் நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

மன்னார் பகுதியில் பொருட்களை வாங்குவதில் ஈடுபட்ட மக்கள்

(தலைமன்னார் நிருபர்)

மன்னார் பகுதியில் ஊரடங்குச் சட்டம் நேற்று தளர்த்தப்பட்டதும் மக்கள் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

மீன் பிடிக்கென அனுமதி பெற்றவர்கள் குறிப்பிட்ட நேரங்களில் மீன்பிடியில் ஈடுபடுகின்றபோதும் இவர்கள் கரை சேர்க்கும் மீன்களை வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை இருப்பதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

பிடிக்கப்படும் மீன்களை உள்ளூரில் விற்பனை செய்தபின் மிகுதியை பதனிட்டு வருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மன்னார் பகுதியில் தற்பொழுது 18671குடும்பங்களுக்கு சமுர்த்தி பணம் வழங்கப்பட்டமையால் வறுமை கோட்டுக்குள் வாழ்கின்றவர்கள் பொருட்கள் வாங்குவதில் அக்கறை காட்டினர்.

நேற்று ஒரு சில திணைக்களங்கள் திறந்திருந்து செயல்பட்டன. மன்னார் நகரில் எதிர்பார்த்த மக்கள் தொகை இல்லாத போதும் ஓரளவு மக்கள் காணப்பட்டனர். அங்காடி வியாபாரிகள் மக்களை கூவி அழைத்து வியாபாரத்தில் ஈடுபட்டனர். இம்முறை வங்கிகள், மருந்தகங்களில் கடந்த நாட்களைப்போல் மக்களை காண முடியவில்லை .

வடபகுதியிலுள்ள உள்ளூர் உற்பத்திகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்

பொருள் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை தேவை என்கிறார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக வடக்கில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடான நிலைமை ஏற்படாது தடுக்கும் வகையில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் வடபகுதிலேயே அவை விநியோகிக்கப்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் தான் ஓரளவுக்காவது நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் முன்னாள் யாழ். மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கொரோனா வைரஸின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதியில் மக்களுக்கான பொருட்கள் விநியோகத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. மக்கள் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. வடக்கில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது தடை செய்யப்பட வேண்டும்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் வடபகுதிக்குள்ளேயே விநியோகிக்கப்பட வேண்டும். இவ்வாறு விநியோகிக்கப்பட்டால் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் நிலைமையை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும். பொதுமக்களின் நலன்கருதி இவ்வாறான செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் கஷ்டங்களை அனுவித்து வருகின்றனர். கிழக்கிலும் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். யுத்த காலத்தின் போது பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு போன்ற நிலைமை தற்போது உருவாகியிருக்கின்றது. எனவே உள்ளூர் உற்பத்திகளை பாதுகாக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருட்களை விநியோகிக்கும் விடயத்தில் அரசாங்கத்தின் செயற்பாடு உரிய வெற்றியளிக்கவில்லை.

நாள் சம்பளத்தைப் பெறுபவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அரசாங்கமானது பிரதேச செயலகம் மட்டத்தில் நிதிகளை ஒதுக்கி நிவாரண உதவிகளை வழங்குவதாக கூறிய போதிலும் அந்த நடவடிக்கைகள் உரிய வகையில் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையில் உள்ளூர் உற்பத்திகளை பாதுகாத்து அதனை அந்தப் பகுதிகளிலேயே விநியோகிக்க வேண்டும், இதன் மூலமே பொருட்தட்டுப்பாட்டை இல்லாதொழிக்க முடியும்.

கொரோனாவினால் உயிரிழந்தவர்களுக்கு நல்லூர் பிரதேச சபை அமர்வில் அஞ்சலி

(தி.சோபிதன்)

கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்த மக்களுக்கு நல்லூர் பிரதேச சபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக நல்லூர் பிரதேச சபையின் சிறப்பு அமர்வு நேற்று இடம்பெற்றது. நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் சபை மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த அமர்வின் ஆரம்பத்தில் சபையின் தவிசாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது. இந்த கலந்துரையாடலில் வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்ளும் வகையில் உறுப்பினர்கள் சமூக இடைவெளியை பின்பற்றி அமர்ந்திருந்தனர். மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் இடைவெளிவிட்டு அமர்ந்து அனைவருக்கும் முன்மாதிரியாக செயற்பட்டிருந்தனர். நல்லூர் பிரதேச சபையின் இந்த அமர்வு அனைத்து மக்களையும் கவனத்தை ஈர்த்துள்ளது.

திருநெல்வேலி பகுதியில் கிருமி தொற்று நீக்கல்

(தி.சோபிதன்)

யாழ்.திருநெல்வேலிப் பகுதியில் கிருமி தொற்று நீக்கும் மருந்து விசுறும் பணிகள் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பகுதியில் உள்ள சந்தை, வியாபார நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளிலேயே இந்த பணி முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா தாக்கத்தால் நாட்டில் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு நாடு முழுவதும் கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி கொழும்பில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு வரவழைக்கப்பட்ட விசேட பொலிஸ் குழுவினர் குடாநாடு முழுவதும் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று புதன்கிழமை காலை யாழ்.திருநெல்வேலியில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்

பஞ்சம் ஏற்படாமலிருக்க இராணுவத்தினர் விவசாய நிலங்களை விடுவிக்க வேண்டும்

வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம்

(தி.சோபிதன்)

இலங்கையில் அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதிகள் தடைப்படும் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் யாழ்ப்பாணத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படாமல் இருக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விவசாய நிலங்களை இராணுவம் விடுவிக்க வேண்டும். இதற்கான முயற்சியை ஜனாதிபதி செயலணி முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக முழு பிரதேசமும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அதிலும் வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட முடியாத கவலைக்கு உரிய மாவட்டமாக இருக்கின்றது.

ஜனாதிபதியினால் இந்த நெருக்கடிக்குள் உள்ளாகியிருக்கும் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஓரளவு வசதி உள்ளவர்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடும். எனினும் அன்றாடம் தினக் கூலி செய்து வாழும் மக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய பொருட்கள் கூட ஐம்பது வீதத்துக்கும் அதிகரித்த விலையில் வர்த்தகர்கள் பலர் விற்பனை செய்து வருகின்றனர். இது அடித்தட்டு மக்களை இன்னும் வெகுவாக பாதிப்படைய செய்கின்றது. ஆகவே இவ்வாறான பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டும். தற்போதைய சூழ்நிலையை பார்க்கும் போது சில விடயங்களை உணர்த்துகின்றன.

அதாவது இன்னும் ஓரிரு மாதங்களில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்கள் இருப்பில் இருக்கும்.அவை முடிவடைந்த பின்னர் வழமையாக இறக்குமதி செய்யும் நாடுகளில் இருந்து எமக்கு கிடைக்கும் என்று உறுதியாக கூற முடியாது. ஏனெனில் கொரோனா வைரசினால் உலக நாடுகளில் முக்கிய பல நாடுகள் பாதிப்படைந்துள்ளன. வெளிநாடுகளிலும் உற்பத்திகள் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

இவ்வாறான நாடுகள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பினால் கூட அவர்கள் வழமைக்கு திரும்ப குறைந்தது ஆறு மாத காலங்கள் எடுக்கலாம். அப்படியானல் அவர்கள் எமக்கான பொருட்களை ஏற்றுமதி செய்வார்கள் எனக் கூற முடியாது. எனவே நாம் எமக்கான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பணத்தில் ஏராளமான விவசாய காணிகள் பயன்படுத்தப்படாமல் இராணுவத்தின் பிடிக்குள் உள்ளன. அவற்றை உடனடியாக இராணுவத்தினர் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண் டும். அவசர தேவையாக கருதி தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவித்து விவசாயம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறு செய்தால் மாத்திரமே வடக்கில் உணவுப் பிரச்சினையை தவிர்க்க முடியும். வலி.வடக்கில் முன்னைய காலங்களில் ஏராளமான விவசாயிகள் தானிய உற்பத்திகளை மேற்கொண்டிருந்தனர். அவற்றை அவர்கள் மீண்டும் செய்ய இராணுவம் வழிவிட வேண்டும். ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டுள்ள செயலணி உடனடியாக அதனை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக இந்தச் செயலணியில் வடக்கு மாகாண ஆளுநர், அரச அதிபர், பிரதம செயலாளர் போன்றவர்கள் முக்கிய பங்கு வகின்றனர். இவர்கள் செயலணியில் இந்த விடயத்தை கவனத்திற்கு கொண்டு சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

சமுர்த்தி கடன் விடயத்தில் சொன்னதை செயற்படுத்தாத அரசாங்கம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் குற்றச்சாட்டு

ஓமந்தை,

சமுர்த்தி கடன் வழங்கலில் அரசு சொன்னதை செய்ய வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் அனைத்து சமுர்த்தி குடும்பங்களுக்கும் பத்தாயிரம் ரூபா கடன் வழங்குவதாக பகிரங்க அறிவித்தல் விடுத்தது. இறுதியில் அதற்கான எழுத்து மூலமான அறிவித்தல்கள் வழங்கப்படும் பொழுது முதற்கட்டம் ஐயாயிரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தது.

மேலும் அவர்களது அந்த கடன் சமுர்த்தி பயனாளர்களின் சேமிப்பில் பணம் இருந்தால் மட்டுமே வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

ஐயாயிரத்துக்கு குறைவாக சேமிப்பில் இருப்பவர்களுக்கு சேமிப்பில் இருக்கும் பணத்தில் 80 வீதம் பணம் மட்டுமே வழங்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இதனால் படுமோசமாக சமுர்த்தி பயனாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 2009ஆம் ஆண்டு யுத்த முடிவின் பின்னர் சமுர்த்தியில் உள்வாங்கப்படாத பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கடந்த ஆட்சியாளர்களின் இறுதிக் காலத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன. அவர்களுக்கான இந்தக் கடன் நிதி ஒரு தரம் கூட வழங்கப்படவில்லை. அதனால் அவர்கள் விரக்தியடைந்துள்ளார்கள். மேலும் இந்த சமுர்த்தி கடன் வழங்கும் நடவடிக்கையை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி காலத்தில் வழங்கப்பட்டவர்களை அரசியல் ரீதியில் பழிவாங்க முயற்சிக்கிறதா இந்த அரசு என பொது மக்கள் கேள்வி கேட்கிறார்கள்.

எனவே அரசாங்கம் ஒரு தீர்மானத்தை எடுத்து அறிவிப்பதாக இருந்தால் உருப்படியாக எதுவும் செய்ய முடியுமா என்று தீர்மானித்து விட்டு அறிவித்தல்களை வழங்க வேண்டும். வெறுமனே அறிவித்தல்களை வழங்கி விட்டு மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதிலும் இந்த கொரோனா தொற்றுக்கு உட்பட்டு அன்றாடம் வேலை செய்து பிழைப்பு நடத்துபவர்கள் பெண் தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் மாற்று வலு உள்ளவர்கள் என பெருந்தொகையானோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே இந்த விடயத்தை நிவர்த்தி செய்யும் முகமாக அவர்களின் சேமிப்பு புத்தகங்களில் பணம் இருந்ததோ இல்லையோ சகல சமுர்த்தி பயனாளிகளுக்கும் வட்டியற்ற கடன் என்ற அடிப்படையில் உடன் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழரசு கட்சியினரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வியோகிக்கப்பட்ட போது.... (படம்:எம்.நியூட்டன்)

இரண்டாவதாக உயிரிழந்தவருக்கு சிகிச்சையளித்த 11 சுகாதார அதிகாரிகள் தனிமைப்படுத்தலில்

(எம்.மனோசித்ரா)

கொரோனா தொற்றுக்குள்ளாகி நீர்கொழும்பு வைத்தியசாலையில் உயிரிழந்த நபருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள் உள்ளிட்ட 11 சுகாதார அதிகாரிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இராஜகிரியவிலுள்ள கொவிட்19 ஊடக மத்திய நிலையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வைக்கால பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் குறித்த 11 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் கண்காணிப்பின் கீழ் இவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தளபதி மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தளபதி

நீர்கொழும்புபெருதோட்டையைச் சேர்ந்த 60 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தார். இவரது சடலம் செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பில் தகனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சகல மருந்து விற்பனை நிலையங்களையும் ஏப். 2, 3, 6ஆம் திகதிகளில் திறக்க அனுமதி

(இரா. செல்வராஜா)

நாடு முழுவதுமுள்ள அனைத்து தனியார் மருந்து விற்பனை நிலையங்களையும் ஒசு சல கிளைகளையும் மூன்று தினங்களுக்கு திறப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் ஏப்ரல் 2ஆம், 3ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் மருந்து விற்பனை நிலையங்களும் ஒசு சல கிளைகளும் திறந்துவைக்கப்படும்.

ஒய்வூதியம் பெறுவோர் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அடையாள அட்டையைப் பயன்படுத்தி ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் மருந்துவகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஊரடங்கு வேளையில் மருந்துகளை வாங்கச் செல்வதற்கு ஒய்வூதியம் பெறுவோரை அனுமதிக்குமாறு நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மாஅதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின்... (தொடர்ச்சி)

டுவிட்டர் தளத்தில் இருவரும் தமது நன்றிகளை பரிமாறிக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் பரவிவரும் "கொவிட் 19" கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் குறித்தும் இலங்கையிலும் "கொவிட் 19" கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத் திட்டம் குறித்தும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் தேரோஸ் அத்னோம் கெப்ரிஎசிஸ் அதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயை முற்றாக இல்லாதொழிக்கும் வேலைத்திட்டத்தில் உலக சுகாதார ஸ்தாப்னத்துடன் இணைந்து செயலாற்றுவதில் இலங்கை அரசாங்கம் வழங்கிவருகின்ற ஒத்துழைப்புகளுக்கு தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாகவும் அவர் குறித்த டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் இந்த கருத்துக்கு நன்றிகளை தெரிவிக்கும் விதத்தில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இலங்கையில் "கொவிட் 19" கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை இல்லாதொழிக்க இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற நடவடிக்கைகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.... (தொடர்ச்சி)

இவ்வாறு உயர்ந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இந்த 146 பேரில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், சீன பெண் ஒருவர் உள்ளிட்ட 21 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளைவிட்டு வெளியேறியுள்ளனர். இந் நிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட 123 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில், யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்டவர் மத போதகர் ஒருவர் என தெரியவந்துள்ளது. அரியாலை பகுதியில் உள்ள மத போதகர் ஒருவருடன் தொடர்புகளை பேணிய மத குரு ஒருவரே இவ்வாறு தற்போது கொரோனா தொற்று குறித்து அடையாளம் காணப்பட்டுள்ளார். இலங்கையின் கொரோனா வைரஸை காரணம் காட்டி முடக்கப்பட்ட முதல் கிராமம் யாழ். அரியாலை பிரதேசமாகும். கடந்த மார்ச் 21 ஆம் திகதி அந்த கிராமம் முடக்கப்பட்டது. இந் நிலையில் அந்த கிராமம் இன்னும் மூன்று நாட்களுக்கு முற்றாக முடக்கப்பட்டிருக்கும் என அறிய முடிகின்றது. அந்த மூன்று நாட்களின் பின்னர் அந்த ஊர் சாதாரண ஊரடங்கு நிலைமையின் கீழ் கொண்டுவரப்படக் கூடிய சாத்தியங்கள் இருந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்தில் 2 ஆவது கொரோனா தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அது குறித்த அடையாளங்கள் தனிமைப் படுத்தலின் இறுதி நான்கு நாட்களில் பெரும்பாலும் காட்டும் என சுகாதார துறையினர் தெரிவிக்கும் நிலையில், தற்போது 14 நாட்கள் முடக்கப்பட்ட அரியாலை பகுதியின் இறுதி நாட்கள் நகர்ந்து வருகின்றன.

குருநாகல் தொற்றாளர்

குருநாகல் போதனா வைத்தியசாலையில் நேற்று 48 வயதுடைய பெண் ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். வாரியபொல, கட்டுபொத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெக்குனுகொல்ல பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முன்னர் புத்தளம் நாத்தாண்டி பகுதியில் அடையாளம் காணப்பட்ட இந்தியா சென்று திரும்பிய தொற்றாளர் குடும்பத்தினர், குறித்த பெண்ணின் வீட்டுக்கு வந்து சென்றுள்ள நிலையிலேயே, நேற்று முன் தினம் கட்டுபொத்த பிரதேச வைத்தியசாலையில் இருந்து அப்பெண் கொரோனா தொற்று சந்தேகத்தில் குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும், அங்கு முன்னெடுத்த பரிசோதனைகளின் போது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் குருணாகல் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சந்தன கெந்தன்கமுவ தெரிவித்தார்.

குறித்த பெண் அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு நேற்று மாலை மாற்றப்பட்டார்.

மருதானை தொற்றாளர்:

நேற்று அடையாளம் காணப்பட்ட மூன்றாவது தொற்றாளர் கொழும்பு மருதானை பகுதியைச் சேர்ந்தவராவார். பொரளை மருத்துவ ஆய்வு கூடத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் போதே அவருக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் இதுவரை இலங்கையில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 33 ஆகும். இதில் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் 12 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனை தவிர பத்தரமுல்லையில் இருவர் , பொரலஸ்கமுவை, கொத்தட்டுவ பகுதிகளில் தலா ஒருவர், கொலன்னாவையில் மூவர் மஹரகமவில் இருவர், நுகேகொடையில் நால்வர் இரத்மலானையில் நால்வர் மற்றும் தெஹிவளையில் ஐவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கு அடுத்தபடியாக அதிக தொற்றாளர்கள் புத்தளம் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அங்கு அடையாளம் காணப்பட்டோர் எண்ணிக்கை 25 ஆகும். அதில் நேற்று முன் தினம் புத்தளத்தின் கடையான்குளம் மற்றும் நாத்தாண்டி பகுதிகளில் அடையாளம் காணப்பட்டோரும் உள்ளடங்குகின்றனர். அம்மாவட்டத்தை பொறுத்தவரை, நாத்தாண்டி, மாரவில, மஹவெவ, புத்தளம் பகுதிகளிலேயே அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளானர்.

இதனிடையே நேற்று வரை நாடளாவிய ரீதியில் உள்ள 25 வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் சந்தேகத்தில் மட்டும் 231 பேர் சிகிச்சைப் பெற்று வருவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்தது. இவ்வாறு கொரோனா சந்தேகத்தில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை நேற்று முற்பகல் 10.00 மனியாகும்போது முடிவடைந்த 48 மணி நேரத்தில் 117 ஆல் அதிகரித்துள்ளதாக அந்த பிரிவின் புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் பரிசோதனை நடவடிக்கைகளை விரிவுபடுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க கூறினார்.

கொரோனா... (தொடர்ச்சி)

பற்றியும் ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலின் போது கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதைத் தடுப்பதற்காக அரசாங்கம் இது வரையில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஆழமாகத் தெளிவுபடுத்தினார். இது வரையில் வைரஸால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் தனிமைப்படுத்தல் மருத்துவ கண்காணிப்பு நிலையங்களிலிருந்தே இணங்காணப்பட்டவர்கள் அல்லது அதற்கு முன்னர் வைரஸ் தொற்றுக்குள்ளான நபர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் என்பது வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு பெரும் உதவியாக அமைந்தது என்று இதன் போது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

மக்கள் தமது வாழ்க்கையை வழமைபோல் கொண்டு செல்வதற்கு அத்தியாவசிய சேவைகள் உணவு பொருட்கள் மருந்துகள் பகிர்ந்தளிப்பதற்கான பொறிமுறை மற்றும் செயலணியினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அதன் தலைவர் மற்றும் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி பசில் ராஜபக்ச இதன் போது தெளிவுபடுத்தினார். நாட்டில் இணங்காணப்பட்டுள்ள 65 இலட்சம் குடும்பங்களில் 53 இலட்சம் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் இம் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் இதன் போது பசில் ராஜபக்ச தெளிவுபடுத்தினார்.

கொரோனா வைரஸ் ஒழிப்பிற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சாதாரண மக்களின் வாழ்க்கை பாதிப்பிற்குள்ளாகக் கூடாது என்பதே இரு தரப்பினரதும் கருத்தாகக் காணப்பட்டது. வேலைத்திட்டங்கள் அரசியல் சார்பற்றதாக காணப்பட வேண்டும் என்ற கருத்திற்கு இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையாதவாறு தொடர்ச்சியாகப் பேணுவதற்கு அரச சேவையாளர்கள் வியாபாரிகள் மற்றும் பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புபட்டோர் சுயதொழில் செய்பவர்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்களுக்கு வழங்கப்படக் கூடிய தீர்வுகள் பற்றி இருதரப்பிலும் அவதானம் செலுத்தப் பட்டது.

வைத்தியர்கள் உள்ளிட்ட சுகதாரத்துறையினர் முப்படையினர் பொலிஸார் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு பிரிவினரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு இரு தரப்பும் நன்றி தெரிவித்தனர். கலந்துரையாடலில் பங்குபற்றிய குழு மாவட்ட ரீதியில் கட்சி உறுப்பினர்களுக்கு தௌிவுபடுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிக நேரம் இடம்பெற்ற இக்கலந்துரையாடல் மிக சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நிறைவடைந்தது.

இந்த கலந்துரையாடலில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சர்களான தினேஷ்குணவர்தன, நிமல் சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ச ,பந்துல குணவர்தன , ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, டலஸ் அழகப்பெரும உள்ளிட்டோரும் ஐக்கிய தேசிய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ருவன் விஜேவர்தன, தயா கமகே பாலித ரங்கே பண்டார, நவீன் திஸாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தர நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆட்டிகல மற்றும் மத்திய வங்கி ஆளுனர் பேராசிரியர் டபிள்யு.டி.லக் ஷ்மன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நடுக்கடலில்... (தொடர்ச்சி)

எடுத்துச் செல்லப்பட்டது என சந்தேகிக்கத்தக்க பல தகவல்களை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் வெளிப்படுத்திக்கொண்டுள்ளனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளனர்.

கரையில் இருந்து 835 கிலோ மீற்றர் தூரத்தில் ஆழ் கடலில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களும், அதனை கடத்திய ஈரானிய படகும், அதில் பயணித்த 9 பாகிஸ்தான் கடத்தல்காரர்களும் திக்கோவிட்ட துறைமுகத்துக்கு நேற்று அழைத்து வரப்பட்டு பொலிஸ் போதைப் பொருள் தற்காப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்ப்ட்டனர்.

எனினும் போதைப் பொருட்களும் வழக்குப் பொருட்கள் தடையங்களும் பொலிஸாரால் நேற்று பொறுப்பேற்கப் பட்ட நிலையில், 9 பாகிஸ்தான் சந்தேக நபர்களும்,கொரோனா தொடர்பில் கடற் படையினரின் நேரடி கட்டுப்பாட்டில் தங்காலையில் தனிமைபப்டுத்தல் நிலையமொன்றில் தடுத்து வைத்து தனிமைபப் டுத்தல், தொற்று நீக்கல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த சுற்றிவலைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையின் சயுர நடவடிக்கை கப்பலின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட அனைத்து கடற்படையினரும் 14 நாட்களுக்கு விஷேட தனிமைபப்படுத்தல் தொற்று நீக்கல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சளர் லெப்டினன் கொமாண்டர் இசுரு சூரிய பண்டார கூறினார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்பிருந்தே கடற்படைக்கு கிடைக்கப் பெற்ற உளவுத் தகவல் ஒன்றினை மையபப்டுத்தி, சர்வதேச நிறுவனம் ஒன்றூடாக பெற்றுக்கொள்ளப் பட்ட செய்மதி புகைப்படங்களின் உதவியோடு கடற்படையின் சயுர கப்பல் தென் கடலில் தீவிர கன்கானிப்பில் ஈடுபட்டிருந்தது. இந் நிலையிலேயே சந்தேகத்துக்கு இடமான குறித்த ஈரானிய படகு, கொடிகள் எதுவுமின்றி இருந்த போது, சயுர கப்பலின் கட்டளை அதிகாரியின் உத்தரவுக்கு அமைய சுற்றி வலைக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன்போதே, அங்கு போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

ஐஸ் எனபப்டும் மெதம்பிட்டமைன் போதைப் பொருள் 605 கிலோவும், இதற்கு முன்னர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டிராத கெட்டமைன் எனப்படும் ஒருவகை புதிய போதைப் பொருள் 579 கிலோவும் மேலும் பாபுல், அடையாளம் காணப்படாத போதை மாத்திரைகள் 100 கிராமும் கைப்பற்றப்ப்ட்டிருந்தன.

நேற்று இவை அனைத்தும் திக்கோவிட்ட துறைமுகத்துக்கு எடுத்து வரப்பட்ட நிலையில், பாதுகாப்பு செயலர் மேஜர் ஜெனரால் கமல் குணரத்ன, கடற்படை தளப்தி வைஸ் அட்மிரால் பியல் டி சில்வா, பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்ஜீவ மெதவத்த உள்ளிட்டோர் அங்கு சென்றிருந்தனர். இந் நிலையிலேயே இந்த சம்பவம் குறித்து கருத்து வௌியிட்ட கடற்படை தளபதி வைஸ் அட்மிரால் பியல் டி சில்வா, இப்போதைப் பொருட்களில் ஒரு பகுதி இலங்கைக்குள் கடத்தும் நோக்கிலும் ஏனையவை வௌிநாடொன்றின் கடத்தல்காரர் ஒருவருக்கு வழங்கபப்டும் நோக்கிலும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என குறிப்பிட்டார்.

ஊரடங்கை... (தொடர்ச்சி)

கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிமுதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிறு காலவகாசம் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு எட்டு மணித்தியாலம் கால அவகாசம் வழங்கப்பட்டு மீண்டும் ஊரடங்கு நீடிக்கப்பட்டு வருகின்றது.இதேவேளை யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ,கம்பஹா,களுத்துறை , கண்டி , புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு மீள் அறிவிக்கும் வரை ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ளதுடன், சில பகுதிகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

இக்காலக்கட்டத்தில் அதனை மீறும் வகையில் செயற்படுபவர்களை கைது செய்வதாக பொலிஸார் அறிவித்திருந்த போதும் சிலர் அதனை கருத்திற் கொள்ளாது செயற் பட்டு வருகின்றனர். இவ்வாறு செயற்பட்ட பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இதேவேளை இவ்வாறு கைது செய்யப்படும்நபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு கம்பஹா,களுத்துறை , கண்டி, புத்தளம் ஆகிய பகுதிகளைத் தவிர ஏனையப்பகுதிகளில் காலை 6 மணிக்கு ஊரடங்கு தளர்க்கப்பட்டிருந்ததுடன்,பிற்பகல் 2 மணிமுதல் மீண்டும் அமுல் படுத்தப்பட்டது.

அதற்கமைய நேற்று புதன்கிழமை காலை 6 மணிமுதல் பிற்பகல் 12 மணிவரையான 6 மணித்தியாலத்திற்குள் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டிருந்த ஆறு மாவட்டங்களில் மாத்திரம் 288 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 71 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டு கடந்துள்ள 12 நாட்களுக்குள் மாத்திரம் 8739 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன்,இவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் , கார், முச்சக்கர வண்டி உள்ளிட்ட 2149 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை பொலிஸார் பொறுப் பேற்பதுடன், அதனை வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னரே கையளிக்கப்படும்.இதேவேளை பிரதான வீதிகள் மாத்திரமின்றி கிளைவீதிகளிலும் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏப்ரல் 30 க்கு... (தொடர்ச்சி)

பரீட்சை ஆகியவற்றை பிற்போட எந்த தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கல்வி அமைச்சர் டலஸ் அழகபெரும இந்த தகவல்களை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

கல்வி பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளை மார்ச் மாதம் நடுப்பகுதியில் வெளியிடவே தீர்மானம் இருந்தது. எனினும் நாட்டில் தற்போது நிலவும் சுழலை கருத்தில் கொண்டு பெறுபேறுகளை வழங்க வாய்ப்புகள் கிடைக்கவில்லை. எனினும் இப்போது வரையில் சகல வினாத்தாள்களும் ' பரிசீலனை செய்யப்பட்டுவிட்டன. ஒருசில வேலைத்திட்டங்கள் மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.ஆகவே 35 குழுக்கள் தொடர்ச்சியாக இரண்டு வாரகால பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. பரீட்சைகள் திணைக்களம் அதற்கானவேலைத்திட்டங்களை முன்னெடுக்க தயாரா கவும் உள்ளனர் . ஆகவே இந்த நெருக்கடி சுழலிலும் இந்தக் குழுவை வரவழைத்து பிரத்தியேகமாக ஹோட்டல் ஒன்றினை ஏற்பாடு செய்து தொடர்ச்சியான வினாத்தாள் திருத்தல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை வெளியிட நாம் தீர்மானம் எடுத்துள்ளோம்.

அதேபோல் உயர்தர பரீட்சைகள் பிற்போடப்படும் என்ற பொய்யான செய்திகள் வெளிவந்துகொண்டுள்ளன. எனினும் கடந்த மற்றும் இந்த ஆண்டுகளில் உயர்தர கல்வியை கற்கும் மாணவர்களுக்கு பாரிய நெருக்கடியான காலமாகவே அமைந்தது. கடந்த ஆண்டு ஈஸ்டர் தாக்குதலை அடுத்து மூன்றுமாத காலம் அவர்களால் கல்வியை முறையாக தொடர முடியாத நிலை இருந்தது. இப்போது கொரோனா வைரஸ் காரணமாக அதே நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆனால் எக்காரணம் கொண்டும் மாணவர்களின் மனநிலையை பாதிக்கும் எந்தவித செயற்பாடுகளையும் நாம் முன்னெடுக்க இடமளிக்க மாட்டோம். அதேபோல் உயர்தர பரிட்சைகள் ஒருபோதும் பிற்போடப்படாது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன என்ற பொய்யான கருத்துக்கள் நிலவுகின்றது. ஆனால் புலமைப்பரிசில் பரீட்சை பிற்போடப்படாது. உரிய காலத்தில் பரீட்சைகளை நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி அதற்கான சகல அனுமதியையும் வழங்கியுள்ளார் என அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய.... (தொடர்ச்சி)

கூட்டுமாறு கோருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரமும் இராணுவத்தினரும் எதேச்சதிகாரமாக செயற்படாமல் பாராளுமன்றத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் வினவியபோதே அரசாங்கத்தின் பேச்சாளர் இதனை குறிப்பிட்டார்.

அத்துடன் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட சஜித் தரப்பினரும் பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு வலியுறுத்திவருகி்ன்றனர். இந்த நிலையில் இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை கெஹெலிய ரம்புக்வெல மேலும் குறிப்பிடுகையில்

நாடு கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாரிய அபாயததில் இருக்கின்றது. எனவே நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு இதிலிருந்து மீளவேண்டியுள்ளது. இந்த நிலையில் நாம் எதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்ற விடயத்தை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

தற்போதைய சூழலில் நாங்கள் இந்த அனர்த்தத்திலிருந்து மீண்டுவரவே முன்னுரிமை அளிக்கவேண்டும். மாறாக அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒரு பக்கம் வைத்துவிட்டு நாட்டின் தற்போதைய தேசிய முன்னுரிமை என்ன என்பதனை புரிந்து செயற்பட வேண்டும்.

ஆனால் எதிர்க்கட்சியினர் தற்போதைய நிலையில் அரசியல் சுயலாபத்தை தேடுவதற்காக பாராளுமன்றத்தை கூட்டுமாறு கோருகின்றனர். எனினும் எதிர்க்கட்சியினருக்கும் தற்போதைய கட்டத்தில் எதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்பது தெரியும். ஆனால் அரசியல் சுயலாபம் அடைவதற்காக இவ்வாறு செயற்படுகின்றனர்.

எப்படியிருப்பினும் இந்த நேரத்தில் எதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்பது மக்களுக்கு தெரியும். இந்த அனர்த்தத்திலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதே தற்போது முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய விடயமாகும். அதற்கே அரசாங்கம் முன்னுரிமை அளித்து செயற்படுகின்றது. இது அரசியலுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்படும் நேரமல்ல என்பது எதிர்க்கட்சியினருக்கு தெரியும். எனினும் அவர்கள் அவற்றை வலியுறுத்துவதற்கான காரணம் எமக்கு தெரியும்.

இதேவேளை நாட்டில் அவசரகால சட்டம் பிறப்பிக்கப்பட்டால் ஒரு மாதத்துக்குள் பாராளுமன்றத்தில் அனுமதி பெறப்படவேண்டும். ஆனால் பொலிஸ் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த அவ்வாறு பாராளுமன்ற அனுமதி தேவையில்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகள் சடலங்களை வைத்து அரசியல் செய்யக் கூடாது

ஹக்கீமின் கண்டன அறிக்கைக்கு ரத்ன தேரர் கடும் எதிர்ப்பு

(ஆர்.யசி)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடே பாரிய நெருக்கடியில் உள்ள நிலையில் சடலங்களை வைத்து மதவாத, இனவாத அரசியலை செய்ய எவரும் முயற்சிக்க வேண்டாம். இஸ்லாமிய அரசியல்வாதிகள் நிலைமைகளை புரிந்துகொண்டு செயற்படுங்கள் என்று முன்னாள் எம்.பி. அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நாடே கொரோனா தொற்றுநோய் குறித்த அச்சத்தில் இருக்கும் இவ்வேளையில் மத சம்பிரதாய முறைகளில் சடலங்களை நல்லடக்கம் செய்ய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த இரண்டாவது நபரின் சடலம் இஸ்லாமிய சமய வரையறைகளுக்கு முரணான வகையில் எரிக்கப்பட்டது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தமது பலத்த கண்டனத்தை வெளியிட்டுள்ள நிலையில் அது குறித்து தனது கருத்தை முன்வைக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவல் முழு உலகையுமே பலவீனப்படுத்தியுள்ளது. இலங்கையிலும் மிகப்பெரிய அச்சுறுத்தல் நிலவுகின்றது. இருவர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் அதிகமான தொற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாடாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையும் கட்டாயமும் எமக்கு உள்ளது. நாட்டில் இனவாதம், மதவாதம் எதையும் தூண்டிவிடாது. தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து புரிந்துணர்வுடன் அரசாங்கம் மற்றும் வைத்தியத்துறையினர் முன்வைக்கும் அறிவுரைகளை பின்பற்றி எமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது கடமையாகும்.

அவ்வாறு இருக்கையில் இரண்டாவதாக நீர்கொழும்பு பிரதேசத்தில் உயிரிழந்த முஸ்லிம் நபர் குறித்து முன்னாள் அமைச்சர் ஹக்கீம் முன்வைத்து வருகின்ற கருத்துக்கள் மிகவும் மோசமானதாக அமைந்துள்ளன. இஸ்லாமிய மத சம்பிரதாயங்களுக்கு அமைய அவரது உடலை நல்லடக்கம் செய்ய வேண்டும் என கூறுகின்றார். இப்போதுள்ள சூழ்நிலையில் மக்கள் மீது கொரோனா வைரஸ் தொற்றக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்ற நிலையில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமா? அவ்வாறான சூழ்நிலையிலா நாம் இருக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் நோய் தொற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

அதுமட்டும் அல்ல இப்போதுள்ள சூழலில் இவ்வாறான காரணிகளை கருத்தில் கொண்டு முஸ்லிம், சிங்களம் என மக்கள் பிரிவினைவாதத்தை கையில் எடுக்கவும் முடியாது. அவ்வாறு இருக்கையில் மக்கள் பிரதிநிதி ஒருவர் இவ்வாறான கருத்துக்களை முன்வைப்பது குறித்து நாம் எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம். அதிருப்தியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். குறிப்பாக மத சம்பிரதாய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றால் அதனை எப்போதும் எந்த இடத்திலும் முன்னெடுக்க முடியும். ஆனால் இப்போது இருக்கும் சூழலில் நோயற்ற சூழலை உருவாக்கிக்கொள்வதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் மற்றும் மருத்துவத்துறையினர் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தி அரசாங்கம் தடைகளின்றி பயணிக்க இடமளிக்க வேண்டும். அதைவிடுத்து சடலங்களை வைத்து அரசியல் செய்யவோ சந்தர்ப்ப சூழ்நிலைகளை பார்த்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்ட வேண்டாம் என அனைவருக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். புத்திசாலி முஸ்லிம் மக்கள் கூட இப்போதுள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டு நாடாக ஒன்றிணைந்து பயணிக்கின்ற நிலையில் அரசியல் சுய இலாபங்களுக்காக இஸ்லாமிய அரசியல்வாதிகள் மதவாதத்தை தூண்ட வேண்டாம் எனவும் அவர் கூறினார்.

பரிசுத்த வார வழிபாடுகள் கொழும்பு பேராயர் இல்லத்திலிருந்து ஒளிபரப்பு

(எம்.கீதன்)

கிறிஸ்தவர்களினால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் தவக்காலத்தின் பரிசுத்தவார வழிபாடுகள் கொழும்பு பேராயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்திலிருந்து நேரடியாக தொலைக்காட்சிகள் ஊடாக மக்களுக்கு ஒளிரப்பப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக பொதுமக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் வகையில் அரசாங்கத்தினால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும் வழிபாடுகள் நடைபெறுவதை அந்தந்த மறைமாவட்ட ஆயர்கள் தடைசெய்துள்ளனர். இந்நிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் பரிசுத்த வார வழிபாடுகளை ஆலயங்களில் நடத்துவதை நிறுத்தும் தீர்மானத்தை இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் எடுத்திருந்தது.

இந்நிலையில் பரிசுத்த வார வழிபாடுகளை கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்திலிருந்து அந்த வழிபாடுகளை மக்கள் தொலைக்காட்சி ஊடாக பார்ப்பதற்கான வசதிகளை பேராயர் இல்லம் மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் குருத்தோலை வழிபாடுகள் காலை 7.30 மணிக்கு சிங்கள, ஆங்கில மொழிகளில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நடைபெறும். தொடர்ந்து காலை 9.30 மணிக்கு தமிழ் மொழியில் அருட்திரு மனோ குமரன் அடிகளார் குருத்தோலை வழிபாடுகளை நடத்துவார். இவ் வழிபாடுகள் சிரச மற்றும் சக்தி தொலைக்காட்சிகள் வழியாக ஒளிபரப்பப்படும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி பெரிய வியாழன் வழிபாடுகள் மாலை 4.45 மணிக்கு பொது வழிபாடாக ஆரம்பமாகும். சிங்கள மொழியில் பதுளை மறைமாவட்ட ஆயரும் கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் தலைவருமான வின்சன்ட் பெர்னாண்டோ ஆண்டகையும், ஆங்கில மொழியில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், தமிழ் மொழியில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல் ஆண்டகையும் நடத்துவர். இந்த வழிபாடுகள் அனைத்தும் ஐ.ரி.என்., வசந்தம், ரூபவாஹினி தொலைக்காட்சிகள் அலைவரிசைகளில் ஒளிரப்புச் செய்யப்படும்.

10 ஆம் திகதி பெரியவெள்ளி வழிபாடுகள் பிற்பகல் 3 மணிக்கு பொதுவழிபாடாக ஆரம்பமாகும். சிங்கள மொழியில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், தமிழ் மொழியில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல் ஆண்டகையும், ஆங்கில மொழியில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகையும் நடத்துவர். இந்த வழிபாடுகள் அனைத்தும் ஐ.ரி.என்., வசந்தம், ரூபவாஹினி தொலைக்காட்சிகளின் அலைவரிசைகள் ஊடாக ஒளிரப்புச் செய்யப்படும்.

11 ஆம் திகதி பெரிய சனிக்கிழமை பாஸ்கா திருவிழிப்பு இரவு வழிபாடுகள் 10 மணிக்கு ஆரம்பமாகும். சிங்கள மொழியில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், தமிழ் மொழியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகையும், ஆங்கில மொழியில் காலி மறைமாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க ஆண்டகையும் நடத்துவர். இந்த வழிபாடுகள் அனைத்தும் ரூபவாஹினி, நேத்ரா மற்றும் வேர்பம் தொலைக்காட்சிகளின் அலைவரிசைகள் ஊடாக ஒளிபரப்புச் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தை மீறி கூட்டாக தொழுகை நடத்தியமை கவலைக்குரியது

வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில்

நாட்டிலுள்ள சில முஸ்லிம் பகுதிகளில் பள்ளிவாசல்களில் ஊரடங்குச் சட்டத்தை மீறி கூட்டாக தொழுகை நடத்தப்பட்டமை கவலைக்குரியதாகும். அதேபோன்று முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஊர்களில் ஊரடங்குச் சட்டத்தை மதிக்காது வெளியில் நடமாடுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. சட்டத்திற்கு மதிப்பளிக்காத இவ்வாறான செயற்பாடுகள் இனவாத சக்திகளுக்கு தீனி போடுவதாகவே அமையும் என்பதை மறந்து விடக்கூடாது என்று வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது :

கொரோனா அச்சுறுத்தலை முறியடித்து நாட்டை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருவதை நாம் அறிவோம். ஜனாதிபதி கோத்தபாயவின் திறமைமிக்க தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் அரசாங்கம் மிகவும் வெற்றிகரமான முறையில் இந்த அனர்த்தத்திலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. உலக சுகாதார நிறுவனம் உட்பட பல சர்வதேச நாடுகளும் நிறுவனங்களும் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளமை நமது நாட்டின் தலைமைத்தவத்துக்கு கிடைத்துள்ள வெற்றியும் அங்கீகாரமுமாகும்.

அதேபோன்று பிரதமர் மஹிந்த மற்றும் கொரோனா கட்டுப்படுத்தலுக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை முகாமை செய்வதிலும் குறிப்பாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படாதவாறு சகல மக்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சென்றவடைவதற்குமான ஏற்பாடுகளை இரவு, பகலாக முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவது அவசியமாகும்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் அறிவுறுத்தலுக்கிணங்க முஸ்லிம் பள்ளிவாசல்களின் நடவடிக்கைகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே அன்றி நிரந்தரமாக அல்ல. நிலைமைகள் சீரடைந்ததும் விரைவில் வழமை போன்று எமது மார்க்க கடமைகளை முன்னெடுக்க முடியும்.

அண்மைய நாட்களில் நாட்டிலுள்ள சில முஸ்லிம் பகுதிகளில் பள்ளிவாசல்களில் ஊரடங்குச் சட்டத்தை மீறி கூட்டாக தொழுகை நடத்தப்பட்டமை கவலைக்குரியதாகும்.

அதேபோன்று முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஊர்களில் ஊரடங்குச் சட்டத்தை மதிக்காது வெளியில் நடமாடித் திரிவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

சட்டத்திற்கு மதிப்பளிக்காத நமது இவ்வாறான செயற்பாடுகள் இனவாத சக்திகளுக்கு தீனி போடுவதாகவே அமையும் என்பதை மறந்து விடக்கூடாது. கடந்த காலங்களில் இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக மிகவும் திட்டமிட்ட வகையில் இனவாதப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இன்று கொரோனா விவகாரத்தை மையப்படுத்தியும் முஸ்லிம்களைக் குறிவைத்து பிரசாரங்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு நாமும் உடந்தையாக இருந்து விடக்கூடாது என வினயமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அந்தவகையில் இந்த இக்கட்டான காலப்பகுதியில் அனைவரும் இன மத பேதங்களை மறந்து ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையாக இருந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

மத சம்பிரதாயங்களை பின்பற்றவில்லை என்பது பாரதூரத்தன்மையின் அறியாமையின் வெளிப்பாடு

சிறிலங்கா சுதந்திர கட்சி தெரிவிப்பு

(எம்.மனோசித்ரா)

நாட்டை பெரிதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள கொரோனா வைரஸ் பரவலைக் கொண்டு சிலர் அரசியல் செய்ய முற்படுவது கவலைக்குரிய விடயமாகும். வைரஸ் பரவலின் பாரதூரத்தன்மையை விளங்கிக் கொள்ளாமையின் காரணமாகவே இஸ்லாமிய மத சம்பிரதாயங்களை பின்பற்றி உயிரிழந்த கொரோனா வைரஸ் நோயாளியின் உடலம் அடக்கம் செய்யப்பட வேண்டும் போன்ற கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த இஸ்லாமிய நபர் மத கோட்பாடுகளை மீறி தகனம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றமை குறித்த சுதந்திர கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

இஸ்லாம் மதத்தில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்கள் கலாசாரங்கள் என்பவற்றுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். எனினும் தற்போது நாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மத ரீதியான வழிமுறைகளை விட மருத்துவத்துறையினரின் ஆலோசனைகளே பின்பற்றப்பட வேண்டும்.

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி பதிவாகிய முதலாவது மரணம் ஒரு கத்தோலிக்க சகோதரருடையதாகும். அவருடைய சடலமும் இதே போன்று மருத்துவ ஆலோசனைகளின் பிரகாரமே தகனம் செய்யப்பட்டது. எனினும் கத்தோலிக்க மதத்தில் இறப்பு ஏற்பட்டால் சடலத்தை தேவாலயத்திற்கு எடுத்துச் சென்று பிரார்த்தனைகளின் பின்னரே அடக்கம் செய்யப்படும். அவ்வாறு எந்த சம்பிரதாய முறைமையும் அதில் பின்பற்றப்படவில்லை.

இதே போன்று பௌத்த மதம் அல்லது பிறிதொரு மதத்தை சார்ந்த மரணங்கள் பதிவானாலும் மருத்துவ ஆலோசனைகளே பின்பற்றப்படும். தகனம் செய்யப்படும் இடத்திலிருப்பவர்கள் தமது பாதுகாப்பு ஆடைகளையும் எரிப்பதையும் செய்திகளில் காணக் கூடியதாக உள்ளது. எனவே நடைமுறையைப் புரிந்து அனைவரும் செயற்பட வேண்டும். இவற்றைக் கொண்டு அரசியல் இலாபம்தேட முற்படக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும் என்றார்.

யாழில் மற்றொருவருக்கும் கொரோனா

(தி.சோபிதன்)

யாழ்ப்பாணத்தில் மற்றொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மத போதகர் ஒருவருக்கே இவ்வாறு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலை அடுத்து கொழும்பு நகரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 16 வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழியாக பயணிக்கும் வாகனங்கள் சோதனை செய்யப்படுவதை படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு : ஜே. சுஜீவகுமார்)

சுபயோகம்

02.04.2020 ஸ்ரீவிகாரி வருடம் பங்குனி மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை

சுக்கிலபட்ச நவமி திதி முன்னிரவு 9.31 வரை, அதன்மேல் தசமி திதி, புனர்பூசம் நட்சத்திரம் பகல் 2.36 வரை, பின்னர் பூசம் நட்சத்திரம், சிராத்த திதி வளர்பிறை நவமி, அமிர்தயோகம், சமநோக்கு நாள், சந்திராஷ்டம நட்சத்திரங்கள் மூலம், பூராடம், சுபநேரங்கள் பகல் 10.30 –11.30, ராகுகாலம் 1.30 –3.00, எமகண்டம் 6.00 –7.30, குளிகைகாலம் 9.00 – 10.30, வாரசூலம் தெற்கு, (பரிகாரம் தைலம்)

<table>
<tr><td>சூரி</td><td></td><td>சுக்</td><td>ராகு சந்</td></tr>
<tr><td>புத</td><td colspan="2" rowspan="2">தினசரி கிரகநிலை
பங்குனி 20 வியாழன்
காலை 8.44
கடக சந்திரன்</td><td></td></tr>
<tr><td>செவ் குரு</td><td></td></tr>
<tr><td>சனி கேது</td><td></td><td></td><td></td></tr>
</table>

மேடம் – அபிவிருத்தி, மேன்மை
இடபம் – செல்வாக்கு, பெருமை
மிதுனம் – உழைப்பு, ஆதரவு
கடகம் – உதவி, நட்பு
சிம்மம் – உயர்வு, மேன்மை
கன்னி – புகழ், செல்வாக்கு
துலாம் – பக்தி, தரிசனம்
விருச்சிகம் – போட்டி, ஜெயம்
தனுசு – துணிவு, தெளிவு
மகரம் – சுபநிகழ்ச்சி, மகிழ்ச்சி
கும்பம் – கோபம், அவமானம்
மீனம் – சுபம், மங்களம்

சந்திரன், சூரியன் கிரகங்களின் ஆதிக்க நாளின்று
அதிர்ஷ்ட எண்கள் – 1, 5, 7
பொருந்தா எண்கள் – 9, 8
அதிர்ஷ்ட வர்ணங்கள் – மஞ்சள், லேசான பச்சை

இராமரத்தினம் ஜோதி
(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)

நாட்டின் அவசரகால நிலையை கருத்திற்கொண்டு பாராளுமன்றம் உடனடியாக கூட்டப்பட வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தல்

(திருகோணமலை நகர்)

நாட்டின் அவசரகால நிலையை கருத்திற்கொண்டு பாராளுமன்றம் உடனடியாக கூட்டப்பட வேண்டும். மக்களின் அவசர நிலை தொடர்பிலும் அவசிய நிலை தொடர்பிலும் இன்றைய நெருக்கடி நிலை பற்றியும் பாராளுமன்றில் கலந்துரையாடியே தீர்மானங்கள் எடுக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சிறுபான்மைக் கட்சிகள் உட்பட நாட்டின் தேசியக் கட்சிகள் பலவும் இக்கோரிக்கையை விடுத்து வருகின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் பாராளுமன்றம் கூட்டப்படுவதே ஒரே வழியாகும். திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் நெருக்கடி நிலை குறித்தும் அத்தியாவசிய மற்றும் அடிப்படைப் பொருட்களின் தட்டுப்பாடு குறித்தும் அவரிடம் தொடர்பு கொண்டு வினவியபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் நெருக்கடி நிலை குறித்து அனைத்துக்கட்சி கூட்டம் பிரதமரினால் அண்மையில் கூட்டப்பட்டது. அக்கூட்டத்துக்கு கூட்டமைப்பின் சார்பில் எம். ஏ. சுமந்திரன் கலந்து கொண்டிருந்தார். பாராளுமன்றத்தை உடன் கூட்டும்படி சிறுபான்மைக் கட்சிகள் கோரிக்கை விடுத்ததாக அறிகிறேன். இன்று ஒரு தேசிய நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவசரம் கலந்த நாட்டின் சூழ்நிலை காரணமாக பாராளுமன்றைக் கூட்டி தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்வதற்கு ஒரேவழி பாராளுமன்றை உடனடியாக கூட்டுவதேயாகும். மக்களின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் தமது பிரதேசங்களுக்குச் சென்று ஆற்றக்கூடிய அவசர சேவைகளை செய்ய முடியும். அதற்கு வேண்டிய அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

நாட்டில் உள்ள மாவட்டங்கள் மாத்திரமல்ல கிராமங்களும் முடங்கிப் போயிருக்கின்றன. சில கிராமங்கள் கொடிய நோய் காரணமாக முடக்கப்பட்டுள்ளன. திருகோணமலையில் கிண்ணியா நகரில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி பற்றியும் அறிந்துள்ளேன். நெருக்கடியும் அவசரமும் நிறைந்த இக்காலப்பகுதியில் மக்களின் அவசியங்களை கருத்திற்கொண்டு ஒவ்வொருவரும் செயற்படவேண்டும்.

நான் பாராளுமன்றை கூட்டுவது தொடர்பில் மாவை. சேனாதிராஜா போன்றவர்களுடன் தொடர்பு கொண்டு விளக்கியுள்ளேன். இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு தொடர்பில் பஷில் ராஜபக்ஷ உடனும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருடனும் தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளை விரைவுபடுத்தும் படி கூறியுள்ளேன் என சம்பந்தர் தெரிவித்தார்.

இதேவேளை கிழக்கு மாகாண மற்றும் திருகோணமலை மாவட்ட நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் கிழக்குமாகாண ஆளுநருடன் பலர் தொடர்பு கொண்டபோது உரிய பயனை பெறவில்லை என சிலர் கருத்து தெரிவித்ததோடு அரச அதிபருடனும் தொடர்பு கொள்வதும் கஷ்டமாகவுள்ளது எனவும் பல பிரமுகர்களும் அரசியல் தலைவர்களும் தெரிவித்தார்கள்.

திருகோணமலை மாவட்ட வடக்கு கிராமங்களான தென்னைமரவடி, புல்மோட்டை, திரியாய் மற்றும் நிலாவெளி போன்ற கிராம மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெறுவதற்காக பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும் இதே போன்றே மூதூர், வெருகல், ஈச்சிலம்பற்று, இலங்கைத் துறை முகத்துவாரம், நல்லூர், பள்ளிக்குடியிருப்பு மற்றும் பாட்டாளிபுரம் போன்ற கிராமத்து மக்கள் உணவுப் பொருட்களை பெறுவதில் பல கஷ்டங்களை அனுபவிப்பதோடு உலர் உணவுப் பொருட்களை பெறுவதற்கும் முடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலை விட கொரோனா பிடியிலிருந்து மீள்வதே இன்றைய முக்கிய தேவையாகும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாம் மீளவேண்டுமானால் நோய்க்கான மருந்து மாத்திரைகள் உண்பதை விட அவதானமாக வீட்டில் இருப்பதே சரியான தீர்வு என்பதை நாம் புரிந்து செயல்பட வேண்டும். தேர்தலை விடவும் கொரோனா நோயிலிருந்து மீள்வதே இன்றைய முக்கிய தேவையாகும் என இலங்கை தமிழரசுக் கட்சி பட்டிருப்புத் தொகுதி தலைவரும் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் மற்றும் பொதுத் தேர்தல் நிலைவரம் தொடர்பாக ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் எதிர்வரும் ஆகஸ்ட் 27 ஆம் திகதி வரை இருந்த போதிலும் அவசர அவசரமாக பாராளு மன்றத்தை ஜனாதிபதி கலைத்தார். தற்போது இலங்கையில் உருவாகியுள்ள இக்கட்டான சூழலில் தேர்தலை நடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

எவருமே எதிர்பார்க்காத கொடூரமான கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு எமது நாடும் முகம் கொடுக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தேர்தலை விடவும் கொரோனா நோய் தாக்கத்தில் இருந்து எம்மை நாமே பாதுகாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்நிலையில் வைத்திய ஆலோசனைகளை சரிவர நாம் அனைவரும் கடைப்பிடித்து நடக்க வேண்டும் . குறிப்பாக ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வீட்டில் இருந்து சுய ஆரோக்கியத்தை கடைப்பிடித்தால் மட்டுமே இந்நோய் தாக்கத்தில் இருந்து நாம், நமது குடும்பம் நமது ஊர், நமது நாடு எல்லாவற்றையும் பாதுகாக்கமுடியும், அவ்வாறு செய்யாமல் வேறு நோய்களைப் போன்று இந்த நோயை கணக்கெடுக்காமல் அலட்சியமாக இருந்தால் எம்மை மட்டுமல்ல எம்மை சூழ உள்ள மக்களையும் நாமே அழிப்பதற்கு சமமாகும்.

நமது முன்னோர்கள் அன்று கடைப்பிடித்த தமிழர் பாரம்பரிய உணவுப்பழக்கவழக்கங்கள், சுகாதார நடைமுறைகள் இன்று எம்மை விட்டு விலகியதாலும் இவ்வாறான நோய் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பாக உள்ளது என்ற உண்மையை நாம் உணரவேண்டும். சுகாதார பழக்கவழக்கங்களையும் வைத்திய ஆலோசனைகளையும் சரிவர பேணுவோமாக இருந்தால் நமது நாட்டில் இருந்து கொரோனாவை முற்றாக ஒழிக்க முடியும்.

கொரோனா வைரஸ் நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்கப்படும் வரை பொதுத் தேர்தல் நடைபெறக்கூடியவாய்ப்புகள் அறவே இல்லை.தற்போது வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அரசியல் கட்சி வேட்பாளர்கள் எப்போது தேர்தல் நடக்குமென இலவு காத்த கிளி போன்று உள்ளனர்.

உண்மையில் தேர்தல் நடக்கும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக் குழு தலைவருக்கு மட்டுமே உண்டு. வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு 14 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்படும் தினத்தை தேர்தல் ஆணைக்குழு தலைவர் அறிவிக்கவேண்டும் என்பதே நடைமுறை. அந்த தினத்தை தற்போது அறிவித்தாலும் அந்த தினத்தில் தேர்தல் நடைபெறுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

நாடுமுழுவதும் ஊரடங்கும் கொரோனா தாக்கமும் உள்ள நிலையில் இன்னும் பல மாதங்கள் தேர்தல் பிற்போடப்படலாம் அல்லது நாடு முழுவதும் ஒரே நாளில் தேர்தல் நடைபெறாமல் கொரோனா வைரஸ் தாக்கம் இல்லாத மாவட்டங்களுக்கு மட்டும் முதலில் தேர்தலை நடத்தி விட்டு கொரோனா தாக்கம் உள்ள மாவட்டங்களுக்கு பின்னர் தேர்தலை நடத்தக்கூடிய அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழு தலைவருக்கு உண்டு .அப்படி கட்டம் கட்டமாக தேர்தல் இடம்பெறுமானால் இறுதியான மாவட்டத்தில் தேர்தல் முடியும் நாளில் மட்டுமே வாக்கெண்ணும் பணியை மேற்கொண்டு முடிவுகளை அறிவிக்க முடியும்.

தொடர்ந்து பல மாதங்கள் தேர்தல் பிற்போடப்படுமாயின் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் இரத்துச்செய்யப்பட்டு திரும்பவும் புதிதாக வேட்பு மனு கோரவும் வாய்ப்புள்ளது. யாராவது ஒருவர் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து தற்போதைய வேட்பு மனுக்கள் காலம் கடந்துவிட்டது என கோரி வழக்கு தாக்கல் செய்தால் நீதிமன்ற தீர்ப்பு மூலம் முடிவு எப்படி அமையுமோ அப்படியே வேட்பு மனு நடைமுறை அமையும்.

தேர்தல் காலம் கடந்தால் மீண்டும் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை கூட்டி முக்கிய சட்டமூலங்கள் தீர்மானங்களை நிறைவேற்றக்கூடிய அதிகாரங்கள் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்குள்ளது. இருந்த போதும் எந்த தேவைக்காக பாராளுமன்றம் கூட்டப்படுகிறதோ அந்த தேவை முடிவுறும் வரை பாராளுமன்றம் இயங்கும். எது எப்படியாயினும் தற்போது தேர்தலை விட நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களை காப்பாற்றும் பணியே முக்கியமாகும். இதற்கு அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே இது சாத்தியமாகும் என்றார்.

மட்டு.வில் ஊரடங்கு தளர்வு; குறைந்தளவு மக்களே பொருட்கொள்வனவில் ஈடுபாடு

(பட்டிருப்பு நிருபர்)

நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் மட்டக்களப்பு மாவட்டம் உட்பட 16 மாவட்டங்களில் நேற்றுக் காலை தளர்த்தப்பட்டதை தொடர்ந்து மக்கள் பொருள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை 6.00மணி முதல் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டிருந்த போதிலும் நேற்று குறைந்தளவு மக்களே வர்த்தக நிலையங்களுக்கு சென்று பொருட்கொள்வனவில் ஈடுபட்டதை காணமுடிந்தது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள்,மருந்தகங்கள் மட்டுமே நேற்று திறந்திருந்தன.

மட்டக்களப்பு பொதுச்சந்தையில் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் வகையில் சந்தையின் பகுதிகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானம்,மட்டக்களப்பு சின்ன ஊறணி சரஸ்வதி வித்தியாலய விளையாட்டு மைதானம்,மட்டக்களப்பு உப்புக்கராச்சி பூங்கா,சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானம் என்பவற்றுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்தன.

இதன் காரணமாக சனநெரிசல் தவிர்க்கப்பட்டதுடன் மக்கள் குறைந்தளவிலேயே இப்பகுதிகளில் உள்ள சந்தைகளுக்கு சென்று பொருட்கொள்வனவில் ஈடுபட்டனர். வர்த்தக நிலையங்களில் மக்கள் சமூக இடைவெளிகளை பேணியவாறு பொருட்கொள்வனவில் ஈடுபட்டதை காணமுடிந்தது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பூரண பாதுகாப்பு வழங்கியதுடன் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர். இதேநேரம் மட்டக்களப்பில் ச.தொ.ச. நிலையம் ஊடாக பொதுமக்கள் குறைந்த விலைகளில் பொருட்கொள்வனவில் ஈடுபட்டுவந்த நிலையில் நேற்று குறித்த ச.தொ.ச. நிலையம் திறக்கப்படாமை குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் தொற்று; மட்டு. மாவட்ட செயலகத்தில் விசேட கூட்டம்

(மண்முனை நிருபர்)

கொரோனா வைரஸ் தொற்று பரவாமலிருக்க ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமையை மேலும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்ற தீர்மானம் மேற்கொள்ளும் விசேட கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் (31) மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற வேளைகளில் மக்கள் தமது அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்ய வெளியில் வரும்போது சமூக இடைவெளியைப் பேணி நடந்துகொள்வதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விடயங்களை மேலும் மேம்படுத்துவது தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.

இதன்போது மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் பொருட்களைக் கொள்வனவு செய்யவரும் பொதுமக்களின் நெரிசலைக் குறைக்கும் விதத்தில் பொதுச்சந்தைகளை மூடி மட்டக்களப்பு வெபர் மைதானம், கல்லடி சிவானந்தா வித்தியாலய மைதானம், ஊரணி சரஸ்வதி வித்தியாலய மைதானம் உட்பட ஊரணி லீனர் பாக் போன்ற இடங்களிலும் அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் சகல பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், பழக்கடைகள் என்பவற்றையும் திறப்பது எனவும் ஏனைய அனைத்துக் கடைகளையும் திறப்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஊரடங்கு அமுலில் இருக்கும் காலப் பகுதியில் அத்தியாவசியப் பொருட்கள் நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்வதற்கு பிரதேச செயலாளர்களின் சிபாரிசுடன் பொலிஸ் அனுமதியைப் பெற்று செயற்பட ஏற்ற நடவடிக்கை மேற்கொள்வதுடன் அவ்வாகனங்களுக்கான விசேட ஸ்டிக்கர்களை பொலிஸார் ஒட்டும் நடவடிக்கையை மேற்கொள்வது எனவும், அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்கள் தமது அலுவலக அடையாள அட்டையையும், திணைக்களத் தலைவரின் கடிதத்தையும் இணைத்து அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது

தம்புள்ளைப் பிரதேசத்தில் இருந்து மரக்கறிவகைகளைக் கொண்டுவருவதில்லை எனவும் உள்ளூர் உற்பத்திகளை மாத்திரம் பயன்படுத்துவது எனவும் இந்நடைமுறையை 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் மிக அவசிய தேவை ஏற்படின் குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் வெளியில் வரலாம் எனவும் அனைவரும் வீடுகளில் இருந்து தமது குடும்பத்தையும், சமூகத்தையும், மாவட்டத்தையும் பாதுகாக்க ஒத்துழைக்குமாறும் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்விசேட கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவான்,மேலதிக மாவட்ட செயலாளர் சுதர்சினி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லக்ஷ்ரீ விஜயசேன, இராணுவத்தின் 23ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ஜயசுந்தர, வைத்தியர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திருமலை 5ஆம் கட்டைப் பிரதேச இளைஞனுக்கு கொரோனா; தனிமைப்படுத்தப்பட்டது குடும்பம்

(நிலாவெளி நிருபர்)

திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 5ஆம் கட்டைப் பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் நேற்றுமுன்தினம் (31) தனிமைப்படுத்தப்பட்டதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் லதாகரன் தெரிவித்தார்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் மாலை காய்ச்சல் மற்றும் இருமல் காரணமாக அனுமதிக்கப்பட்ட ஐந்தாம் கட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞருக்கு கொவிட் 19 நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து இளைஞர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக வைத்தியர் லதாகரன் மேலும் தெரிவித்தார். இதனையடுத்து குறித்த இளைஞனின் குடும்பம் அவர்களது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் லதாகரன் தெரிவித்தார்.

அம்பாறையில் கடல்மீன் விலை உயர்வு; மக்கள் விசனம்

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது அதிகளவில் கடல்மீன் அறுவடை கிடைத்து வருகின்ற போதிலும், மீன் விலையில் குறைவேற்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டி, விசனம் தெரிவிக்கின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தும், அம்பாறை மாவட்ட மீனவர்கள், மீனினங்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இடம்பெறும் இவ்வாறான ஈனச் செயல் குறித்து பொது மக்கள் விசனம் தெரிவிக்கும் அதே வேளை, இவ்வாறானவர்களுக்கெதிராக சம்பந்தப்பட்டவர்கள் அவசர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

நீலாவணை முதல் பாணமை வரையிலான மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் அண்மைக் காலத்தில் சிறந்த மீன் அறுவடை கிடைத்து வருகின்றது. இதனை மீனவர்கள் வியாபாரிகளுக்கு குறைந்த விலையில் வழங்குகின்ற போதிலும் அதன் பலனை பொதுமக்களால் நுகர முடியவில்லை. தோறா, அறக்குளா மீன் ஒரு கிலோகிராம் 1300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. பாரை, தளப்பத்து மீனினங்கள் ஒரு கிலோ ரூபா 1100 முதல் 1200 வரையான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. முரல், பாரைக்குட்டி, கீரி போன்ற சிறிய ரக மீனினங்கள் 600 முதல் 800 வரை விற்பனையாகின்றன.

மீன்பிடித் தொழில் இடம்பெறும் கடற்கரைப் பிரதேசங்களில் உள்ள தரகர்களின் ஆதிக்கம், மீன் வியாபாரிகளின் தனியுரிமை என்பன இவ்விலையேற்றத்துக்குக் பிரதான காரணம் எனவும் சுட்டிக்காட்டப் படுகின்றது. அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்றுப் பிரதேசங்களில் மிக அதிக விலையில் மீன் விற்பனை செய்யப் படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால், மீன் உணவு அதிகமாக அம்பாறை மாவட்ட மக்களுக்கு எட்டாக் கனியாகி விட்டது. அதிகமான மக்கள் தற்காலத்தில் மீன் உணவை தவிர்த்தும் வருகின்றனர். மற்றும் சிலர் கொள்வனவின் அளவைக் குறைத்துள்ளனர்.

தங்களது சொந்த மண்ணில் கிடைக்கும் மீனினங்களை அதிக விலை கொடுத்துப் பெற வேண்டிய நிர்ப்பந்தம், துர்ப்பாக்கியம் அம்பாறை மாவட்ட மக்களுக்கும் ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அன்றாட வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மீன்விலை தொடர்பில் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எவரும் கவனம் செலுத்தாத காரணத்தினால், வியாபாரிகள் தாங்கள் நினைக்கும் விலையை தினசரி நிர்ணயம் செய்து விற்பனை செய்யும் அவலம் மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் தொடர்கின்றது. மீன் சந்தைகளை குத்தகைக்கு வழங்கும், உள்ளூராட்சி சபைகளேனும் மீன் விலை விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை எனவும் மக்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

ஒலிம்பிக் சம்பியனுக்கு கொரோனா

2016 ரியோ ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற ஹங்கேரி வீராங்கனை கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

சீனாவின் வூஹான் நகரிலிருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் தற்போது உலகையே அச்சுறுத்தி வருகிறது. கொரோனா வைரஸால் உலகம் முழுக்க 43 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இறந்துள்ளார்கள். ஹங்கேரியில் நேற்றுவரை 522 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார். 20 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இந்நிலையில் ஹங்கேரி நீச்சல் வீராங்கனை போக்லர்கா கபாஸ், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். 2016 ரியோ ஒலிம்பிக்ஸில் 800 மீற்றர் ப்ரீஸ்டைல் நீச்சல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார். இந்நிலையில் தான் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இரு வாரங்களாக என்னுடைய வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளேன். வெளியே செல்ல முடியாது. தற்போதைக்கு என்னிடம் அறிகுறிகள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளார். கபாஸின் கொரோனா வைரஸ் தொற்று குறித்த முதல் பரிசோதனையில் தொற்று இல்லை என்று இருந்தாலும் அடுத்த பரிசோதனையில் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏலத்திற்கு வந்த பட்லரின் உலகக் கிண்ண ஜேர்சி

கொரோனா சிகிச்சைக்கு நிதி திரட்டும் விதமாக, உலகக் கிணண் இறுதிப்போட்டியில் அணிந்து விளையாடிய ஜேர்சியை ஏலம் விடுவதாக இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஜோஸ் பட்லர் அறிவித்துள்ளார். கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக இங்கிலாந்து அணி, ஒரு நாள் உலகக் கிண்ணத்தை கடந்தாண்டு கைப்பற்றியது. இந்நிலையில், கொரோனா சிகிச்சைக்கு தேவைப்படும் மருத்துவ உபகரணங்களை வாங்க நிதி திரட்டும் நடவடிக்கையில் இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் ஜோஸ் பட்லர் இறங்கியுள்ளார். அதன்படி, தான் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அணிந்து விளையாடிய ஜேர்சியை ஏலம் விடுவதாகவும், அதன் மூலம் கிடைக்கப்பெறும் தொகை முழுவதும் மருத்துவ உபகரணங்கள் வாங்க பயன்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், மறுபதிவு செய்து விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கிரிக்கெட் வீரர்கள் விராட் கோஹ்லி, ஸ்டீவ் ஸ்மித், சுரேஷ் ரெய்னா ஆகியோரை பட்லர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்க டென்னிஸ் வளாகம் தற்காலிக மருத்துவமனையாக மாறுகிறது

நியூயோர்க்கில் கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு அதிகமாக இருப்பதால் அமெரிக்கா பகிரங்க டென்னிஸ் நடைபெறும் வளாகம் தற்காலிக மருத்துவமனையாக மாற்றப்படுவிதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் உலகில் மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது, தொடக்க காலத்தில் அமெரிக்கா போதுமான அளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காத காரணமாக தற்போது இத்தாலி, சீனாவை விட கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில்தான் அதிகம்.

மருத்துவமனையில் இடம் இல்லாமல் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் தவித்து வருகிறார்கள். வரிசையில் நின்ற படுக்கையை உறுதி செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. செயற்கை சுவாசக் கருவிகள் பற்றாக்குறையால் நிலைமை கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கிறது.

இதனால் உலகின் பல இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல்களை வரவழைத்து தற்காலிக மருத்துவமனையாக மாற்ற அமெரிக்கா திட்டுமிட்டுள்ளது. மேலும் பொது இடங்களான பூங்கா போன்றவற்றில் அவசர மருத்துவமனை தயார்படுத்த ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் டென்னிஸ் மிகப்பெரிய போட்டியாக கருதப்படும் அமெரிக்க பகிரங்கத் தொடர் நடைபெறும் வளாகம் மிகப்பெரியது. இந்த இடத்தில் உள்ள உள்விளையாட்டு அரங்கத்தை தற்காலிக மருத்துவமனையாக மாற்ற அமெரிக்க டென்னிஸ் சங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. இதனால் 350 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றப்படுகிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் ஸ்மார்ட் கடிகாரங்களை பயன்படுத்தத் தடை

ஊழல் தடுப்பு விதிமுறைகளை கடுமையாக கடைபிடிக்கும் வகையில் வீரர்கள் ஸ்மார்ட் கடிகாரங்களை பயன்படுத்தத் தடை விதிக்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

கிரிக்கெட் வீரர்கள் சிலர் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் ஒட்டுமொத்த கிரிக்கெட் மீதும் ரசிகர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு நாடுகளும் ஊழல் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தி சூதாட்ட தரகர்கள் வீரர்களை தொடர்பு கொள்ளாத வண்ணம் கண்காணித்து வருகிறார்கள். இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றனர். இந்த போட்டிகளில் விளையாடும் வீரர்கள் ஸ்மார்ட் கடிகாரங்களை பயன்படுத்தி வருகின்றனர். ஸ்மாட் கடிகாரங்கள் மூலம் தகவல்களை எளிதாக பரிமாற்றிக் கொள்ள முடியும். இதன்மூலம் தரகர்கள் வீரர்களை தொடர்பு கொள்ளக்கூடும் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை எண்ணுகின்றது. இதனால் போட்டியின் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் வகையில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படும் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் ஸ்மார்ட் கடிகாரங்களை பயன்படுத்த தடைவிதிக்க முடிவு செய்துள்ளது.

ஆசியக் கிண்ணம் நடக்குமா ? முடிவில்லையாம்

ஆசிய கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரை நடத்தும் உரிமை பெற்றிருக்கும் பாகிஸ்தான், இதுவரை தொடர் குறித்த இறுதி முடிவு எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

ஆஸி.யில் எதிர்வரும் அக்டோபர் நவம்பரில் இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவிருக்கிறது. இந்தத் தொடருக்கு முன் ஆசிய அணிகளுக்கு இடையிலான இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் நடைபெறவிருக்கிறது. இந்த போட்டியை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றுள்ளது. இந்தியா பாகிஸ்தான் செல்ல மறுத்தால் தொடர் பொதுவான இடத்தில் நடக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.ஆனால் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக விளையாட்டு போட்டிகள் அனைத்தும் ஸ்தம்பித்துள்ளன. இந்நிலையில் ஆசிய கிண்ணத் தொடர் குறித்து இதுவரை முடிவு செய்யப்படவில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவரான எஹ்சான் மாணி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் குறித்து இதுவரை ஆலோசனை நடத்தப்படவில்லை. எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்த மாதம் தொடக்கத்தில் நடைபெறவிருந்த ஆலோசனைக் கூட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அடுத்த கூட்டத்திற்கான திகதி அறிவிக்கப்படவில்லை. ஆசிய கிரிக்கெட் குழு சூழ்நிலையை ஆராய்ந்து வருகிறது. அதனைத் பொறுத்து முடிவு எடுக்கப்படும் என்றார்.

ஒய்வுக்கு முன் இ–20 உலக கிண்ணத்தில் ஆடவேண்டும்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அனுபவ வீரரான முகமது ஹபீஸ், ஓய்வுக்கு முன் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடர் விளையாட வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளார்.

39 வயதாகும் முகமது ஹபீஸ் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். தற்போது ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 கிரிக்கெட்டில் மட்டும் விளையாடி வருகிறார்.

அவுஸ்திலே ியாவில் நடைபெறவிருக்கும் இருபதுக்கு உலகக் கிண்ணத் தொடருக்குப்பின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முகமது ஹபீஸ் கூறுகையில் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடருக்குப்பின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். அதன்பிறகு இருபதுக்கு 20 லீக்குகளில் விளையாடுவதில் கவனம் செலுத்துவேன். பயிற்சியாளராக பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் நிதி நெருக்கடி

ஒப்பந்தத்தை தள்ளிவைக்க ஆஸி. கிரிக்கெட் சபை முடிவு

கொரோனா பீதியால் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற வருவாய், நிதி நெருக்கடி காரணமாக வீரர், வீராங்கனைகளுக்கான புதிய ஒப்பந்தத்தை கிரிக்கெட் அவுஸ்திரேலியா தள்ளி வைத்துள்ளது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனைத்து விளையாட்டு போட்டிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. போட்டிகளை ஒளிபரப்புவது உள்ளிட்ட அம்சங்களால் கிடைக்கும் வருவாய் குறித்து முடிவு செய்ய முடியாமல் கிரிக்கெட் சபைகள் திணறி வருகின்றன.

இந்நிலையில் வீரர், வீராங்கனைகளுக்கான புதிய ஒப்பந்தத்தை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தள்ளி வைத்துள்ளது. வழக்கமாக புதிய ஒப்பந்தம் ஆண்டு தோறும் ஏப்ரல் மாதத்தில் அறிவிக்கப்படும். பழைய ஒப்பந்தம் ஜூன் வரை அமுலில் இருக்கும் என்பதால் புதிய ஒப்பந்தம் ஜூலையில் அமுலக்கு வரும். இடையில் மாநில சங்கங்கள் வசதியை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு முதல் முறையாக வீரர், வீராங்கனைகளுக்கான புதிய ஒப்பந்தத்தை மார்ச் மாதமே வெளியிட முடிவு செய்திருந்தது. ஆனால் கொரோனா பீதியால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் நிதி வருவாய் குறித்து நிச்சயமற்றதன்மை நிலவுகிறது. அதனால் புதிய ஒப்பந்தத்தை தள்ளி வைப்பதாக அறிவித்துள்ளது.

நிர்ப்பீடணம் குறைந்தவர்களை குறிவைக்கும் கொரோனா

சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் தேவராஜா அரவிந்தன்

இன்று நாட்டிற்கு பெரும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் மாறியுள்ள கொரோனா எனப்படும் கொவிட்–19 வைரஸ் பற்றிய பல செய்திகள் சமூக வலைத்தளங்களை ஆக்கிரமித்து கொண்டிருக்கின்றன .

கொரோனா என்பது ஒரு முடிவில்லாத தொடக்கமோ என்று எண்ணும் அளவுக்கு நாளுக்கு நாள் அதன் தாக்கம் அதிகரித்து செல்கின்றது .இது தொடர்பான பல வகையான விழிப்புணர்வுகளும் ஆராய்ச்சி கட்டுரைகளும் வெளியிடப்பட்டு கொண்டிருந்தாலும் இன்னும் இந்த வைரஸின் பூரண தன்மையையும் , தாக்கும் வீரியத்தையும் ,கட்டுப்படுத்தும் மருந்துகள் என்பன பற்றி ஒரு தெளிவான முடிவு இல்லை என்பதே உண்மை .

சுகாதார பிரிவினர் கூறுவது போல Stay at Home என்பது ஒன்றே கொரோனா தொற்றை , பரவலை தடுக்கும் ஏற்றுகொள்ள கூடிய ஒரு முறையாக இருக்கின்றது .இன்று லாக் டவுன் மூலம் மக்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டு உள்ளதால் அவர்களுக்கான அத்தியாவசிய சேவைகளின் தேவைகளும் சீர் குலைந்து உள்ளன இதில் முக்கியமான ஒன்றுதான் வைத்திய தேவை. இன்று பெரும்பாலான தொற்றா நோய்களான நீரிழிவு , குருதி அமுக்கம் ,சிறுநீரக நோய்கள் என்பன கொரோனா எனும் கொடிய நோயினால் மறைக்கப்பட்டு அதற்கான சிகிச்சைகள் முக்கியத்துவம் இழந்து வருகின்றன என்றால் மிகையாகாது .எமது நாட்டு மக்களை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று தான் சிறுநீரக நோய் இந்த நோய் தந்த அல்லது தந்து கொண்டிருக்கும் அழிவுகளை நாம் இலகுவில் மறந்து விட முடியாது .

இந்த நோய்க்கான பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் இருந்த போதும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையால் பெரும்பாலானவை ஸ்தம்பித்து உள்ளது .சிறுநீரக நோய்களுக்கான மருந்துகள் அல்ல இரத்த சுத்திகரிப்பு முறைகள்தொடர்ச்சியாக நீண்டகாலம் தடை இன்றி பின்பற்ற வேண்டும். சீரான முறையில் மருந்துகள் உட்கொள்ளாத பட்சத்தில் சிறுநீரகங்கள் விரைவில் தொழிற்பாட்டை இழந்து மீள தொழிற்பட முடியாத நிலையை அடைந்து விடுகின்றன .இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் மிக குறைந்த மனித வளத்திலும் அரச வைத்தியசாலைகள் தமது அன்றாட கிளினிக் வசதிகளை வழங்கி வருகின்றது .எனவே சிறுநீரக நோயாளர்கள் தங்களது பிரதேச வைத்திய வைத்தியசாலைகளை அணுகி தங்களது மருந்துகளை தொடர்ச்சியாக பெறுவதுடன் இரத்தமாற்று முறைகளையும் பின்பற்றுவது அவசியம் ஆகின்றது. உங்கள் கிளினிக் புத்தகத்தை , வைத்திய சான்றிதழ்களை காண்பிப்பதன் மூலம் ஊரடங்கு வேளையிலும் இந்த சேவைகளை பெற்று கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது .

கொரோனா வைரஸ் நிர்ப்பீடணம் குறைந்தவர்களை இலகுவாக தாக்கும் என்பதும் சிறுநீரக நோய்கள் நிர்ப்பீடண குறைவுக்கு ஒரு பிரதான காரணம் என்பதும். குறிப்பிடத்தக்கது . எனவே தொடர்ச்சியாக சிறுநீரக நோய்க்கான மருந்துகளை பாவிப்பதன் மூலம் உங்கள் சிறுநீரகங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்.



இலங்கையின் முதல்நிலை முதற்தர பத்திரிகை

வீரகேசரியின் குறுந்தகவல் செய்திகள்

உடனுக்குடன் **தமிழில்** பெற்றுக்கொள்ள

உங்கள் **டயலொக்** வலையமைப்பில்.

REG VK என்று பதிவிட்டு **87960**

என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றை அனுப்புங்கள்.

நாள் ஒன்றுக்கு : ரூபா 1.67/- + பெறுமதிசேர் வரிகள்   நிபந்தனைகளுக்கு உட்பட்டது

http://www.dailythanthi.com -சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சை, திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய், கொழும்பு நகரங்களில் அச்சாகிறது- https://www.facebook.com/dailythanthi/ https://twitter.com/dinathanthi

8 பக்கம்

தினத் தந்தி DAILY THANTHI

வெல்க தமிழ்

கொழும்பு (2-4-2020) வியாழக்கிழமை | மலர் 2 இதழ் 58

விகாரி ஞு பங்குனி மீ 20 உ ஹிஜிரி 1441 ஷ அபான் 7

வெள்ளி தோறும் தினத்தந்தி வெள்ளி மலர் தவறாமல் படியுங்கள்

புதன் தோறும் தினத்தந்தி வாகன சந்தை தவறாமல் படியுங்கள்

டெல்லி மாநாட்டில் பங்கேற்ற சிலருக்கு கொரோனா பாதிப்பு

தமிழகத்தில் இருந்து சென்றவர்கள் தாமாக பரிசோதனைக்கு முன்வர வேண்டும்

எடப்பாடி பழனிசாமி அழைப்பு

சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள அம்மா உணவகத்தை பார்வையிட்ட முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அங்கு சமைத்த உணவை ருசி பார்த்த போது எடுத்த படம். அருகில் அமைச்சர் ஜெயக்குமார் உள்ளார்.

டெல்லி மாநாட்டில் பங்கேற்ற சிலருக்கு கொரோனா பாதிப்பு இருப்பதால் தமிழகத்தில் இருந்து சென்றவர்கள் தாமாக பரிசோதனைக்கு முன்வர வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை, ஏப்.2-

தமிழக முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி சென்னையில் அம்மா உணவகங்கள் செயல்பாடுகளை பார்வையிட்டார்.

₹1-க்கு இட்லி

அப்போது அங்கு தயாரிக்கப்படும் உணவை ருசி பார்த்து அதன் தரத்தை ஆய்வு செய்தார், பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

தமிழகத்தை பின்பற்றி இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில், அம்மா உணவக திட்டம் சிறப்பான திட்டம் என்று, பல்வேறு மாநிலங்களில் அமுல்படுத்தி இருக்கிறார்கள். இந்தியாவிலேயே ₹1-க்கு 1 இட்லி கொடுத்து தமிழ்நாடு முன்னுதாரணமாக விளங்கிக் கொண்டு இருக்கிறது.

உலகையே உலுக்கிக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் தொற்று தமிழகத்திலும் பரவியிருக்கிறது. நேற்று முன்தினம் இரவு வரை 234 பேர் இந்த கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அரசுக்கு தெரிவிக்க வேண்டும்

டெல்லியில் நடந்த மாநாட்டில் தமிழ்நாட்டில் இருந்து 1131பேர் கலந்து கொண்டனர். இவர்களில் தமிழ்நாட்டை சேர்ந்த ஏராளமானோர் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீதமுள்ளவர்கள் தானாக முன்வந்து அரசுக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், அவர்களது குடும்பமும், சுற்றி உள்ளவர்களும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படும். ஆரம்ப கட்டத்திலேயே அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் குணமாகும் சூழ்நிலை இருக்கிறது.

ஊரடங்கு நீட்டிப்பு

மருத்துவமனைகள் அமைப்பதற்கு அரசியல் கட்சிகள் உள்பட தனியாரும் தங்களுக்கு சொந்தமான இடத்தை கொடுக்கிறார்கள். அதை பயன்படுத்தும் அளவிற்கு இன்னும் தேவை வரவில்லை. அரசு சார்பில் 17 ஆயிரம் படுக்கை வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம்.

மத்திய அரசு ஏப்ரல் 14-ந் தேதி வரை ஊரடங்கு உத்தரவை அறிவித்திருக்கிறது. அதற்கு பிறகு மத்திய அரசு தான் ஊரடங்கு உத்தரவை நீட்டிப்பது பற்றி முடிவு செய்யும்.

விவசாயிகள்

மாத தவணை வசூல் செய்யக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டும், வங்கிகளிலிருந்து தகவல் வருகிறது என்கிறார்கள். இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதனால், மத்திய நிதி மந்திரியின் கவனத்திற்கு இதை கொண்டு செல்வோம்.

சிறு, குறு விவசாயிகளுக்கு எந்தவித தடையும் இல்லை என்று அறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டது. அறுவடை செய்யவோ, வேளாண் பணியை மேற்கொள்ளவோ, எவ்வித சிரமமும் இல்லாமல் பணி மேற்கொள்ளலாம் என்று அரசு தெளிவுப்படுத்தி விட்டது. அதேபோல, விவசாயிகள் விளைவித்த பொருட்களை சந்தைக்கு எடுத்து செல்வதற்கும் எந்த தடையும் கிடையாது. அதற்கு அரசு தெளிவான உத்தரவை பிறப்பித்திருக்கிறது.

வேண்டுகோள்

இந்த நோயின் தாக்கத்தைபற்றி தெரியாமலேயே மக்கள் பரவலாக வெளியே சென்று கொண்டு இருக்கிறார்கள். உலகம் முழுவதும் நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் இறக்கின்ற இந்த சூழ்நிலையிலே, அரசுக்கு ஒவ்வொரு உயிரும் மிக முக்கியம். அதன் அடிப்படையில் தான் 144 தடை உத்தரவை போட்டு இருக்கிறோம்.

மக்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், அதேபோல, மக்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய வேண்டுகோள். தமிழகத்தை பொறுத்தவரைக்கும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது. ஒருவர் கூட இதனால் பாதிக்கப்படக் கூடாது என்பது தான் அரசினுடைய நோக்கம். அதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்படுமா?

அனைத்து மாநில முதல்-மந்திரிகளுடன் பிரதமர் மோடி இன்று ஆலோசனை

புதுடெல்லி, ஏப்.2-

கொரோனா பாதிப்புகள் தொடர்பாக அனைத்து மாநில முதல்-மந்திரிகளுடன் பிரதமர் மோடி இன்று ஆலோசனை நடத்த உள்ளார்.

ஊரடங்கு உத்தரவு

சீனாவில் தொடங்கி உலகைஉலுக்கிய கொரோனா வைரசின் தாக்கம் இந்தியாவிலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனிடையே கொரோனாவை கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. அதன் அடிப்படியில் கொரோனா வைரஸ் பாதிப்பை கட்டுப்படுத்த முதலில் கடந்த மாதம் 22-ந் தேதி மக்கள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

அதே சமயம் பல மாநிலங்களில் 144 தடை உத்தரவு, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் இந்தியா முழுவதும் கடந்த மாதம் 24-ந் தேதி முதல் 21 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவை பிரதமர் நரேந்திர மோடி பிறப்பித்தார். இந்த உத்தரவு வருகிற 14-ந் தேதி வரை இருக்கும்.

மக்கள் நடமாட்டம்

இருப்பினும் பல பொது இடங்களில் மக்களின் நடமாட்டம் அதிக அளவில் காணப்படுகிறது. இதையடுத்து இந்தியாவின் பல பகுதிகளில் துணை ராணுவம் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளது.

இதன் மூலம் மக்கள் நடமாட்டத்தை ஓரளவு கட்டுக்குள் வந்தாலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

பாதிப்பு அதிகரிப்பு

நேற்று ஓரே நாளில் இந்தியாவில் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,637-ஆக அதிகரித்துள்ளது. மேலும் கொரோனா பாதிப்பால் 39 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 133 பேர் குணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு தொடர்பாக மத்திய அரசு அதிகாரிகள் கூறுகையில், "தற்போது இந்தியா முழுவதும் 1,600-க்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டு உள்ளது. வைரஸ் பரவும் பகுதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அப்பகுதிகளில் வைரஸ் மேற்கொண்டு பரவாமல் தடுக்க மக்கள் கூடுவதை தவிர்க்கவும், பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டவர்களை கண்டறியவும் கடுமையான யுக்திகளை அரசு கையாண்டு வருகிறது" என்றனர்.

நீட்டிக்கப்படுமா?

இந்நிலையில் கொரோனா பரவலை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் மாநில நிலவரங்கள் குறித்து அனைத்து மாநில முதல்-மந்திரிகளுடன் பிரதமர் மோடி இன்று (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு ஆலோசனை நடத்த உள்ளார்.

காணொலி காட்சி மூலம் நடைபெறும் இந்த ஆலோசனையில் துணை ராணுவத்தை மாநிலங்களில் கொண்டு வருவது, டெல்லி மாநாடு விவகாரம், ஊரடங்கு உத்தரவு நீட்டிப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தப்படும் என தெரிகிறது. எனவே இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்படுமா? என தெரியவரும்.

இந்தியாவில் வைரஸ் வேகமாக பரவும் 10 இடங்கள்

கொரோனா பாதிப்பு 1,700-ஐ தாண்டியது

மத்திய சுகாதாரத்துறை அறிவிப்பு

புதுடெல்லி, ஏப்.2-

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவும் 10 இடங்கள் கண்டறியப்பட்டு இருப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,747 ஆக அதிகரித்துள்ளதாகவும் மத்திய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

தடுப்பு நடவடிக்கைகள்

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தற்போது 203 நாடுகளில் வேகமாக பரவி வருகிறது. இந்த வைரஸ் தொற்று காரணமாக இதுவரை 8 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்ட நிலையில் 42 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைரசால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை ஒரு லட்சத்து 79 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர்.

இந்தியாவிலும் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வருகிறது. ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு வைரஸ் தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

வேகமாக பரவும் 10 இடங்கள்

இந்நிலையில் இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவக்கூடிய 10 இடங்களை மத்திய அரசு அடையாளம் கண்டுள்ளது. டெல்லியில் தில்ஷத் தோட்டம், நிஜாமுதீன் ஆகிய இடங்களும் மற்றும் நொய்டா, மீரட், பில்வாரா, ஆமதாபாத், காசர்கோடு, பத்தனம்திட்டா, மும்பை, புனே ஆகிய இடங்களிலும் நோய் வேகமாக பரவி வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

நிவாரண முகாம்கள்

இந்தியா முழுவதும் 21 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா நிவாரண முகாம்கள் இயங்கி வருகின்றன. அவற்றில், ஆதரவற்ற 6 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் சேர்த்து முகாம்களில் உள்ள 23 லட்சம் பேருக்கு தினமும் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் மராட்டிய மாநிலத்தில் 302 பேரும், கேரளாவில் 241 பேரும், தமிழகத்தில் 234 பேரும், டெல்லியில் 120 பேரும், உத்தரபிரதேசத்தில் 103 பேரும், கர்நாடகாவில் 101 பேரும் என பல மாநிலங்களில் ஏராளமானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

1,747 ஆக அதிகரிப்பு

இதன் மூலம் இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,747 ஆக அதிகரித்து உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இதற்கு பலியானோரின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 133 பேர் சிகிச்சை முடிந்து வீட்டுக்கு திரும்பியுள்ளனர். கொரோனா தொற்று அதிகம் பரவியதாக கூறப்படும் டெல்லி மாநாட்டில் பங்கேற்றவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதமர் நிவாரண நிதிக்கு

விப்ரோ நிறுவனம் ₹1,125 கோடி நிதி

புதுடெல்லி, ஏப்.2-

கொரோனா வைரசால் உலகம் முழுவதும் கடும் பாதிப்பு அடைந்து வருகிறது. தினமும் பலி எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் 21 நாள் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு உள்ளது. இதனால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நாட்டு மக்களுக்கு உதவ நிதி அளிக்கலாம் என பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதைத்தொடர்ந்து, பிரதமரின் தேசிய நிவாரண நிதிக்கு முக்கிய பிரமுகர்கள், பெரிய நிறுவனங்கள் நிதி உதவி அளித்து வருகின்றனர்.

இந்நிலையில், கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் வகையில், விப்ரோ நிறுவனம் பிரதமரின் தேசிய நிவாரண நிதிக்கு ₹1,125 கோடி நிதி உதவி அறிவித்துள்ளது.

பணியின் போது உயிர் இழந்தால்

டாக்டர், செவிலியர் குடும்பத்துக்கு ₹1 கோடி இழப்பீடு

டெல்லி முதல்-மந்திரி அறிவிப்பு

புதுடெல்லி, ஏப்.2-

கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுவோர், அறிகுறிகளுடன் கண்காணிப்பில் இருப்போர் அதிகரித்து வருகின்றனர்.

இந்நிலையில் டெல்லி முதல்-மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

கொரோனா நோயாளிகளை குணப்படுத்தும் நடவடிக்கையில் ஏராளமான டாக்டர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதுபோலவே சுகாதார பணிகளில் ஏராளமான துப்புரவு தொழிலாளர்களும் ஈடுபட்டுள்ளனர். இந்த பணிகளின் போது அவர்களுக்கு மரணம் ஏற்பட்டால் அவர்களது குடும்பங்களுக்கு ₹1 கோடி வழங்கப்படும்.

அரசு பணியாளர்கள் மட்டும் இன்றி தனியார் துறை ஊழியர்களும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையின்போது உயிரிழந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் ₹1 கோடி வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழகத்தில் ஒரே நாளில் கொரோனாவால் 110 பேர் பாதிப்பு

வைரஸ் தொற்று எண்ணிக்கை 234 ஆனது

சென்னை, ஏப்.2-

தமிழகத்தில் ஒரே நாளில் கொரோனாவால் பாதிப்பு 110 பேருக்கு உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதன் மூலம் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 234 ஆக அதிகரித்து உள்ளது.

கட்டுப்பாடு

தமிழகத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பை தடுப்பதற்காக, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு மட்டும் வெளியில் வரலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

மற்ற நேரங்களில் பொது மக்கள் தேவை இல்லாமல் வெளியில் வாகனங்களில் சுற்றக்கூடாது என்றும் அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது.

₹14½ லட்சம் வசூல்

தடையை மீறி வாகனங்களில் செல்வோர் மீது தமிழகம் முழுவதும் போலீசார் கைது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நேற்று பகல் 12 மணிவரைகைதுஎண்ணிக்கை 38 ஆயிரத்து 387 ஆக உயர்ந்தது.

34 ஆயிரத்து 178 பேர் மீது வழக்கு போடப்பட்டது. 28 ஆயிரத்து 40 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ₹14.47 லட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

இதனிடையே தமிழக காவல்துறை சார்பில் கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் விதமாக விழிப்புணர்வு வீடியோ படம் வெளியிட்டுள்ளது. அந்த படத்தில் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேசிய காட்சியும், தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் பேசும் காட்சியும் இடம் பெற்றுள்ளன. போலீசார் வாகனங்களில் செல்வோருக்கு அறிவுரைகள் வழங்கும் காட்சி மற்றும் சாலை ஓரமாக வாழ்பவர்களுக்கு சாப்பாடு பொட்டலங்கள் வழங்கும் காட்சிகளும் அந்த வீடியோவில் உள்ளது.

புதிய செயலி

இந்நிலையில் மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கொரோனா தொற்று பீதியில் கூலித்தொழிலாளி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். கடலூரில் கொரோனா வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் உயிரிழந்துள்ளார். சிறுநீரக பாதிப்புக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர் உயிரிழந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி சார்பில் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்களை கண்காணிக்க புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கொரோனா வைரஸ் பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனை 500 படுக்கைகளுடன் கொரோனா சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்பட்டுள்ளது.

110 பேருக்கு உறுதி

தமிழகத்தில் கொரோனா பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் 124 ஆக உயர்ந்திருந்தது.

இந்நிலையில் தமிழக சுகாதார துறை செயலாளர் பீலா ராஜேஷ் நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "அரசின் வேண்டுகோளை ஏற்று டெல்லி மாநாட்டில் பங்கேற்றவர்களில் 1,103 பேர் தாமாக பரிசோதனைக்கு முன்வந்துள்ளனர். இவர்களில் 658 பேருக்கு பரிசோதனை நடத்தப்பட்டது. தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 110 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை தற்போது 234 ஆக அதிகரித்து உள்ளது. இதில் 190 பேர் டெல்லி மாநாட்டில் பங்கேற்றவர்கள்" என்றார்.

ஓய்வு பெற்ற 71 பேரின் வீடுகளுக்கு சென்று உபசரித்த அதிகாரிகள்

போக்குவரத்து பணியாளர்கள் நெகிழ்ச்சி

சென்னை, ஏப்.2-
ஓய்வு பெற்ற 71 பேரின் வீடுகளுக்கு சென்று உபசரித்த அதிகாரிகளின் முயற்சியை பார்த்து போக்குவரத்து பணியாளர்கள் நெகிழ்ச்சி அடைந்தனர்.

பணி ஓய்வு

சென்னை மாநகர் போக்குவரத்து கழகத்தில் பணியாற்றிய, 25 ஓட்டுனர்கள், 17 நடத்துனர்கள், 11 தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள், 14 போக்குவரத்து மேற்பார்வையாளர்கள் மற்றும் 4 நிர்வாக பிரிவு அலுவலர்கள் உள்ளிட்ட 71 பேர் கடந்த மாதம் 31-ந் தேதியோடு பணியில் இருந்து ஓய்வு பெற்றனர்.

ஓய்வு பெறுபவர்களை, தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குனர் தலைமையில் பிரிவு உபசரிப்பு நிகழ்ச்சி நடத்தி உரிய ஓய்வு சான்றிதழ், பணி பாராட்டு சான்றிதழ் மற்றும் அன்பளிப்பு வழங்கி சால்வை அணிவித்து கவுரவிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

கவுரவிப்பு

தற்போது கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், திருவொற்றியூர், எண்ணூர் மற்றும் ஆவடி உள்ளிட்ட பகுதிகளில் ஓய்வு பெற்றுள்ள பணியாளர்களின் வீடுகள் உள்ளன.

இதையடுத்து மாநகர் போக்குவரத்து கழகத்தின் சார்பில், துணை மேலாளர் மற்றும் அந்தந்த கிளை மேலாளர்கள், நேரில் சென்று, ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வூதிய சான்றிதழ், பணி பாராட்டு சான்றிதழ், இனிப்பு மற்றும் சால்வை அணிவித்து பாராட்டி கவுரவித்தார்கள்.

நெகிழ்ச்சி

பணியாளர்களின் வீடுகளுக்கு அலுவலர்கள் நேரில் வந்து உரிய சான்றிதழ்களை வழங்கி கவுரவித்தது மிகவும் நெகிழ்ச்சி தந்ததோடு, நிர்வாக தரப்பிலான இந்த முயற்சி மிகவும் பாராட்டத்தக்க ஒன்று என ஓய்வு பெற்றுள்ள பணியாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் நன்றி தெரிவித்தனர்.

அரசு மருத்துவமனையில் கிருமி நாசினி தெளிப்பு

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக தீயணைப்பு படையினர் ராட்சத எந்திரம் மூலம் கிருமி நாசினி தெளித்த போது எடுத்த படம்.

உள்நாட்டில் தட்டுப்பாடு:

பாதுகாப்பு உபகரணங்களை வெளிநாட்டுக்கு அனுப்பியதால் சர்ச்சை

புதுடெல்லி, ஏப்.2-
உள்நாட்டில் தட்டுப்பாடு இருக்கும் போது பாதுகாப்பு உபகரணங்களை இந்தியாவில் இருந்து வெளிநாட்டுக்கு அனுப்பிய விவகாரம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

மருத்துவ பாதுகாப்பு உபகரணங்களுடன் இந்தியாவில் இருந்து பெல்கிரேடுக்கு அனுப்பப்பட்ட விமானம்.

பாதுகாப்பு உபகரணங்கள்

இந்தியாவில் எந்தவொரு பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமல் கொரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்ததாக 100 டாக்டர்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். இதில், ஒரு சிலருக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக உத்தரபிரதேச மாநிலத்தில் கிங் ஜார்ஜ் மருத்துவ பல்கலைக்கழகத்தில் கொரோனா தொற்று சிகிச்சை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள டாக்டர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கு போதுமான பாதுகாப்பு மருத்துவ உபகரணங்கள் இல்லாததே காரணம் என குற்றம் சாட்டப்பட்டது.

கொல்கத்தா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உரிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாத காரணத்தால் டாக்டர்கள் ரெயின்கோட், இருசக்கர வாகன ஹெல்மெட்டை பயன்படுத்துவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

அனுப்பிவைப்பு

இந்நிலையில் உள்நாட்டில் தட்டுப்பாடு இருக்கும் போது பாதுகாப்பு உபகரணங்கள் இந்தியாவில் இருந்து செர்பியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தகவல் தற்போது வெளியாகி உள்ளது. கொரோனா வைரசால் பாதிப்புக்குள்ளான நாடுகளுக்கு ஆதரவை வழங்கும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு திட்டத்தின் செர்பிய பிரிவு வெளியிட்ட டுவிட்டர் பதிவிற்கு பிறகே இந்த விவகாரம் வெளியில் தெரியவந்துள்ளது.

செர்பிய டுவிட்டரில், "90 டன் மருத்துவ பாதுகாப்பு உபகரணங்களுடன் 2-வது போயிங் 747 ரக சரக்கு விமானம் இந்தியாவில் இருந்து பெல்கிரேடு நகரில் தரையிரங்கியது" என பதிவிட்டுள்ளது.

சரக்கு விமானத்தில்...

செர்பிய அரசு வாங்கிய இந்த மதிப்புமிக்க பொருட்களின் போக்குவரத்துக்கு ஐரோப்பிய ஒன்றியமே முழுமையாக நிதியளித்து உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 90 டன் சரக்குகளில் 50 டன் அறுவை சிகிச்சை கை உறைகளும், முகக்கவசங்கள் மற்றும் முழு உடல் பாதுகாப்பு ஆடைகளும் இருந்தன. அவை மருத்துவ ஊழியர்களுக்கு மிகவும் தேவையானது.

இதுதொடர்பாக கொச்சி விமான நிலையத்தின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், "மார்ச் 29-ந்தேதி சரக்கு விமானத்தில் 35 லட்சம் அறுவை சிகிச்சை கை உறைகளும், ஏற்கனவே 30 டன் சரக்கும் பெல்கிரேடுக்கு சரக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு கொச்சி சுங்கத்துறை ஏற்பாடு செய்தது" என்றார்.

சர்ச்சை

இதற்கிடையே மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக இணை செயலாளர் லுவ் அகர்வாலிடம் இது தொடர்பாக நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது அவர் இதுகுறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவில் தளவாடங்களை உருவாக்குவதும், பிற நாடுகளிலிருந்து பொருட்களை பெறுவதிலுமே நாங்கள் முயற்சித்து வருகிறோம் என்றார்.

உள்நாட்டில் பற்றாக்குறை உள்ள நிலையில் இந்தியாவில் இருந்து வெளிநாட்டுக்கு மருத்துவ உபகரணங்கள் அனுப்பிவைக்கப்பட்ட விவகாரம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் விதமாக உள்நாட்டிலும், தென்கொரியா மற்றும் சீனாவிலும் இது போன்ற உபகரணங்களை மொத்தமாக வாங்க முயற்சிப்பதாக மத்திய அரசு கடந்த 29-ந் தேதி தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கொரோனா தொற்று கட்டுப்படுத்துதல் திட்டம்:

இதுவரை 6.88 லட்சம் பேரிடம் ஆய்வு

தமிழக அரசு தகவல்

சென்னை, ஏப்.2-
தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழகத்தில் கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கையாகவும், இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கும் நோக்கிலும் தொற்றுநோய் கட்டுப்படுத்துதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ராணிப்பேட்டை, தஞ்சாவூர், வேலூர், கோயம்புத்தூர், விருதுநகர், செங்கல்பட்டு, மதுரை, ஈரோடு, சேலம், திருநெல்வேலி, சென்னை, திருப்பூர், கரூர், காஞ்சீபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய 16 மாவட்டங்களில் 3 ஆயிரத்து 698 களப்பணியாளர்கள் மூலம் வீடு வீடாக கணக்கெடுக்கும் பணி நடைபெற்றது. இந்த பணியில் 1 லட்சத்து 82 ஆயிரத்து 815 வீடுகளில், 6 லட்சத்து 88 ஆயிரத்து 473 பேரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வதந்திகளை நம்ப வேண்டாம்

மக்கள் தயக்கமின்றி கோழி முட்டை, இறைச்சியை சாப்பிடலாம்

தமிழக அரசு மீண்டும் விளக்கம்

சென்னை, ஏப்.2-
மக்கள் எந்தவித தயக்கமின்றி கோழி முட்டை, இறைச்சி சாப்பிடலாம் என்றும், வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அரசு மீண்டும் தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கொரோனா தொற்று

கோழி இறைச்சி மற்றும் முட்டை உண்பதால் நமக்கு நன்மைகள் தான் ஏற்படும். கொரோனா வைரஸ் தொற்றுக்கும், கோழி இறைச்சி முட்டை உண்பதற்கும் எந்த தொடர்பும் இல்லை.

பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசிய தேவைகளுக்கான பொருட்களின் உற்பத்தி மற்றும் நகர்வுகள் தடையின்றி நடைபெறவும், கால்நடை, கோழி, முட்டை, மீன், இறைச்சி மற்றும் கால்நடை தீவனம், கால்நடை தீவனத்துக்கான உற்பத்தி பொருட்கள் ஆகியவற்றின் நகர்வுகளுக்கும் விலக்கு அளிக்க அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் காணொலி காட்சி மூலம் தமிழக முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தி உள்ளார்.

கோழி இறைச்சி, முட்டை

இந்நிலையில் கோழி இறைச்சி, முட்டை மற்றும் இதர கோழி உணவு பொருட்கள் சாப்பிடுவதால் கொரோனா தொற்று பரவக்கூடும் என்ற ஒரு தவறான செய்தி பொதுமக்களிடம் ஒரு பிரிவினரால் பரப்பப்பட்டு வருகிறது.

இதனால் பொதுமக்கள் கோழி, முட்டை, இறைச்சி சாப்பிட தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. இது முற்றிலும் தவறான வழிநடத்தும் செய்தியாகும்.

நோய் எதிர்ப்பு சக்தி

வதந்திகள் மூலம் நமது புரத தேவையை இழப்பது ஒருபுறம் இருந்தாலும், கோழி வளர்ப்பு தொழில் மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட கோழி வளர்ப்போரும், விவசாயிகளும் நலிவடைந்து மிகப்பெரிய அளவில் பொருளாதார இழப்பு ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் சூழலும் ஏற்படுகிறது.

கொரோனா என்பது மனிதனிடம் இருந்து மனிதனுக்கு சுவாச குழாய் மூலம் தும்மல், சளி போன்றவற்றில் இருந்து வெளிவரும் நீர்த்துளிகள் மற்றும் இவைகள் படர்ந்துள்ள பொருட்களை தொடுவதாலும் மட்டுமே பெரும்பாலும் பரவுகிறது.

முட்டை மற்றும் கோழி இறைச்சியானது மிகவும் மலிவான புரத உணவாகும். மேலும் அவை மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் காரணியாகவும் அமைந்துள்ளது. தற்போதைய சூழல் மனிதனுக்கு அதிகமாக நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் தேவைப்படும் காலகட்டமாகும்.

நம்ப வேண்டாம்

எனவே பொதுமக்கள் கோழி முட்டை, இறைச்சி உண்பது மூலம் கொரோனா தொற்று பரவியதாக இது வரை எந்த நிகழ்வுகளும் நடக்கவில்லை. இது தொடர்பான தவறான வதந்திகளை பொது மக்கள் நம்ப வேண்டாம்.

ஏற்கனவே இது குறித்த விளக்கத்தை அரசு அளித்து உள்ளது. எனவே மக்கள் தயக்கம் இல்லாமல் கோழி முட்டை, இறைச்சி ஆகியவற்றை உண்ணலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஊரடங்கை நிறுத்தினால் 6,000 பேர் பாதிக்க வாய்ப்பு

ஆய்வில் அதிர்ச்சி தகவல்

சென்னை, ஏப்.2-
இந்தியாவில் ஊரடங்கு உத்தரவை நிறுத்தினால் 6 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படலாம் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது,

ஆய்வு

இந்தியாவில் கொரோனா வைரசை கட்டுப்படுத்த 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு போதுமானதாக இருக்காது என்று தெரிவித்த சென்னையில் உள்ள கணித அறிவியல் கல்வி நிறுவனம் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தை சேர்ந்தவர்கள் தங்கள் ஆய்வு குறித்து கூறியதாவது:-

வயது அடிப்படையிலான மக்கள்தொகை, பொது இடங்களில் மக்களுக்கு இடையேயான தொடர்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஊரடங்கு உத்தரவால் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

6,000 பேர்

வருகிற 14-ந் தேதியுடன் முடிவடையும் ஊரடங்கு உத்தரவு போதுமானதாக இருக்காது. எனினும் இதன் மூலம் ஏப்ரல் மாத மத்தியில் வைரசால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைவாக இருக்க வாய்ப்பு உள்ளது.

ஊரடங்கை முடித்துக் கொண்டால், தொற்று மீண்டும் ஏற்பட்டு, மே மாத மத்தியில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. நீண்ட காலத்துக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டால், தொற்று பரவலை வெகுவாக குறைக்க முடியும்.

2 முறைகள்

பாதிப்பை குறைப்பதற்காக 2 முறைகளை பின்பற்றலாம். முதலாவதாக தொடர்ச்சியாக 49 நாட்கள் ஊரடங்கை செயல்படுத்துவது சிறப்பாக இருக்கும். இரண்டாவதாக 5 நாட்கள் இடைவெளிவிட்டு 21 நாட்கள், 28 நாட்கள், 18 நாட்கள் என 3 கட்டங்களாக ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்துவதும் வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும். ஊரடங்கு உத்தரவு, சமூக இடைவெளி ஆகியவற்றுடன், பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தப்படுவது அவசியம்.

தொற்று பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்தால், பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்களை கண்டறிந்து தனிமைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

சமூக பரவலை தடுக்க அனைவருக்கும் பொறுப்பு அவசியம்

அன்புமணி ராமதாஸ் அறிக்கை

சென்னை, ஏப்.2-
சமூக பரவலை தடுக்க அனைவருக்கும் சமூக பொறுப்பு வேண்டும் என அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.



அன்புமணி

இது குறித்து பா.ம.க. இளைஞர் அணி தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அச்சம்

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் குறித்து கடந்த சில நாட்களாக வெளியாகி வரும் தகவல்கள் மிகவும் அதிர்ச்சியளிக்கின்றன. தமிழகத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் பாதிக்கப்பட்டவர்களில் 50 பேருக்கு ஒரே ஆதாரத்தில் இருந்து நோய்த் தொற்று ஏற்பட்டதாக வெளியாகியுள்ள செய்தியும் தமிழ்நாட்டு மக்களை கொடிய அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

அதேபோல், தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்ட 124 பேரில் 80 பேர் டெல்லி மாநாட்டுக்கு சென்று திரும்பியவர்கள் என்று தெரியவந்துள்ளது. பாதிக்கப்பட்ட அனைவரும் திடமாக இருக்கிறார்கள் என்றாலும் கூட, தமிழகத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு அடுத்த சில நாட்களில் அபாயகரமான அளவில் அதிகரிக்கும் என்பது தான் கவலையளிக்கிறது.

சமூக பொறுப்பு

டெல்லியில் நடந்த மாநாட்டில் தமிழகத்திலிருந்து 1131 பேர் பங்கேற்றுள்ளனர். அவர்களில் இதுவரை 515 பேர் மட்டுமே அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு தான் கொரோனா வைரஸ் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள 616 பேர் இன்று வரை அடையாளம் காணப்படவில்லை. இது தான் தமிழகத்தில் சமூகப்பரவலை தொடங்கி வைத்து விடுமோ அல்லது தொடங்கி வைத்திருக்குமோ? என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது. நிலைமை மேலும் மோசமடையாமல் தடுக்க அடையாளம் காணப்படாத 616 பேரையும் உடனடியாக அடையாளம் கண்டு, அவர்களுக்கு கொரோனா சோதனை செய்யப்பட வேண்டும். சமூகப்பரவலை தடுக்க அவைருக்கும் பொறுப்பு அவசியம்.

ஆகவே, டெல்லி மாநாட்டில் பங்கேற்று திரும்பியவர்கள் தாங்களாக முன்வந்து கொரோனா ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதுடன், தங்களின் சமூகப் பொறுப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கொரோனா பாதிப்பின் முன்னேற்றம் குறித்த

துல்லியமான போக்கை கணிப்பது கடினம்

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தகவல்

புதுடெல்லி, ஏப்.2-
இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தொற்றுநோயியல் மற்றும் தொற்று நோய்கள் பிரிவின் தலைவர் ஆர்.கங்ககேத்கர் கூறியதாவது:-

இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில், கொரோனா பாதிப்பின் முன்னேற்றம் குறித்த துல்லியமான போக்கை கணிப்பது கடினம்.

பாதிப்பின் அடிப்படையில் முன்னேற்றத்தை வேறு எந்த நாட்டுடனும் ஒப்பிட முடியாது. மக்கள் வெளிப்படுவதற்கான ஆபத்து மற்றும் உடல் ரீதியான தூரத்தை கடைபிடிக்க வேண்டும்.

இரண்டு நாட்களுக்குள் இந்தியா உள்நாட்டு நோயறிதல் கருவிகளை உருவாக்கி விடும். இதுவரை, இந்தியாவில் 42 ஆயிரத்து 788 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. கொரோனாவை சோதிக்க 47 தனியார் ஆய்வகங்கள் அனுமதிக்கப்பட்டன.

இவ்வாறு அவர் கூறினார்.

வீட்டுக்குள்ளே வரும் புலி, சிங்கம்:

குதூகலிக்கும் குழந்தைகள்

கூகுள் இணையதளத்தில் அறிமுகம்

சென்னை, ஏப்.2-
குழந்தைகளை குதூகலப்படுத்தும் விதமாக வீட்டுக்குள்ளே புலி, சிங்கம் போன்றவற்றை 3-டி வடிவில் வரவைப்பதை கூகுள் இணையதளத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

வீட்டிலேயே முடக்கம்

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க, பெரும்பாலான நாடுகளில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஊரடங்கு உத்தரவால் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வீட்டிலேயே முடங்கி உள்ளனர்.

இதனால் வீட்டில் இருக்கும் குழந்தைகளிடையே எண்கள், பட விளையாட்டுகள் ஆகியவை பிரபலமாகி வருகின்றன. இந்நிலையில், கூகுள் நிறுவனம் 3-டி முறையில், விலங்குகளை உருவாக்கி தத்ருபமாக ஏ.ஆர் (ஆக்மென்டட் ரியாலிட்டி) முறையில் வீட்டுக்குள்ளேயே விலங்குகள், உயிரினங்களை கொண்டு வருகிறது. இதற்கு பலத்த வரவேற்பு கிடைத்து வருகிறது.

எப்படி கொண்டு வருவது?

முதலில் கூகுளில் புலி, சிங்கம், குதிரை என விலங்குகளின் பெயரை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் டைப் செய்ய வேண்டும். இதைத் தொடர்ந்து வரும் திரையை கீழ்நோக்கி நகர்த்தினால் விக்கிபீடியா பகுதிக்கு அருகில், 3-டி திரையில் காட்டு (ஷோ இன் 3-டி) என்று இருக்கும். அதைத் தொடவேண்டும். அதில் கர்ஜிக்கும் சிங்கம், உறுமும் புலி, கனைக்கும் குதிரை, நீந்தும் மீன் என நீங்கள் தேர்ந்தெடுத்த உயிரி அசையும். அதற்குக் கீழே 'வியூ இன் யுலர் ஸ்பேஸ்' என்ற தெரிவைத் தொடுங்கள். போனில் வீட்டின் குறிப்பிட்ட பகுதியைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். அங்கு போனை நிலையாக வைத்திருக்கவேண்டும். இனி வீட்டுக்குள்ளேயே அனைத்து மிருகங்களும் வரும். அதைக் கொண்டு போட்டோ எடுத்து விளையாடலாம்.

குழந்தைகள் மட்டுமல்லாது அனைத்து வயதினரும் இதைப் பயன்படுத்தி மகிழலாம். இது தொடர்பான படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

பெரும்பாலான அனைத்து ஸ்மார்ட் போன்களிலும் இது வேலை செய்கிறது. சில போன்களில் மட்டும் 'வியூ இன் யுவர் ஸ்பேஸ்' காண்பிக்கப்படுவதில்லை. அவர்கள் ஆண்ட்ராய்டு இயங்குதளம் 7.0 அல்லது அதற்கு மேல் இருக்கிறதா என்று பரிசோதிக்கவும். இல்லையெனில் ப்ளே ஸ்டோரில் அப்டேட் செய்துகொள்ளலாம்.

தூய்மை பணியாளருக்கு மலர் தூவும் மக்கள்

வைரலாகும் வீடியோ

பாட்டியாலா, ஏப்.2-

கொரோனா எனும் கொடும் அரக்கனை, இந்தியாவிலிருந்து அகற்றும் பணியில், டாக்டர்கள், நர்ஸ்கள், போலீசார் மற்றும் தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் உள்ள நாபா பகுதியில் வசிப்பவர்கள் தூய்மை பணியாளர்களை கவுரவிக்கும் வகையில் செய்த செயல், அனைவரையும் நெகிழ்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. அப்பகுதியில், துப்புரவு பணி செய்யும் தூய்மை பணியாளருக்கு மாலை அணிவித்தும், வீட்டின் மாடியிலிருந்து அவர்கள் மீது மலர் தூவியும், கைகளை தட்டியும் பாராட்டு தெரிவித்தனர்.

அதில் ஒருவர் ரூபாய் நோட்டுகளால் ஆன மாலையை அவருக்கு அணிவித்தார். இது தொடர்பான வீடியோ வெளியாகி சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

இந்தியாவில் இருந்து உயர் கல்விக்காக

வெளிநாடு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை குறைய வாய்ப்பு

கல்வியாளர்கள் தகவல்

புதுடெல்லி, ஏப்.2-

கொரோனா பாதிப்பு எதிரொலி காரணமாக உயர் கல்விக்காக இந்தியாவில் இருந்து வெளிநாடு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 50 சதவீதம் வரை குறைய வாய்ப்பு உள்ளதாக கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடு செல்லும் மாணவர்கள்

கொரோனோ தாக்கத்தால் மாணவர் சேர்க்கை, நுழைவுத்தேர்வு உள்ளிட்ட அனைத்து பணிகளையும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் ஒத்திவைத்துள்ளன. முன் எப்போதும் இல்லாத வகையில் உயர்கல்விக்காக இந்த ஆண்டு இந்தியாவில் இருந்து வெளிநாடு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை கொரோனா தாக்கத்தால் வெகுவாக குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு பல்கலைக்கழங்களில் ஏப்ரல் மாதம் கல்லூரிகளில் சேர இருந்த மாணவர்கள் ₹4 லட்சம் முதல் ₹15 லட்சம் வரை செலவு செய்து தற்போது உயர்கல்வியில் சேர முடியாத நிலையில் உள்ளனர்.

உயர்கல்வி

பொதுவாகவே இந்தியாவில் இருந்து வெளிநாடு சென்று உயர்கல்வி பயிலும் ஆர்வம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது.

மேலாண்மை, பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் உயர்கல்வி பயில இந்தியாவில் இருந்து லண்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா, பிலிப்பைன்ஸ், ரஷியா, சீனா உள்ளிட்ட பல வெளிநாடுகளுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 50 ஆயிரம் மாணவர்கள் வெளிநாடுகளுக்கு உயர் கல்விக்காக செல்கின்றனர்.

பணிகள் நடைபெறவில்லை

இந்நிலையில் கொரோனா தாக்கத்தால் இந்த ஆண்டு உயர்கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை 50 சதவீதத்துக்கும் மேல் குறையும் என்று கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கமாக வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் சர்வதேச ஆங்கில புலமை தேர்வு முறை மூலம் மாணவர் சேர்க்கையை மேற்கொள்ளும். அந்த வகையில் வழக்கமாக ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் அதிகளவு மாணவர் சேர்க்கையை வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ளும். தற்போது கொரோனோ நோய் தாக்கத்தால் நுழைவுத்தேர்வு உள்ளிட்ட பணிகள் நடைபெறவில்லை.

ஆன்லைன் மூலம்...

ஏப்ரல் மாதம் வெளிநாட்டில் உயர்கல்வியில் சேர உள்ள மாணவர்களுக்கு ஆன்லைன் முறையில் வெளிநாட்டு பல்கலைக்கழங்கள் வகுப்புகள் எடுப்பதாக தெரிவித்துள்ளன.

ஆனால் அங்குள்ள கல்வி முறை, மொழியை புரிந்து கொள்வது போன்றவை நேரிடையாக வகுப்பில் இருந்து பாடங்களை கற்பது போல வராது என்பதால் ஆன்லைன் முறையில் பாடங்களை அறிந்து கொள்ள அவை எந்த அளவு உதவும் என்பது கேள்விக்குறியாக மாறியிருக்கிறது என்பது கல்வியாளர்களின் கருத்தாக உள்ளது.

எண்ணிக்கை குறையும்

மேலும் கொரோனா தாக்கம் குறைந்து இயல்பு நிலை திரும்பினாலும் உலகின் பல பகுதிகளில் இருந்து ஒட்டு மொத்தமாக கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பங்கள் குவியும் என்பதால் மாணவர்களுக்கு இடம் கிடைப்பதிலும் கடுமையான சிக்கல்கள் ஏற்படும்.

அந்த வகையில் இந்த ஆண்டு பிற வெளிநாடுகளில் இருந்து இந்தியாவில் உயர் கல்வி சேரும் மாணவர்கள் எண்ணிக்கையும் வெகுவாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த

'பாரா கிளைடர்' மூலம் கிருமிநாசினி மருந்து தெளிப்பு

கோயம்புத்தூர், ஏப்.1-

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக, தமிழகத்தில் முதல் முறையாக 'பாரா கிளைடர்' மூலம் பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் கிருமிநாசினி மருந்து தெளிக்கப்பட்டது.

பாரா கிளைடர்

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் அருகேயுள்ள கடந்தூர் கிராமத்தை சேர்ந்த ஞானப்பிரகாசம், சிறிய ரக பாரா கிளைடரை வடிமைத்துள்ளார். இதை பயன்படுத்தி அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் மருந்து தெளித்து வந்துள்ளார்.

இதையறிந்த தமிழக சட்டப்பேரவை துணைத்தலைவர் பொள்ளாச்சி ஜெயராமன், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பொள்ளாச்சி நகர பகுதிகளில் கிருமிநாசினி மருந்து தெளிக்க பாரா கிளைடரை பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார்.

தினமும்...

இதையடுத்து பொள்ளாச்சி ஜெயராமன் முன்னிலையில், பாரா கிளைடரை இயக்குனவர்களான ஞானப்பிரகாசம், ஜெயநிரஞ்சன், சஞ்சய்ராஜ் ஆகியோர, பொள்ளாச்சி நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்திலிருந்து

மருந்து தெளிக்க பாரா கிளைடர் புறப்பட்ட காட்சி.

பாரா கிளைடரில் கிளம்பி, நகர பகுதிகளின் மேல் 50 அடி முதல் 100 அடி உயரத்தில் பறந்து கிருமிநாசினி மருந்து தெளித்தனர்.

இனி தினமும் காலை 6 மணி முதல் 8 மணி வரையும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் பாரா கிளைடர் மூலம் வானில் பறந்து, நகராட்சி மற்றும் கிராமப்புறங்களிலும் கிருமிநாசினி மருந்து தெளிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

முதல் முறை

ஏற்கனவே வாகனங்கள், டிரோன் மூலம் கொரோனா மருந்து தெளிக்கப்பட்டாலும் 'பாரா கிளைடர்' மூலம் கிருமிநாசினி மருந்து தெளிப்பது தமிழகத்தில் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டுக்கடைகள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூடப்பட்டதால்

கைத்தறி நெசவாளர்கள் வேலையின்றி தவிப்பு

காஞ்சீபுரம், ஏப்.2-

காஞ்சீபுரத்தில் உள்ள அனைத்து பட்டுக்கடைகள் மற்றும் பட்டு கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூடப்பட்டு விட்டதால் 30 ஆயிரம் நெசவாளர்கள் வேலையின்றி தவித்து வருகின்றனர்.

கடைகள் மூடல்

கொரோனா நோய்த் தொற்று காரணமாக இந்தியா முழுவதும் 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக காஞ்சீபுரத்தில் உள்ள பட்டுக்கடைகள், பட்டு கூட்டுறவு விற்பனை சங்கங்கள் என அனைத்தும் மூடப்பட்டு விட்டன.

இந்நிலையில், தங்களுக்கு நிவாரணம் வழங்கக்கோரி காஞ்சீபுரம் மாவட்ட கைத்தறி மற்றும் துணிநூல் துறை துணை இயக்குனர் அலுவலகத்தில் நெசவாளர்கள் கோரிக்கை மனு அளித்தனர். இது குறித்து காஞ்சீபுரம் மாவட்ட பட்டு மற்றும் பருத்தி கைத்தறி நெசவு தொழிலாளர் சங்கத்தினர் கூறியதாவது:-

வேலையின்றி தவிப்பு

மத்திய, மாநில அரசுகள் கொரோனா நோய்த்தொற்று பரவாமல் இருப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளை கைத்தறி நெசவாளர்கள் வரவேற்கிறோம். முழுமையான ஒத்துழைப்பும் தருகிறோம்.

அதே நேரத்தில் காஞ்சீபுரத்தில் ஊரடங்கு உத்தரவு காரணமாக 30 ஆயிரம் நெசவாளர்கள் வேலையிழந்து தவித்து வருகின்றனர். சேலைகளை தயாரித்து வழங்கும் பட்டுக்கடைகளும், பட்டு விற்பனை செய்யும் அரசின் கூட்டுறவு சங்கங்களும் முழுமையாக மூடப்பட்டிருப்பதால் உற்பத்தி செய்த சேலைகளை யாரிடம் கொண்டு போய் கொடுப்பது என தெரியவில்லை.

குடும்பத்தை காப்பாற்ற...

கூலித்தொழிலே செய்ய முடியாமல் நெசவுத்தொழில் முடங்கிப்போய் இருக்கிறது. எனவே நெசவாளர் குடும்பங்களை காப்பாற்ற மானியமாக ஒவ்வொரு நெசவாளருக்கும் ₹10 ஆயிரம் வழங்கக்கோரி மனு அளித்துள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

வதந்தி பரப்புவோர் மீது நடவடிக்கை

ஈஷா மையம் கோரிக்கை

சென்னை, ஏப்.2-

ஈஷா யோகா மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் ஒரு நோய் தொற்று என அறிவிப்பதற்கு முன்பாகவும், மத்திய, மாநில அரசுகள் ஊரடங்கு உத்தரவு மற்றும் பயண தடைகளை விதிப்பதற்கு பல நாட்கள் முன்பாகவே ஈஷா யோகா மையத்துக்கு வந்த வெளிநாட்டினருக்கு சுகாதார வழிகாட்டு நெறிமுறைகளை விதித்து அதை தீவிரமாக செயல்படுத்தப்பட்டது.

இதுவரை இங்கு தங்கியுள்ள ஒருவருக்கு கூட கொரோனா தொற்றுக்கான அறிகுறி இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இதுதொடர்பாக, ஆதாரமின்றி வதந்தி பரப்புவோர் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

டெல்லியில் இருந்து கூட்டம், கூட்டமாக தொழிலாளர்கள் பயணம்:

கொரோனா பரவலுக்கு காரணமாகி விட்ட மோடி

கே.எஸ்.அழகிரி விமர்சனம்

சென்னை, ஏப்.2-

டெல்லியில் இருந்து கூட்டம், கூட்டமாக தொழிலாளர்கள் பயணம் செய்தோடியே கொரோனா பரவலுக்கு காரணமாகி விட்டார் என, தமிதன் மூலம் பிரதமர் நரேந்திர மழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி விமர்சித்துள்ளார்.

கே.எஸ்.அழகிரி

57 பேர் பாதிப்பு

தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா தொற்று நோய்க்கு தமிழகத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 57 பேர் பாதிக்கப்பட்டனர். வரலாறு காணாத வகையில் கடுமையான பாதிப்பை இந்தியா சந்தித்து வருகிறது. இதனால் ஏற்படப்போகிற விளைவுகள் குறித்து மிகுந்த தீவிர தன்மையோடு இப்பிரச்சினையை மத்திய, மாநில அரசுகள் அணுகினவா என்பதை ஆய்வு செய்கிற போது மிகுந்த வேதனை தான் மிஞ்சுகிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை

சீனாவில் இறுதியாக பிப்ரவரி 29-ந் தேதி 3,150 பேர் உயிரை பறிகொடுத்திருக்கிறார்கள். அதற்கு பிறகு சீனாவில் உயிரிழப்பு தடுக்கப்பட்டுள்ளது. இதை பார்த்த பிறகாவது இந்திய அரசு விழித்துக்கொண்டு நடவடிக்கைகளை எடுத்திருக்கவேண்டும்.

ஆனால், கடந்த மாதம் 4-ந் தேதி தான் வெளிநாடுகளிலிருந்து விமானங்களில் வருகிற பயணிகளை பரிசோதிக்கிற நடவடிக்கையை நரேந்திர மோடி அரசு எடுத்தது. ஊரடங்கு உத்தரவை அறிவிக்கும் முன், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஏதும் எடுத்ததாக தெரியவில்லை.

கூட்டம், கூட்டமாக...

இந்தியாவில் உள்ள ஏறத்தாழ 43 கோடி அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதை மத்திய அரசு உணரவில்லை. 14 கோடி தொழிலாளர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். வேலை இழந்து உணவு கிடைக்காமல் பல ஆயிரக்கணக்கானோர் டெல்லியில் இருந்து சொந்த ஊர்களுக்கு நூற்றுக்கணக்கான மைல்கள் நடந்தே செல்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

இதை முன்கூட்டியே அறிந்து திட்டமிட்டு அவர்களுக்கு தங்குமிடத்தையும், உணவையும் மத்திய அரசு ஏற்பாடு செய்திருக்க வேண்டாமா?. பஸ்களிலும், லாரிகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டமாக பயணம் செய்ததன் விளைவாக, தொற்றுநோயை தங்கள் கிராமத்துக்கு கொண்டு சென்று பரப்புகிற மிகக்கொடூர நிகழ்வு நடைபெற்றுள்ளது.

நோய் பரவல்

சமூக பரவல், தனிமைப்படுத்துதல் பற்றி தொலைபேசியில் உரையாற்றிய நரேந்திர மோடியே தொற்று நோய் பரவலுக்கு காரணமாக இருந்துவிட்டார். இவற்றுக்கு உரிய தீர்வை காண போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

புத்துயிர் பெறும் பாரம்பரிய விளையாட்டுகள்

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதால் சென்னையில் வசிக்கும் பெண்கள் சிலர் ஓய்வை கழிக்க தங்கள் வீட்டின் முன்பு அமர்ந்து தாயம் விளையாடிய போது எடுத்த படம். சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் தாயம், பல்லாங்குழி உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுகள் தற்போது புத்துயிர் பெற்று வருகின்றன.

கூலிக்கு ஆட்கள் வராததால்

ஒற்றை ஆளாய் நெல் அறுவடையில் வயது முதிர்ந்த விவசாயி

கன்னியாகுமரி, ஏப்.2-

கன்னியாகுமரியில் கூலிக்கு ஆட்கள் வராததால் ஒற்றை ஆளாய் நெல் அறுவைட பணியில் 87 வயது முதிர்ந்த விவசாயி தனது வயலில் அறுவடை செய்து நெற்கதிர்களை கரை சேர்த்து வருகிறார்.

நெல் அறுவடை

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 ஆயிரத்து 500 ஹெக்டேரில் தாமதமாக நடவு செய்யப்பட்டிருந்த 500 ஏக்கரில் நெற்கதிர் அறுவடை ஆகாமல் நெல்மணிகள் உதிர்ந்து வீணாகி வருகின்றன.

மதுரை, திருச்சி பகுதிகளில் இருந்து அறுவடை எந்திரங்களுடன் ஏற்கனவே வந்த தொழிலாளர்கள், தொடர்ந்து பணியை மேற்கொள்ள முடியாமலும், சொந்த ஊர்களுக்குச் செல்ல முடியாமலும் தவித்து வருகின்றனர்.

தனி ஆளாக...

இந்நிலையில் இரணியல், தேரூர், சுசீந்திரம் பகுதி வயல்களில் நெற்கதிர் வீணாவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தற்போது கொரோனா வைரஸ் பாதிப்பு, ஊரடங்கு உத்தரவு ஆகியவற்றால் கூலிக்கு ஆட்கள் வருவது இலலை.

இதனால் இரணியல் நல்லிகுளம் ஏலா பகுதியில் தனி ஆளாக நின்று தனது வயலில் அறுவடை பணியை விவசாயி ராஜையன் (வயது 87) மேற்கொண்டு வருகிறார். இது குறித்து அவர் கூறியதாவது:-

அறுவடை செய்வேன்

ஊரடங்கு உத்தரவு முடிந்த பின்னர் அறுவடை செய்யலாம் எனக் காத்திருந்தால், அனைத்து நெல்மணிகளும் உதிர்ந்து விடும். நல்ல விளைச்சல் அடைந்த நெற்கதிரை அப்படியே விட்டுவிட மனமில்லை.

இதனால்தான் உடல் ஒத்துழைக்காவிட்டாலும் சிறிது சிறிதாக நெற்கதிரை அறுத்து முடிந்தவரை கரைசேர்த்து வருகிறேன். உதவிக்கு எனது மனைவி, மக்களையும் வரவழைத்து 4 நாட்களிலாவது கதிர்களை அறுவடை செய்து விடுவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

குடும்பத்துடன் குதூகலம்

பணிச்சுமை, தொழிலுக்கு முன்னுரிமை என இருந்த பல தந்தையர்கள் குடும்பத்துடன் நேரத்தை செலவிடுவதையே மறந்து இருந்தனர். அப்படிப்பட்ட தந்தையர்களில் ஒருவர் மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரில் தற்போது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிலையில் தன் குடும்பத்தை சேர்ந்த குழந்தைகளுடன் ஓய்வை குதூகலமாக கொண்டாடி மகிழ்ந்த போது எடுத்த படம்.

'கொரோனாவுக்கு எதிரான போரில் நாம் வென்று மீண்டு வருவோம்'

சீமான் சொல்கிறார்

சென்னை, ஏப்.2-

கொரோனாவுக்கு எதிரான போரில் நாம் வென்று மீண்டு வருவோம் என சீமான் கூறியுள்ளார்.



சீமான்

இது குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள கொரோனா விழிப்புணர்வு வீடியோவில் கூறியிருப்பதாவது:-

தவிர்க்க முடியாத போர்

உலகெங்கிலும் கொரோனோ என்கிற இந்த நோய்த்தொற்று நுண்ணுயிரியால் பேரச்சம் பரவியிருக்கிறது. இந்த சூழலில் மருத்துவர்கள் அறிவுறுத்துவதுபோல் நம்முடைய கைகளை அடிக்கடி கழுவி தூய்மைப்படுத்திக் கொண்டு, வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணிதல், கைகொடுப்பதை தவிர்த்தல் என நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டிய தேவை உள்ளது.

இந்த நோய்த் தொற்று தவிர்க்க முடியாத போராக மாறிவிட்டது. கண்ணுக்கு தெரியாத இந்த நுண்ணுயிரி ஓர் உலகப் போரை தொடுத்துள்ளது. இதை எதிர்கொள்கிற நாம் ஒவ்வொருவரும் போராளிதான் என்றாலும் களத்தில் நின்று தீவிரமாக பணியாற்றிகொண்டிருக்கிற மருத்துவ துறையினர் காவல்துறையினர், தூய்மை பணியாளர்கள், அத்தியாவசிய பொருட்களை தந்து கொண்டிருப்பவர்கள்தான் களத்தில் முன்னணியில் நின்று போராடும் போராளிகள். அவர்களுக்கு உதவியாக நாம் இருக்க அரசு அறிவித்து இருப்பதுபோல ஊரடங்கு உத்தரவை ஏற்று வீட்டுக்குள் நம்மை நாமே பாதுகாப்பாக பார்த்து கொள்வதுதான்.

மீண்டு வருவோம்

இந்த ஊரடங்கு யாரும் விரும்பி ஏற்றுக்கொண்டதல்ல. திணிக்கப்பட்டதும் அல்ல. காலரா, பெரியம்மை, போலியோ போன்ற எத்தனையோ கொடிய நோய்களில் இருந்தெல்லாம் நாம் மீண்டுள்ளோம். அதுபோல இதிலிருந்தும் நாம் மீண்டுவருவோம். நம்பிக்கையோடு, பாதுகாப்பாக இருங்கள். நாம் பிறரை சந்திக்காமல் தவிர்ப்பது, கூட்டத்தில் போய் சிக்கி கொள்ளாமல் இருப்பது மற்றவர்களிடமிருந்து நமக்கு இந்த நோய்த் தொற்று வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

எனவே இதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்பிக்கையோடு இருங்கள், நாம் இதிலிருந்து மீண்டு வருவோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தலையங்கம்

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

2.4.2020 (வியாழக்கிழமை)

தமிழ்நாட்டை கலங்கடிக்கும் கொரோனா

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் சூறாவளியைப்போல சுழன்று சுழன்று அடித்து வருகிறது. நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தை அடைய 44 நாட்கள் ஆகியது. ஆனால் கடந்த 4 நாட்களில் அதாவது நேற்று வரை, பாதிப்புக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை 6 லட்சத்தில் இருந்து 8 லட்சத்து 72 ஆயிரத்து 972 ஆகிவிட்டது. இந்தியாவிலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்று மாலை 1,747-ஆக உயர்ந்துவிட்டது. உலகில் 41 நாடுகளில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டிவிட்டது. அந்தப் பட்டியலில் தற்போது இந்தியாவும் இடம் பிடித்துவிட்டது. தமிழ்நாட்டின் நிலைமையோ அதைவிடக் கவலைக்கிடமாக இருக்கிறது. ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு பெரும்பாலான மாநிலங்களைவிட மிகவும் பின்னால் இருந்தது. இப்போது மராட்டியத்திற்கு அடுத்தாற்போல் இருக்கும் கேரளாவையும் எட்டிப்பிடிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் டெல்லியில் நடந்த ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பியவர்களில் அதிகம் பேருக்கு பாதிப்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது தான்.

டெல்லியில் தப்லிக்-ஏ-ஜமாத் என்ற பெயரில் கடந்த 1926-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு முஸ்லிம் அமைப்பு சர்வதேச அளவில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பிற்கான 'மர்கஸ்' என்னும் தலைமையகம் அங்குள்ள நிஜாமுதீன் பகுதியில் இருக்கிறது. இங்கு

அவ்வப்போது மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் கடந்த மார்ச் மாதம் 8-ந்தேதி முதல் 10-ந்தேதி வரையும், 12-ந்தேதி முதல் 15-ந்தேதி வரையும், 2 கட்டமாக மாநாடுகள் நடந்தன. இதில் வங்காள தேசம், சவுதி அரேபியா, இந்தோனேஷியா, மலேசியா, இலங்கை மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 1,131 பேர் பங்கேற்றனர். வெளிநாட்டில் இருந்து வந்தவர்களால், இவர்களில் பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கிறது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் விமானம் மூலமும், ரெயில் மூலமும் மற்றும் மற்ற மாநிலங்களுக்கு சென்றுவிட்டு, பஸ், கார் மூலமும் தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பி இருக்கிறார்கள். ஏற்கனவே டெல்லி மாநாட்டில் கலந்துகொண்ட ஒருவர் மதுரையில் உயிரிழந்து இருக்கிறார். வெளிநாட்டினரால் இவர்களுக்கு கொரோனா தொற்று நோய் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தமிழக அரசு இவர்களை அடையாளம் கண்டு, மருத்துவ பரிசோதனை செய்ய மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுவரையில் 1,103 பேர் அடையாளம் காணப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ரத்த மாதிரிகள் எடுத்து பரிசோதனை நடந்து வருகிறது. மீதமுள்ளவர்கள் தாங்கள் மாநாட்டில் கலந்து கொண்ட தகவலை அவர்களாகவே முன்வந்து, அரசிடம் தெரிவித்து தங்களையும் காப்பாற்றி, தங்கள் குடும்பத்தையும் காப்பாற்றி, தங்களோடு தொடர்புகொண்ட அப்பாவிகளையும் காப்பாற்ற வேண்டும். கொரோனா வைரஸ் பாதிப்பு அவர்களோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. அவர்களோடு தொடர்புகொண்ட எல்லோரையும் தன் கொடிய கரங்களால் சீண்டிவிடுகிறது.

இப்போது, தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 234-ஆக உயர்ந்துகொண்டு போவதற்கு முக்கியமான காரணம் இந்த டெல்லி மாநாட்டில் கலந்து கொண்டவர்கள்தான். ஏற்கனவே ஒரு சிலர் அடையாளம் காணப்பட்டநிலையில், நேற்று முன்தினம் மட்டும் 50 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்றும் 110 பேர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். ஆக டெல்லி மாநாட்டுக்கு சென்று அடையாளம் காணப்படாத இன்னும் ஒரு சிலரும் மற்றும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பியவர்கள் பற்றி தகவல் தெரிந்த பொதுமக்களும், உடனடியாக சுகாதாரத் துறைக்கும், உள்ளாட்சித் துறைக்கும் தெரிவிக்க வேண்டும். மேலும் கொரோனா சமூக பரவலாக மாறக்கூடாது என்றால், எல்லோருமே இதை தங்கள் சமூக கடமையாக கொண்டு அரசு அறிவித்த ஊரடங்கு சட்டத்தை முறையாக பின்பற்றுவதே சாலச் சிறந்ததாகும்.

விழித்திருப்போம், விலகி இருப்போம், வீட்டில் இருப்போம்.

ஆன்மிகம்

மனிதனுடைய ஆசைகள் எதுவும் நிறைவேறாதபடி வயோதிகம் தடைபோட்டுவிடுகிறது. மாலை நேரத்தை தொடர்ந்து இருள் சூழ்வதைப் போல, வயோதிகத்தை பின்தொடர்ந்து மரணம் வந்துவிடுகிறது.

-ஸ்ரீராமர்

எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.

-1 கொரிந்தியர் 1:30-31

(நபியே!) இப்பொழுது இவர்கள் உம்மைப் பொய்யர் என்று தூற்றுகிறார்கள்(என்றால் இது புதிய விஷயமல்ல). உமக்கு முன்பும் தூதர்கள் பலர் பொய்யர்கள் என்று தூற்றப்பட்டிருக்கின்றார்கள். மேலும், அனைத்து விவகாரங்களும் இறுதியில் அல்லாஹ்விடம்தான் திரும்பக் கொண்டு வரப்பட இருக்கின்றன.

-திருக்குர்ஆன்-35:4

பூ மார்க்கெட் பூட்டப்பட்டதாலும், பறிக்க ஆட்கள் இல்லாததாலும் மதுரை பகுதியில் பூத்து குலுங்கும் செண்டு பூக்களை படத்தில் காணலாம்.

அறுவடையாகாததால்

வீணாய் போகும் பூக்கள், மிளகாய் செடிகள்

விவசாயிகள் கவலை

மதுரை, ஏப்.2-

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதால் மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளில் பூக்கள், மிளகாய் செடிகள் அறுவடையாகாமல் வீணாகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டின் 'ஹாலந்து'

கோவில் திருவிழாக்கள், திருமணங்கள், விழாக்கள் போன்றவற்றில் பூக்கள் அதிகளவில் பயன்படுத்தப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில் ரோஜா, வாடாமல்லி, செண்டுமல்லி, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பூக்கள் தமிழ்நாட்டின் 'ஹாலந்து' என்றழைக்கப்படும் திண்டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது. இங்கிருந்து கேரளா, கர்நாடகம் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும், மதுரை, நெல்லை உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கும் பூக்கள் ஏற்றுமதி செய்யப்படும்.

ஊரடங்கு உத்தரவு

திண்டுக்கல் மாவட்டத்தில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் கோவில் திருவிழாக்கள் கோலாகலமாக நடைபெறுவது வழக்கம். தற்போது கொரோனாவை கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் நடைபெற இருந்த கோவில் திருவிழாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் திண்டுக்கல் பூ மார்க்கெட் மூடப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவால் வாகன போக்குவரத்து ரத்து செய்யப்பட்டு விட்டது. இதனால் பூ விவசாயம், பூ ஏற்றுமதி அடியோடு நின்று விட்டது

மேலும் திருமணங்கள் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருந்தால் குறைந்த எண்ணிக்கையிலான நபர்களுடன் திருமணத்தை நடத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருந்தது. அதன்படி பல்வேறு இடங்களில் திருமணங்கள் எளிய முறையில் வீடுகளிலேயே நடத்தப்படுகிறது. இதனால் பூக்களின் பயன்பாடு பெருமளவு குறைந்துவிட்டது. இது மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் பூ உற்பத்தி செய்யும் விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது.

மதுரை மல்லிகை பூ

மதுரை என்றால் மல்லிகைப்பூ மணக்கும் என்பார்கள். அந்தகை வகையில் மதுரை மல்லிகை பூவுக்கு தனி மவுசு உண்டு. மதுரை மாவட்டத்திலும், சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் கிணற்றுநீர் பாசனமாக ஏராளமான விவசாயிகள் தங்களது தோட்டங்களில் மல்லிகைப்பூ விவசாயம் செய்து வருகின்றனர்.

ஆனால் ஊரடங்கு உத்தரவால் மல்லிகைப்பூக்களை பூ மார்க்கெட்டிற்கு கொண்டு செல்ல முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். கடந்த 5 நாட்களாக பூ பறிப்பதை விட்டுவிட்டனர். இதனால் செடியிலே பூ மலர்ந்து உதிரும் நிலை ஏற்பட்டுள்ளது.

வாழை சாகுபடி

மேலும் மதுரை பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் ஏராளமான விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். விவசாயிகள் தங்களது கிணற்றில் இருந்து தோட்டத்திற்கு இரவு, பகலாக தண்ணீர் பாய்ச்சி வாழையை பாதுகாத்து வருகின்றனர்.

ஊரடங்கு உத்தரவால் தங்களது தோட்டங்களில் இருந்து வாழை இலை, வாழைக்காயை மதுரை மார்க்கெட்டிற்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் ஓட்டல், சிற்றுண்டிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதால் வாழை இலை விற்பனை முழுமையாக இல்லை. இதனால் வாழை இலை அறுப்பது, வாழைக்காய் அறுவடை பணிகள் எதுவும் நடக்கவில்லை. இதன் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பச்சை மிளகாய்

தோட்டங்களிலும், வயல்களிலும் அதிக அளவில் மிளகாய் சாகுபடி நடக்கிறது. இருந்தாலும் பச்சை மிளகாய் சரிவர அறுவடை ஆகாமலும், அறுவடையான மிளகாய்கள் மார்க்கெட்டுக்கு போகாத நிலையும் உள்ளது. பச்சை மிளகாய் பறிப்பது நிறுத்தப்பட்டுள்ளதால் அவை பழமாக பழுத்து வத்தலாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயமும், வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகும் நிலை உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். இதேநிலைதான் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் நிலவி வருகிறது.

தமிழக அரசு உடன்படாவிட்டாலும்

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தி.மு.க.வின் பங்களிப்பை வழங்குவோம்

மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை, ஏப்.2-

தமிழக அரசு உடன்படாவிட்டாலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தி.மு.க.வின் பங்களிப்பையும், ஆதரவையும் வழங்குவோம் என மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மு.க.ஸ்டாலின்

முழு ஆதரவையும் வழங்குவோம்

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைதொடர்பாக அனைத்து கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என தி.மு.க. தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் உள்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் தமிழக முதல்-அமைச்சரிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

இதற்கு முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, "இது மருத்துவம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதில் அனைத்துக்கட்சி கூட்டம் கூட்டவோ, அரசியல் செய்யவோ அவசியமில்லை" என கூறி இருந்தார்.

இந்தநிலையில், அனைத்து கட்சிக் கூட்டம் நடத்தப்பட வேண்டியதன் நோக்கத்தை வலியுறுத்தி, மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள 'டுவிட்டர்' பதிவில், "அனைத்துக்கட்சி கூட்டத்தின் நோக்கம், மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் தமிழக மக்களின் நல்வாழ்வை உறுதிசெய்வதே ஆகும். தமிழக அரசு இதற்கு விழைகிறதோ இல்லையோ, நாங்கள் தொடர்ந்து மக்களின் இந்த இக்கட்டான நேரத்தில் எங்கள் பங்களிப்பையும் முழு ஆதரவையும் வழங்குவோம்" என கூறியுள்ளார்.

உதவ வேண்டும்

மேலும், மராட்டிய மாநிலத்தில் உணவும், இருப்பிடமும் இல்லாமல் சிக்கித் தவிக்கும் 120 வியாபாரிகளுக்கு உதவ வேண்டும் என்று மராட்டிய முதல்-மந்திரி உத்தவ் தாக்கரேவுக்கு தனது 'டுவிட்டர்' பதிவு மூலம் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.

இதேபோல், கர்நாடக மாநிலம் மைசூரு மற்றும் கங்கவதி பகுதிகளில் சிக்கித் தவிப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்று அம்மாநில முதல்-மந்திரி எடியூரப்பாவுக்கும், தெலுங்கானா மாநிலத்தில் சிக்கித் தவிப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்று முதல்-மந்திரி சந்திரசேகர ராவுக்கும் 'டுவிட்டர்' பதிவு மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மு.க.ஸ்டாலின் நன்றி

இதையடுத்து, தெலுங்கானாவில் சிக்கித் தவித்தவர்களுக்கு தலா 12 கிலோ அரிசி மற்றும் தலா ₹.500 உதவித் தொகை வழங்கப்பட்டதாக அந்த மாநில நகராட்சி நிர்வாகத்துறை மந்திரி கே.டி.ராமாராவ் டுவிட்டரில் பதிவிட்டு இருந்தார்.

அதேபோன்று, மராட்டிய மாநில முதல்-மந்திரி உத்தவ் தாக்கரேவும், இதுகுறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டருக்கு தெரிவிக்கப்பட்டு இருப்பதாகவும், அவர்களுக்கு முறையான உணவு மற்றும் இருப்பிட வசதிகள் அளிக்கப்பட்டு, அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் டுவிட்டரில் கூறியுள்ளார்.

இதையடுத்து தனது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிய உத்தவ் தாக்கரேவுக்கும், கே.டி.ராமாராவுக்கும் மு.க.ஸ்டாலின் தனித்தனியே நன்றி தெரிவித்து டுவிட்டர் பதிவுகள் வெளியிட்டுள்ளார். அதில், "இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழக வியாபாரிகளுக்கு உடனடியாக உதவி செய்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என கூறியுள்ளார்.

ஊரடங்கு உத்தரவால் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

நடவடிக்கை எடுக்க ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஏப்.2-

ஊரடங்கு உத்தரவால் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தினார்,

ராமதாஸ்

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

விலை உயர்வு

ஊரடங்கு ஆணை நடைமுறைப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வரும் நிலையில், கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அரிசி விலை கிலோவுக்கு ₹5 வரை உயர்ந்திருக்கிறது. மளிகைக்கடைகளிலும், அரிசி மட்டும் விற்பனை செய்யும் கடைகளிலும் மிகக்குறைந்த அளவிலேயே அரிசி இருப்பு உள்ளது.

இப்போதுள்ள அரிசி இருப்பு இன்னும் சில நாட்களுக்கு மட்டும் தான் போதுமானது என்பதால், அடுத்த வாரத்தில் கடுமையான அரிசி தட்டுப்பாடு ஏற்படும். அதே போல் அனைத்து வகையான எண்ணெய், பருப்பு விலைகள் உயர்ந்திருக்கின்றன.

தட்டுப்பாட்டை போக்க...

ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு அரிசி வருவது முற்றிலுமாக தடைபட்டு விட்டது. இத்தகைய சூழலில் விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சீபுரம் மற்றும் காவிரி பாசன மாவட்டங்களில் இருந்து கிடைக்கும் அரிசியை கொண்டு தான் தமிழகத்தின் அரிசி தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

ஆனால், அங்குள்ள அரிசி ஆலைகள் அனைத்தும் மூடப்பட்டு விட்டதால் அரிசி உற்பத்தி முழுமையாக தடைபட்டு விட்டது. இதுதான் விலைகள் அதிகரித்ததற்கும் காரணங்கள் ஆகும். தட்டுப்பாட்டை போக்க பாதுகாப்பு விதிகளுக்கு உட்பட்டு, அந்த ஆலைகளில் இருந்து தமிழகம் முழுவதும் லாரிகள் மூலம் அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை கொண்டு செல்ல அரசு அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஆண்டியார்

ஆண்டியார் பாடுகிறார்:-

மானே மானே உறவென நினைச்சேனே! நானே நானே உசுருக்குள் ஒளிச்சேனே! சொக்கவச்சப் பச்சக்கிளி சுத்த உட்டுப் பாத்ததென்ன? முத்தம் ஒன்னு கேட்டதுக்கு வெக்கப்பட்டு போனதென்ன...

இன்று நாள் எப்படி...?

கணித்தவர்: 'ஜோதிடக் கலைமணி' சிவல்புரி சிங்காரம்

2.4.2020 விகாரி வருடம் பங்குனி மாதம் 20- நாள். வியாழக்கிழமை. நவமி திதி இரவு (9.17) வரை. பிறகு தசமி திதி. புனர்பூசம் நட்சத்திரம் பகல் (2.22) வரை. பிறகு பூசம் நட்சத்திரம். அமிர்தயோகம். சமநோக்குநாள். ராமநவமி. நன்மைகள் நடைபெற ராமபிரானை வழிபட வேண்டிய நாள்.

தினப்பலன்

மேஷம்: அல்லல்கள் தீர அனுமனை வழிபட வேண்டிய நாள். உடன் பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம்.

ரிஷபம்: எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். உங்கள் செயல்பாட்டில் வேகம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

மிதுனம்: நன்மைகள் வந்து சேர ராமபிரானை வழிபட வேண்டிய நாள். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவீர்கள். பிள்ளைகளைப் பற்றிய கவலை மேலோங்கும். பாகப் பிரிவினைகள் பற்றிய பேச்சு எழும்.

கடகம்: அரசியல்வாதிகளால் அனுகூலம் கிடைக்கும் நாள். ஆரோக்கியம் சீராகும். வழக்கமான பணிகளை சுணக்கமின்றிச் செய்து முடிப்பீர்கள். அதிக விரயத்தால் அமைதி குறையும்.

சிம்மம்: பிரபலங்களின் அறிமுகத்தால் பிரச்சினைகள் தீரும் நாள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டப் புதிய வழிபிறக்கும். மாற்று இனத்தவர்கள் மூலம் மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும்.

கன்னி: மனக்குழப்பம் அகல மாருதியை வழிபட வேண்டிய நாள். அத்தியா வசியப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். இட விற்பனையால் லாபம் கிடைப்பது பற்றிச் சிந்திப்பீர்கள்.

துலாம்: குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும்நாள். கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நேரிடும். தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். நட்பால் நன்மை உண்டு.

விருச்சிகம்: ஆதரவு கூட ஆஞ்சநேயரை வழிபட வேண்டிய நாள். நேற்று முடிக்க முடியாமல் விட்டுப்போன பணிகளை இன்று முடிப்பீர்கள். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை.

தனுசு: யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். எந்தக் காரியத்தையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. துணிவும், தன்னம்பிக்கையும் குறையும். தொலைதூரத்திலிருந்து வரும் தகவல் துயரம் தரலாம்.

மகரம்: நிதானத்தோடு செயல்பட்டு நிம்மதியை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நாள். பணப் பற்றாக்குறையை உங்கள் புத்தி சாலித்தனத்தால் சமாளிப்பீர்கள். வரன்கள் வாயில் தேடி வரலாம்.

கும்பம்: விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள். எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும். உடல்நலம் சீராகும். கொள்கைப்பிடிப்போடு செயல்படுவீர்கள். பற்றாக்குறை அகலும்.

மீனம்: நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவிற்கு வரும் நாள். வாங்கிய இடத்தை விற்கிறோமே என்று கவலைப் படுவீர்கள். பஞ்சாயத்துகள் சாதகமாக முடியலாம்.

பொதுப்பலன்

கார்த்திகை, உத்ரம், உத்ராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு காரிய வெற்றி ஏற்படும் நாள். விருச்சிக ராசிக்காரர்களுக்கு தெய்வீக நாட்டம் அதிகரிக்கும் நாள்.

சந்திராஷ்டமம்: காலை 8.32 வரை விருச்சிகம். பிறகு தனுசு.

திருப்பூரில் புதிய முயற்சி:

காய்கறி சந்தைக்குள் மக்கள் செல்ல கிருமிநாசினி சுரங்கம்

திருப்பூர், ஏப்.2-

திருப்பூரில் புதிய முயற்சியாக காய்கறி சந்தைக்குள் செல்லும் பொதுமக்கள் மீது நவீன கருவி மூலம் கிருமி நாசினி தெளிக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் கிருமிநாசினி சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

கிருமிநாசினி பாதை

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில் மத்திய-மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் திருப்பூர் தென்னம்பாளையத்தில் உள்ள காய்கறி சந்தைக்கு மக்கள் தினமும் வந்து செல்கிறார்கள். காலை நேரம் மளிகை கடைக்காரர்கள், சிறு வியாபாரிகள் இந்த சந்தைக்கு வந்து செல்கிறார்கள். பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதியான இங்கு வருபவர்கள் கைகளை கழுவும் வகையில் சோப்பு மற்றும் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுமக்கள் மீது நவீன கருவி மூலமாக ஸ்பிரே முறையில் தெளிக்கும் வகையில் கிருமிநாசினி சுரங்கம் முதன்முறையாக தென்னம்பாளையம் சந்தையின் நுழைவு வாயில் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாதை வழியாக பொதுமக்கள் 3 முதல் 5 நொடிகளில் கடந்து செல்ல வேண்டும். அப்போது கிருமிநாசினி அவர்கள் மீது தானாகவே தெளிக்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் தென்னம்பாளையம் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள கிருமிநாசினி சுரங்க பாதை வழியாக பெண் ஒருவர் வந்த போது எடுத்த படம்.

இந்த கருவியை திருப்பூர் மாவட்ட கலெக்டர் விஜய கார்த்திகேயன் நேற்று காலை தொடங்கி வைத்து கிருமிநாசினி சுரங்கம் வழியாக சென்று வந்தார்.

பாதிப்பு ஏற்படாது

இதுகுறித்து கலெக்டர் விஜய கார்த்திகேயன் நிருபர்களிடம் கூறியதாவது:-

திருப்பூரில் முதன்முறையாக கிருமிநாசினி சுரங்க பாதை உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சந்தைக்கு செல்வதற்கு முன்பு தனது கைகளை சோப்பு போட்டு கழுவிவிட்டு அதன்பிறகு இந்த கிருமிநாசினி சுரங்க பாதை வழியாக 3 முதல் 5 நொடிகளுக்குள் செல்லும்போது அவர்கள் மீது கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது. இதில் 1 பி.பி.எம். அளவில் சோடியம் கைப்போகுளோரைடு பயன்படுத்தப்படுகிறது. குடிநீரில் கலக்கும் அளவை விட இது குறைவு தான்.

இதனால் சருமத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது. இந்த கிருமிநாசினி சுரங்க பாதை அமைக்க ₹80 ஆயிரம் செலவாகிறது. அனைவரின் ஒத்துழைப்புடன் இது அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கூடும் மற்ற பகுதிகளிலும் இவ்வாறு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக இது போன்ற சுரங்க பாதை வழியாக வாகனத்தில் கடக்கும் போது கிருமிநாசினி தெளிக்கும் வகையில் அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

39 பேருக்கு தொற்று இல்லை

திருப்பூர் மாவட்டத்தில் இதுவரை 1,312 பேர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்கள். டெல்லி மாநாட்டில் பங்கேற்று திரும்பிய திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த அனைவரையும் அடையாளம் கண்டுவிட்டோம். மாநகரில் 9 பேரும், ஊரக பகுதியில் 30 பேரும் என மொத்தம் 39 பேர் உள்ளனர். இது தவிர ஒரு சிலர் டெல்லியிலேயே இருக்கிறார்கள். 39 பேருக்கும் கொரோனா தொற்று அறிகுறி இதுவரை இல்லை. இருப்பினும் தினமும் அவர்களின் மருத்துவ அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

உறவுகளை மேம்படுத்தும் ‘கொரோனா தனிமை’

இதுதான் வாழ்க்கை என்பது இப்போது நமக்கு புரிந்திருக்கிறது. கண்ணுக்கு தெரிந்த எவ்வளவு பெரிய எதிரியையும் சமாளிக்க நாம் கற்று வைத்திருக்கிறோம். ஆனால் கண்ணுக்கு தெரியாத ஒரு நுண்ணுயிரி நம்மை ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறது. நமது உயிருக்கே அச்சுறுத்தலாகிவிட்ட கொரோனா வைரசுக்கு பயந்து நம்மை நாமே தனிமைப்படுத்தி முடக்கிப் போட்டிருக்கிறோம்.

இருக்கட்டும்! வாழ்க்கை இதுதான் என புரிந்துகொள்வோம். அதே நேரத்தில் ‘எல்லா தீமை களுக்குள்ளும் சில நன்மைகள் உண்டு’ என்ற உலக உண்மையையும் நாம் மறந்துவிட வேண்டாம்.

கடவுளாகப்பார்த்து ஒரு தனிமையை உருவாக்கி, வீட்டில் முடக்கிப்போட்டு ‘இந்த குடும்பம்தான் உனது உலகம்’ என்ற உண்மையை புரிய வைத்திருக்கிறார். நமது மகிழ்ச்சியும், நமது பொழுதுபோக்கும் மால்கள், சினிமா தியேட்டர்கள், ஓட்டல்கள், பயணங்களில்தான் இருக்கிறது என கருதி சுற்றித்திரிந்துகொண்டிருந்தோம். அவை எல்லாம் நிஜமில்லை. நமது மகிழ்ச்சியும், பாதுகாப்பும், பொழுதுபோக்கும் நமது வீட்டிற்குள்ளேதான் இருக்கிறது’ என்ற உண்மையை இப்போது உணர்கிறோம். குடும்பம் மற்றும் உறவுகளின் மதிப்பு இப்போதுதான் பலருக்கும் புரிகிறது.

உணர்ந்து தெளியும் இந்த நேரத்தில், உறவுகளோடு இதுவரை காட்டி வந்த இடைவெளிகளால் சில நெருக்கடிகள் இருக்கத்தான் செய்யும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி அந்த இடைவெளியை குறைத்து, இணக்கத்தை உருவாக்குங்கள். அப்படி இணக்கத்தை உருவாக்கி, மகிழ்ச்சியாய் வாழ தம்பதிகள் என்னென்ன செய்யலாம்?

காதல் திருமணம் செய்த தம்பதிகளாக இருந்தால், இப்போது உங்களுக்கான தனிமை நேரத்தை உருவாக்கி நீங்கள் காதலித்த தருணத்தை பற்றி மனம்விட்டு பேசுங்கள். காதலித்த நேரத்தில் ஒருவருக்கொருவர் காத்திருந்தது, கேலி–கிண்டலான விஷயங்கள், ருசிகரங்கள், ஒவ்வொரு தடவையும் பார்ப்பதற்கு எப்படி எல்லாம் ஏங்கினீர்கள்? ஒரு தொடுதலும், ஒரு முத்தமும் எவ்வளவு சிலிர்ப்பை தந்தது என்பதை எல்லாம் உணர்வு ரீதியாக பேசி பகிர்ந்துகொள்ளுங்கள். அந்த காலகட்டத்தில் நீங்கள் ஒன்றாக எடுத்த போட்டோக்கள் இருந்தால், அவைகளை பார்த்து மலரும் நினைவுகளை அசைபோடுங்கள்.

பெற்றோர் பார்த்து பேசி முடித்துவைத்த திருமணத்தில் இணைந்த தம்பதிகளுக்கும் தொடக்ககால நினைவுகள் ஏராளம் இருக்கும். அந்த நினைவலைகளை மீண்டும் வெளிக்கொண்டுவந்து பேசி, சிரித்து மகிழ்ந்து இணக்கத்தை மேம்படுத்துங்கள். இப்போது கொரோனா பயம் இருந்தாலும் அதை ஓரங்கட்டுங்கள். வீட்டிற்குள் இருந்தாலும் குளித்து, அலங்காரம் செய்துகொண்டு நேர்த்தியாக உடை அணிந்து உங்களவரை வசீகரிக்கலாம்.

வெற்றிகரமான மணவாழ்க்கைக்கு கணவன்–மனைவி இடையேயான ஈர்ப்பு மிக அவசியம். அந்த ஈர்ப்புதான் வாழ்க்கையை இன்பமாக்கும். ஓய்வில்லாமல் உழைத்து அந்த ஈர்ப்பு உங்களுக்குள் குறைந்துபோயிருந்தால், அதை புதுப்பித்துக்கொள்ளும் வாய்ப்பை இந்தச் சூழலில் உருவாக்குங்கள். ஒருவர் அழகை இன்னொருவர் புகழுங்கள்.

உயர்ந்த ரக ஓட்டலை தேடிச்சென்று சாப்பிடுவதுதான் மகிழ்ச்சி என்று சிலர் கருதுவீர்கள். ஆனால் உண்மையான சுகாதாரமும், மகிழ்ச்சியும் யாரோ சமைத்துக்கொடுத்த உணவில் இல்லை. உங்களுக்காக நீங்களே சமைத்து, சாப்பிடும் போதுதான் உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும். அதை கணவரோடு அமர்ந்து ருசித்து சாப்பிடுங்கள்.

மால்கள் அடைத்தாலும், ஓட்டல்கள் முடங்கி அங்குள்ள ஊழியர்கள் எல்லாம் வேலையின்றி ஓய்வில் இருந்தாலும், எப்போதும் வேலை செய்யும் நிலையில் குடும்பத்தலைவிகள் இருக்கிறார்கள். இப்போது குடும்பமே வீட்டில் இருப்பதால் பெண்களின் வேலை அதிகரித்திருக்கிறது. எல்லா பெண்களுமே ‘தங்கள் கணவர் வீட்டு வேலைகளை பகிர்ந்துகொள்வதில்லை. தனது நலனில் அக்கறை செலுத்துவதில்லை’ என்றெல்லாம் குறை கூறுவார்கள். அந்த குறையினை போக்கும் விதத்தில் கணவன்மார் மனைவிகளுக்கு வீட்டு வேலைகளில் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். மனைவி செய்யும் வேலைகளையும் மனமுவந்து பாராட்ட வேண்டும்.

பெண்களில் ஒரு பகுதியினருக்கு படுக்கை அறை சுகமான அனுபவங்களை தராமல் சோகமான அனுபவங்களைத்தான் தருகின்றன. ஏன் என்றால் காலை முதல் இரவு வரை நடந்த அனைத்து பிரச்சினைகள் பற்றியும் படுக்கை அறையில் வைத்துதான் விவாதிக்கிறார்கள். அது அவர்களுக்குள் கருத்து மோதலை உருவாக்கி, தாம்பத்ய உறவிலும் பெரிய இடைவெளியை உருவாக்குகிறது. வீட்டில் அத்தகைய சூழல் நிலவினால் இந்த நேரத்தில் அதற்கும் ஒரு முடிவு கட்டுங்கள்.

திருமணத்திற்கு பின்பு அன்பை பெரும்பாலும் ஆண்கள் வெளிப்படுத்துவதில்லை. தனிமையில் வீடுகளில் இருக்கும் இந்த நாட்களில் அந்த குறையை போக்க முன்வாருங்கள். ‘நான் உன் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறேன்’ என்று தினமும் மூன்று முறையாவது சொல்லுங்கள். ‘ஐ லவ் யூ’ என்று அடிக்கடி கூறுங்கள். இதற்கு தனிமையான நேரங்கள் தேவையில்லை. எல்லா நேரங்களிலும் சொல்லலாம். சில ஆண்கள் படுக்கை அறைகளில்தான் காதல் உணர்வுடன் பேசுவார்கள். அப்படி இருக்கக்கூடாது. எல்லா நேரங்களிலும் மனைவியுடன் அந்த அன்பு உணர்வை வெளிப்படுத்தவேண்டும்.

கணவனும்–மனைவியும் சேர்ந்திருப்பதற்காக கிடைத்த இந்த வாய்ப்பினை அன்பை பெருக்குவதற்காக மட்டுமே பயன்படுத்தவேண்டும். மாறாக இருவரும் அடுத்தவர்களின் தனிப்பட்ட விஷயங்களுக்குள் தலையிட கிடைத்த வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ளக்கூடாது. கணவன்–மனைவியாக இருந்தாலும் இருவருக்குள்ளும் போதுமான தனிமையும், இடைவெளியும் அவசியம். இருவரும் வேலை பார்ப்பவர்களாக இருந்தால், அவர்களுக்கென்று அலுவலக பொறுப்புகளும் இருக்கும். அதை வீட்டில் இருந்தே மேற்கொள்ளவேண்டிய நிலை உருவாகும். அதனால் அவர்களின் தொடர்புகளை கண்காணிப்பது, கருத்துச்சொல்வது போன்றவைகளை இருவருமே தவிர்க்கவேண்டும்.

கொரோனா பயமின்றி வீடுகளில் தனிமையை கொண்டாடுங்கள். நெருக்கடி என்பது எப்போதும் கொஞ்ச காலம்தான். இதுவும் நம்மை கடந்து போகும்! கவலைப்படாதீர்கள்!

–முனைவர் பார்வதி பாலசுப்பிரமணியன், (இயல், இசை, நாட்டிய கலைஞர்) சென்னை.

தாய்மார்களின் ‘ஆரோக்கியம்’

குடும்ப நலன் மீது முழுமூச்சாக கவனம் செலுத்தும் குடும்ப தலைவிகள் தங்கள் உடல் ஆரோக்கியம் சார்ந்த விஷயத்தில் போதுமான அக்கறை கொள்வதில்லை. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துவதற்கான முயற்சியையும் அவர்கள் மேற்கொள்வதில்லை என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

தாய்மார்கள் நலன் சார்ந்த ஆன்லைன் நிறுவனம் ஒன்று, கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு பிறகு நாடு முழுவதும் 500 பெண்களிடம் சர்வே நடத்தியுள்ளது. அவர்களின் உடல்நலன் சார்ந்த விஷயங்களை குறுந்தகவல், ஆடியோ, வீடியோ வடிவில் பதிவு செய்தது. அதில் 86 சதவீத தாய்மார்கள் கொரோனா வைரஸ் குறித்து போதுமான விழிப்புணர்வு கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. 10 பெண்களில் 7 பேர், கூட்டம் கூடும் இடங்களுக்கு செல்வதை தவிர்த்திருக்கிறார்கள். 5 பேர் பயணங்களை தவிர்த்திருக்கிறார்கள். அதேவேளையில் 50 சதவீத பெண்கள் மட்டுமே

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முககவசங்களை பயன்படுத்துகிறார்கள். 10 தாய்மார்களில் ஒருவர் மட்டுமே தங்களின் ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்தை கவனத்தில் கொண்டிருக்கிறார்கள். 10 தாய்மார்களில் 8 பேர் உணவு பழக்கம் பற்றி அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆனால் 70 சதவீதம் பேர் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்த எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை என்றும் சர்வே தகவல் தெரிவிக்கிறது. மேலும் 60 சதவீதம் பேர் தங்களுக்கு உடல்நலம் சரியில்லை என்றால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்வதில்லை என்றும் கூறி இருக்கிறார்கள். 10 தாய்மார்களில் 6 பேர் தங்கள் வீட்டு உபயோக பொருட்களைத்தான் மருந்தாக பயன்படுத்துவதாக கூறி இருக்கிறார்கள். உடல் மிகவும் பல வீனம் அடைந்த நிலையில்தான் மருத்துவமனையை அணுகுகிறார்களாம்.

உள்ளாடையும்.. உடல் நலமும்..

உள்ளாடைக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது. நிறைய பேர் உள்ளாடை விஷயத்தில் அலட்சியமாக இருந்துவிடுகிறார்கள். ஈரமான, இறுக்கமான உள்ளாடைகளை அணிவது நல்லதல்ல. அது சருமத்தில் எரிச்சல் ஏற்படுத்துவதோடு நோய் தொற்று ஏற்படகாரணமாகி விடும்.

○ துணிகளை துவைத்தபின்பு நறுமணம் வீசச்செய்யும் ‘டிடர்ஜெண்டுகளை’ நிறைய பேர் பயன்படுத்துகிறார்கள். அவை சருமத்திற்கு தீங்குவிளைவிக்காததாக இருக்க வேண்டும்.

○ பெண்கள் நிறைய பேர் இடுப்பு தசையை குறைக்கும் நோக்கத்துடனும், கட்டுடல் அழகை தக்க வைக்கவும் ‘ஷேப்வேர்’ எனப்படும் உள்ளாடைகளை அணிகிறார்கள். அதனை நீண்ட நேரம் அணிந்தால் ரத்த ஓட்டம் தடைப்படும். அதோடு வாயு, உடல் வீக்கம், அஜீரணம் போன்ற பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.

○ சிலருக்கு உடல் பகுதியில் தேவையற்ற முடி வளரும். முடியை சூழ்ந்து வீக்கம், தடிப்பு போன்ற பிரச்சினையும் உருவாகும். இறுக்கமான உள்ளாடை அணிபவர்களுக்கே இத்தகைய பிரச்சினைகள் ஏற்படக்கூடும். நீண்ட காலமாக இறுக்கமான உள்ளாடை அணிபவர்களுக்கு ஈஸ்ட் நோய் தொற்று பாதிப்பு அதிகரிக்கும்.

○ உள்ளாடைகள் வழியே சருமத்திற்கு போதுமான அளவு காற்று ஊடுருவி செல்ல வேண்டும். நிறைய பெண்கள் நைலான், பாலியெஸ்டர், லைக்ரா போன்ற காற்று உட்புக அனுமதிக்காத செயற்கை உள்ளாடைகளை அணிகிறார்கள். அவை ஆரோக்கியத்திற்கும், சுகாதாரத்திற்கும் நல்லதல்ல. பருத்தி போன்ற காற்று ஊடுருவக்கூடிய உள்ளாடைகளே சிறந்தது.

ஐக்கிய நாட்டு சபையில் ஒலித்த ‘குழந்தைகளின் கூக்குரல்’

சிரியாவில் ‘ஐ.எஸ்’ தீவிரவாதிகளின் கொட்டம் தலைவிரித்தாடிக்கொண்டிருந்த நேரம் அது. நான்கு வயது சிறுமியின் முன்னால், நவீன துப்பாக்கியுடன் தீவிரவாதி ஒருவன் நின்றுகொண்டு அவளை சுடுவதற்கு குறிபார்க்கிறான். எப்படியும் அவன் தன்னை கொன்றுவிடுவான் என்பது சிறுமிக்கு தெரிகிறது. மரண பீதி கண்களில் படர்ந்திருந்தாலும் வெகுளித்தனமாக அந்த சிறுமி ‘இரு.. இரு.. நீ செய்யும் இந்த கொடூர செயலை நான் மேலே போய் கடவுளிடம் சொல்கிறேன்’ என்று சொல்கிறாள். அந்த வீடியோ உலகம் முழுக்க வைரலாக பரவி, உள்நாட்டு தீவிரவாதிகளாலும், வெளிநாட்டு ராணுவத்தினராலும் உலகம் முழுக்க உள்ள குழந்தைகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எடுத்துரைத்தது.



ஐ.நா. சபை முன்பு டாக்டர் சத்தியநாராயணன்

அந்த காட்சி மனதளவில் ஏற்படுத்திய தாக்கத்தால் அதை ஐ.நா. சபை வரை கொண்டு போய் பேசி, தீர்வு தேட முயற்சித்திருக்கும் டாக்டரின் பெயர் வெ.சத்தியநாராயணன். இவர் காஞ்சிபுரத்தை சேர்ந்த நீரிழிவு நோய் நிபுணர். அந்த நோய் பற்றிய விழிப்புணர்வுக்காக 7 கின்னஸ் சாதனைகளை படைத்து உலகத்தின் கவனத்தை ஈர்த்தவர்.

‘‘பல்வேறு நாடுகளில் குழந்தைகள் உள்நாட்டு போரால் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். வெளிநாட்டு ராணுவத்தால் ஏற்படும் கொடுமைகளும் ஏராளம். அகதிகளாக வெளியேறும் குழந்தைகள் படும் அல்லல்களும் சொல்லமுடியாதவை. ஆய்வுரீதியாக அவைகளை பற்றிய முழுதகவல்களையும் தொகுத்தபோது எனது மனது கனத்துப் போனது. அதை ஐக்கிய நாட்டு சபையின் கவனத்திற்கு கொண்டு சென்று நிவாரணம் தேட வேண்டும் என்று முடிவு செய்தேன்.

ஐ.நா.வின் மனித உரிமை பிரிவில் ‘ஜெனரல் டிபேட்’ எனப்படும் வகையில் பொதுவிஷயங்கள் பற்றி பேச வாய்ப்பு தருவார்கள். குழந்தைகள் போரினால் பாதிக்கப்படுவது உலகின் மிக முக்கியமான பிரச்சினை என்பதால், அந்த ஆய்வுதகவல்களை ஐ.நா.வுக்கு அனுப்பினேன். அந்த பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதையும் சொல்லியிருந்தேன். அதை எல்லாம் ஆய்வு செய்துவிட்டு என்னை ஐ.நா.சபைக்கு பேச வரும்படி அழைத்தார்கள். அழைப்பினை ஏற்று அங்கு சென்று, கொரோனாவின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உரையாற்றி, உலகம் முழுக்க பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கூக்குரலை வெளிப்படுத்தினேன்’’ என்கிறார், டாக்டர் சத்தியநாராயணன்.

‘குழந்தைகளுக்கு போரினால் எப்படி எல்லாம் பாதிப்பு ஏற்படுகிறது என்று நீங்கள் ஐ.நா. சபை உரையில் குறிப்பிட்டீர்கள்?’ என்று அவரிடம் கேட்டபோது..

‘‘உலகில் இரண்டரை கோடி அகதிகள் இருக்கிறார்கள். அவர்களில் பாதி பேர் குழந்தைகள் என்பது வருத்தமான உண்மை. பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளில் பத்தில் ஒன்று ராணுவ ஆக்கிரமிப்பு நிறைந்த பகுதிகளில் அல்லது ராணுவம் சண்டையிடும் பகுதிகளில் இருக்கிறது. ஒரு நாட்டிற்கு உதவ இன்னொரு நாட்டில் இருந்து வரும் ராணுவம், அந்த நாட்டு பள்ளிக்கூடங்களில் போய் தங்கிவிடுவது தொடர்ந்து நடக்கிறது. அதனால் அந்தந்த பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் கல்வி மறுக்கப்படுகிறது.

உள்நாட்டு போராலும், வெளிநாட்டு ராணுவத்தினராலும் குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள். பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். போர் பயமும், பதற்றமும் குழந்தைகளை மிகுந்த மனஅழுத்தத்திற்கு உள்ளாக்குகிறது. துப்பாக்கி குண்டுகளாலும், கண்ணிவெடிகளாலும் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ரசாயன ஆயுதங்களின் பிரயோகங்கள் அவர்களுக்கு நுரையீரல் பாதிப்புகளை உருவாக்குகிறது. குழந்தைகள் உணவின்றியும், போதுமான சத்துணவு இல்லாமலும் தவிக்கிறார்கள். இவைகளை எல்லாம் ஆதாரபூர்வமான புள்ளி விவரங்களோடு எடுத்துரைத்தேன்’’ என்றார்.

‘இந்த பிரச்சினைக்கு நீங்கள் கொடுத்த தீர்வு என்ன?’ என்று கேட்டபோது..

‘‘நான் ஐ.நா.சபையில் மூன்று விதமான தீர்வுகளை சொன்னேன். ‘குழந்தைகளை அபகரிப்பது, துன்புறுத்துவது, கொலை செய்வது போன்றவை முற்றிலுமாக தடுக்கப்படவேண்டும். குழந்தைகளுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பாலியல் துன்புறுத்தல், பாலியல் பாதிப்புகள் முழுவதுமாக ஒடுக்கப்படவேண்டும். பள்ளிக்கூடங்கள் மற்றும் மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள் தடுக்கப்படவேண்டும்’ என்று குறிப்பிட்டேன். எனது உரையை எல்லா நாட்டு பிரதிநிதிகளும் ஆர்வமாக கவனித்தார்கள். போரில் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு இதனால் விடிவுபிறக்கும் என நம்புகிறேன்’’ என்கிறார், டாக்டர் சத்தியநாராயணன்.

கொரோனா பாதிப்பு ஐ.நா.சபையையும் விட்டுவைக்கவில்லை என்பதையும் இவர் சுட்டிக்காட்டுகிறார்.

‘‘நான் ஜெனீவா சென்ற அன்று அங்குள்ள மக்கள் வெகுஇயல்பாக காணப்பட்டார்கள். கொரோனாவை பற்றிய கவலையின்றி இயங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் மறுநாளே அங்கு பீதி பற்றிக்கொண்டது. மக்கள் அப்படியே வீடுகளில் முடங்கிவிட்டார்கள். நான் பேசிய அன்று கொரோனா பிரச்சினையால் 30 நாட்டு தலைவர்கள் ஐ.நா.வுக்கு வரவில்லை. நான் பேசிய மறுநாளே கொரோனாவால் ஐ.நா. சபை செயல்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அதற்காக அவசர நிலை கருதி கருத்துரைகளை விரைந்து நடத்திமுடித்தார்கள். நான் ஒன்றிரண்டு நாட்கள் அங்கே இருந்து சுவிட்சர்லாந்தை சுற்றிப்பார்க்கும் திட்டத்தோடு சென்றிருந்தேன். ஆனால் கொரோனா பாதிப்பு அதிகரித்ததால் விமானங்கள் ரத்துசெய்யப்பட்டன. அதனால் நானும் ஜெனீவாவில் இருந்து கத்தார் சென்று அங்கிருந்து சென்னை திரும்பினேன். எனக்கு எந்த விதமான கொரோனா அறிகுறி இல்லை என்ற போதிலும் என்னை நானே 14 நாட்கள் சுயதனிமைக்கு உட்படுத்திக் கொண்டேன்’’ என்றார்.

கழுத்து வலியா? கலக்கம் வேண்டாம்..

ஒரே இடத்தில் அமர்ந்து நீண்ட நேரம் வேலை பார்ப்பவர்கள் கழுத்து வலி பாதிப்புக்கு ஆளாகிறார்கள். மன அழுத்தம், தசை பிடிப்பு, தூக்கமின்மை, சரியான முறையில் அமராமல் இருப்பது போன்றவையும் கழுத்துவலி ஏற்படுவதற்கான காரணங்களாக இருக்கின்றன.

- திடீரென்று கழுத்துவலி ஏற்பட்டால் கழுத்தை கீழ்நோக்கி தாழ்த்தி தாடைப் பகுதி மார்பு பகுதியில்படும்படி ஐந்து விநாடிகள் வைத்திருக்க வேண்டும். அதுபோல் ஐந்துமுறை செய்ய வேண்டும்.
- கழுத்தை ஒருபக்கமாக சாய்த்து 5 முதல் 7 விநாடிகள் வரை அப்படியே வைத்திருக்க வேண்டும். அப்போது கழுத்தின் முதுகெலும்பு பகுதி நேராக இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். பின்னர் கழுத்தை மெதுவாக மற்றொரு பக்கத்தை நோக்கி திருப்ப வேண்டும். இதுபோல் இருபக்கமும் கழுத்தை திருப்பி ஐந்து முறை செய்ய வேண்டும்.
- தோள்பட்டை மீது கழுத்தை நன்றாக சாய்த்து ஐந்து விநாடிகள் அப்படியே வைத்திருக்க வேண்டும். பின்னர் கழுத்தை நேராக நிமிர்த்த வேண்டும். பின்பு மறுபுறம் கழுத்தை வளைத்து 5 விநாடிகள் அப்படியே வைத்திருக்க வேண்டும். இந்த பயிற்சியை குறைந்தது ஐந்து முறை செய்ய வேண்டும்.
- கழுத்தை நேராக வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் கழுத்தை முன்நோக்கி தள்ள வேண்டும். அப்போது தோள்பட்டையின் இரு பகுதிகளையும் பின்னோக்கி இழுத்த நிலையில் வைத்திருக்க வேண்டும். ஐந்து விநாடிகள் இந்த நிலையிலேயே வைத்திருந்தால் கழுத்து தசைகளில் நெகிழ்வு ஏற்படும்.
- சரியான நிலையில் அமர்ந்திருப்பதும், நன்றாக தூங்குவதும் கழுத்து வலி வராமல் தடுக்க உதவும்.
- ஸ்மார்ட்போனை அதிக நேரம் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

முருங்கை இலை டீ

முருங்கை கீரையில் உடலுக்கு அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் ஏராளம் இருக்கின்றன. முருங்கை இலையில் இருந்து டீயும் தயாரிக்கப்படுகிறது. இது ‘மோரிங்கா தேநீர்’ என்று அழைக்கப்படுகிறது. இதில் சாதாரண கீரையில் இருப்பதை விட மூன்று மடங்கு இரும்பு சத்து நிறைந்திருக்கிறது. அதுபோல் கால்சியம், பொட்டாசியம், வைட்டமின், பி6, சி மற்றும் மெக்னீசியம், பீட்டா கரோட்டீன் ஆகியவையும் இருக்கிறது. தினமும் ஒரு கப் மோரிங்கா டீ குடித்தால் உடல் எடை, ரத்த அழுத்தம் குறையும், உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேறும்.

● முருங்கை கீரையில் ஆன்டி ஆக்சிடண்டுகள் அதிகம் உள்ளன. அவை உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றும் தன்மைகொண்டவை. முருங்கைக் கீரையில் இருக்கும் புரதம் தலை மற்றும் கூந்தலுக்கு நீர் சத்தினை தருகிறது.

● ரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுக்குள் வைக்க உதவும் ஐசோதியோசயனேட்டுகள் இதில் அதிகமாக உள்ளன. இதனால் சர்க்கரை நோயாளிகள் இதனை பருகலாம்.

● மன அழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் போன்ற மனநிலை சார்ந்த பிரச்சினைகளுக்கு ஆளாகுபவர்களுக்கு மோரிங்கா டீ நன்மை பயக்கும். அது மனதுக்கு தேவையான ஆற்றலை வழங்கி சோர்வை விரட்டும்.

● முருங்கை இலை, நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டது. நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலிமையாக்கும் தன்மையும் அதற்கு இருக்கிறது. பாக்டீரியா, பூஞ்சை போன்றவற்றை திறம்பட எதிர்த்து போராடும் தன்மை கொண்டவை. இந்த டீயை பருகுவதன் மூலம் வாய்வழி நோய் தொற்றுகளில் இருந்து தற்காத்துக்கொள்ளலாம். காலையிலோ அல்லது மாலையிலோ ஒருவேளையாவது மோரிங்கோ டீ பருகலாம்.

என்றென்றும் கண்ணதாசன்

அண்ணாதுரை கண்ணதாசன்

25

'மகாதேவி' படத்தில் கவிஞர் எழுதிய 'பஞ்ச்' டயலாக்

தியாகராஜ பாகவதர் நடித்த 'ஹரிதாஸ்' படம், ஒரு தீபாவளிக்கு வெளியாகி மூன்று தீபாவளிகள் வரை, 110 வாரங்கள் வெற்றிகரமாக ஓடியது. அந்த சாதனையை இதுவரை எந்தப் படமும் முறியடிக்கவில்லை. அந்தப் படத்தை இயக்கியவர் சுந்தர்ராவ் நட்கர்னி.

இவர், கண்ணதாசன் என்ற வசனகர்த்தா மீது அளவில்லாத மரியாதை வைத்திருந்தார். அப்பா என்ன எழுதினாலும் 'அற்புதம்' என்ற வார்த்தையைத் தவிர வேறு எதுவும் அவர் வாயில் இருந்து வராது. அப்பா, தான் எழுதி பிறகு 'வேண்டாம்' என்று அடித்து தூக்கிப்போட்ட வசனப் பக்கங்களைக் கூட எடுத்து பத்திரமாக வைத்திருப்பார். சுந்தர்ராவ் நட்கர்னியைப் பொறுத்தவரையில் வசனம் என்பதற்கு விளக்கம் கண்ணதாசன்தான் என்று தீர்மானமாக இருந்தவர்.



மூன்று தீபாவளி கண்ட 'ஹரிதாஸ்'

மராட்டிய எழுத்தாளர் கட்கரியின் 'புண்ணிய பிரபவ்' என்ற நாடகத்தை, தமிழில் தயாரித்து இயக்க முடிவு செய்தார் சுந்தர்ராவ் நட்கர்னி.

எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடிக்க 'மகாதேவி' படத்தை தொடங்கினார். அதற்கு திரைக் கதை–வசனம் எழுதும் பொறுப்பை கண்ணதாசனிடம் ஒப்படைத்தார்.

தன் மீது நட்கர்னி வைத்திருந்த அன்பையும் மரியாதையையும் அப்பா நன்கு அறிவார். எழுத வேண்டும் என்ற வெறியுடன் அப்பா இருந்த நேரம் அது. (காரணத்தை அவரது வனவாசத்தை படித்து அறிந்து கொள்ளலாம்).

அப்பாவின் சொல்லாட்சிக்கு 'மகாதேவி' படத்தில் இடம் பெற்ற அப்பாவின் வசனங்களே சாட்சி.

தமிழ் சினிமாவில் 'பஞ்ச்' டயலாக்கை தொடங்கி வைத்தது கண்ணதாசன் என்று கூட சொல்லலாம். அந்த வசனங்களில் சில...

'அத்தான்' என்று எம்.என்.ராஜம், பி.எஸ்.வீரப்பாவை அழைக்க...

"அப்படி சொல், அத்தான்... இந்த சத்தான வார்த்தையை கேட்டு செத்தான் கருணாகரன்" என்று சொல்வார் பி.எஸ். வீரப்பா.

"மணந்தால் மகாதேவி, இல்லையேல் மரணதேவி"

"சொல்லுக்கெல்லாம் கொல்லும் சக்தி இருந்தால், இந்த உலகம் என்றோ அழிந்திருக்கும்."

வில்லன், நாட்டு மக்களைப் பற்றி பேசும்போது சொல்லும் வரிகள்...

"இந்த நாடும், நாட்டு மக்களும் நாசமாய்ப் போகட்டும்"

"போவது ராஜ்ஜிய பாலனம் என்றாலும் பொறுமை இருக்கும் எனக்கு. மானம் போகும் நேரம், வாள் துடிக்கிறது."

"ஆத்திரமே நீதிபதி ஆகிவிட்டால் அங்கு அறிவுக்கு இடமில்லை மன்னா."

"இந்தக் காதல் ஒரு பாதி அல்ல... சரிபாதி"

"உங்களுக்கு கண்ணிலே இதயம்; எனக்கு இதயத்திலே கண்"

"ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள் ஆகும்"

"கற்புக்கு நெருப்பு துணை என் பதை அறியாத கயவனே"

"உன் எதிரிலே நிற்பவன் சோழ நாட்டு மன்னன்" என்று பி.எஸ். வீரப்பா சொல்ல, அதற்கு எம்.ஜி.ஆர். "மக்கள் தந்த மகுடமா? நீ மன்னர் பெற்ற செல்வமா? கள்ளத்தால் பெற்ற நாடு, கபடத்தால் பெற்ற வாழ்வு, ஆளில்லா வேளையிலே தானாகவே தலையில் தூக்கி வைத்துக் கொண்ட மணிமகுடம். துள்ளித் திரிந்த துரோகியே. மக்கள் என்னும் வெள்ளத்தால் நீ அடித்துச் செல்லப்படும் காலம் வந்து விட்டது" என்பார்.

"மகாதேவி... இது தான் கடைசி வார்த்தை" –வீரப்பா.

'கடைசி வார்த்தை! எதுதான் உலகத்தில் ஆரம்பத்துடன் நின்று விடுகிறது?' –மகாதேவி.

ஆனால் வசனம் எழுத வந்தவரை, விதி பாடல் எழுதச் செய்து தமிழ் சினிமாவின் தன்னிகரற்ற பாடலாசிரியராக ஆக்கிவிட்டது. முப்பத்தி எட்டு ஆண்டுகள் கழித்தும் கண்ணதாசன் என்னும் கவிஞனுக்கு இணையாக இன்னொருவர் வரவில்லை என்று மக்களும், இளையராஜா உட்பட அனைத்து இசை அமைப்பாளர்களும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

எம்.ஜி.ஆரிடம் சண்டை போட்டு இந்தப் பாடலை படத்தில் இணைத்துவிட்டார் அப்பா. அவரது கணக்கு தப்பவில்லை. மகாதேவி படம் வெளியான போது திரை அரங்குகளில் இந்த பாடல் காட்சியில் அழாதவர்களே கிடையாது

'மகாதேவி' படத்தில் மொத்தம் பதினோறு பாடல்கள். அதில் அப்பா நான்கு பாடல்கள் எழுதினார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தஞ்சை ராமையாதாஸ், மருதகாசி ஆகியோர் மற்ற பாடல்களை எழுதினார்கள்.

'மகாதேவி' படத்தில் ஒரு கட்டம். சிறையில் இருக்கும் மகாதேவியின் கைக்குழந்தையை கொல்ல வில்லன் திட்டமிடுகிறான். வில்லனின் மனைவி, மகாதேவியின் தோழி. அவள் மகாதேவியின் குழந்தையை காப்பாற்ற, அந்த தொட்டிலில் அந்தக் குழந்தைக்கு பதிலாக தன் குழந்தையை வைத்துவிடுகிறாள்.

வில்லன் வந்து அது மகாதேவியின் குழந்தை என்று நினைத்து தன் சொந்தக் குழந்தையை அதன் தாயின் கண்முன் குத்திக் கொன்றுவிடுகிறான்.

இந்த இடத்தில் ஒரு பாடல் இடம்பெறவேண்டும். வில்லன் வருவதற்குமுன் மகாதேவி தோழியைப் பாடச்சொல்ல பாடல் தொடங்கும். பாட்டின் நடுவே வில்லன் குழந்தையை கொல்வான். அந்த சூழலுக்கு ஏற்ப பாடலின் பொருள் சோகமாக மாறும்.

'சோகப்பாட்டு வேண்டாம்' என்று மகாதேவி கோபிப்பாள்.

உடனே பாட்டு பழையபடி தாலாட்டாக மாறும். இதுதான் பாட்டின் சூழல். இது மராட்டிய நாடகத்தில் இடம்பெற்ற காட்சி. அதில் வசுந்தரா (தமிழ் படத்தில் மகாதேவி) வில்லன் மனைவியை தன் தோழி என்று நினைத்து, "அடியே சுபத்திரையின் மகன் போருக்கு சென்ற கதையைப் பாடு" என்று சொல்வாள். பாடல் தொடங்கும்.

ஆனால் எம்.ஜி.ஆருக்கு அந்தக் காட்சிகளில் உடன்பாடில்லை. ஒன்று கைக்குழந்தையை கொல்வது, இரண்டாவது அவர் சார்ந்திருந்த இயக்கத்தின் நாத்திக கொள்கை. இந்த இரண்டு காரணங்களால் இந்தப் பாடல் காட்சி வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

அதனால் இந்த சூழலுக்கு வேறு விதமாக அந்தப் பாடலை எழுத அப்பா முடிவு செய்கிறார்.

பாடல் எழுத நட்கர்னியின் அலுவலகத்திற்கு அப்பா வந்துவிடுகிறார். அவரே கதாசிரியர் என்பதால், இயக்குனர் பாடலுக்கான சூழலை சொல்லவில்லை. அப்பா சிந்தனை செய்யத் தொடங்குகிறார்.

பிறகு தனது உதவியாளர் தமிழ்ப்பித்தனைப் பார்த்து, "ஆமா... புறநானூற்றில முதல்ல தன் தந்தையை போருக்கு அனுப்பி, பிறகு தன் கணவனை போருக்கு அனுப்பி, கடைசியில் எஞ்சி இருக்கின்ற தன் மகனான சின்னஞ்சிறு பாலகனையும் போருக்கு அனுப்பினாளே அந்த வீரத்தாய். அவளோட பேர் என்ன?" என்று கேட்டார்.

"அவளுடைய பேர் அதில் சொல்லப்படவில்லை" என்கிறார் தமிழ்ப்பித்தன்.

"அவளுடைய பேரை இந்தப் பாட்டுல சொல்லலாம்னு நினைச்சேன்" என்றபடி கவிஞர் சிந்தனை வசப்படுகிறார்.

சிறிது நேரம் கழித்து, "சரி, மூலக்கதையில் இருப்பது போல மகாபாரதத்தை துணைக்கு வச்சுக்குவோம்" என்று உரக்கச் சொல்கிறார்.

சில நிமிடங்கள் கழித்து "தமிழ்பித்தன் எழுது" என்று கடகடவென்று பாடல் வரிகளை சொல்கிறார்.

அந்தப்பாடல்–

மானம் ஒன்றே பெரிதெனக் கொண்டு
வாழ்வது நமது சமுதாயம்
மரண பயங்கரம் சூழ்ந்து வந்தாலும்
மாறிவிடாது ஒரு நாளும்



'மகாதேவி' படத்தில் ஒரு காட்சி

தொகையறா–
போர் என்று கேட்டவுடன் விஜயனின் தேவி
புவியாளப் பிறந்த மகன் தனை அழைத்தாள்
சீருலவும் முகம் பார்த்தாள் சிந்தை கொண்டாள்
சித்தரித்தாள் தலைமுடித்தாள் திலகமிட்டாள்

பாடல்–
வில்லொடு கணையும் ஏந்தி நடந்தான்
விஜய குமாரன் அபிமன்யு
வீரனின் பிரிவால் சுபத்திரை கொண்ட

'மகாதேவி' படத்தில் எம்.ஜி.ஆர்.– சாவித்திரி

வேதனை சொல்லும் தரமன்று

தொகையறா–
கவுரவர் படை கண்டான் விஜயன் மைந்தன்
கைக்கணைக்கு விருந்தென்று மனமகிழ்ந்தான்
தாயிட்ட திலகமும் தந்தையின் சொல்லும்
தந்துணையாய்க் கொண்ட மகன் சிரித்து நின்றான்

பாட்டு–
கடலலை போலே சேனைகள் கண்டும்
கலங்கிடவில்லை அபிமன்யு
மடிவதென்றாலும் மானம் காக்க
மடிவதுதானே உயர்வென்றான்.

தொகையறா–
நாற்படைகள் சூழ்ந்திருந்தும் நடுவில் அந்த
நாயகனாம் துரோணர் தம்மைக் காணவில்லை
துரோணர் எங்கே துரோணர் எங்கே என்றான்
தோளிடையே வில்லோடும் துரோணர் வந்தார்
துரோணர் வந்தார்! வந்தார் துரோணர்

இந்த இடத்தில் வில்லன் பி.எஸ்.வீரப்பா சிறைக்குள் வந்து குழந்தையை கொலை செய்கிறான்.

அதன் பின் பாடல் தொடர்கிறது

தொகையறா–
அபிமன்யு போர்க்களத்தில் சாய்ந்துவிட்டான்
அம்மா என்றழைத்த உயிர் ஓய்ந்ததம்மா
பாண்டவர்கள் பதைத்தார்கள், சுபத்திரையாள் துடிதுடித்தாள்
மகனே குன்னைப் பார்ப்போமா? எங்கு சென்றாய்?
மகனே நீ எங்கு சென்றாய்? எங்கு சென்றாய்?

இந்த இடத்தில் தான், சோகப்பாட்டு வேண்டாம் என்று மகாதேவி கோபிப்பாள். உடனே அவளது தோழி பாடலை மாற்றிப் பாடுவாள்.

பாட்டு–
தன்மானச் செல்வங்கள் வாழ்கின்ற பூமியில்
வில்லேந்தும் வீரன் போலவே
மகனே நீ வந்தாய் மழலைச்சொல் தந்தாய்
வாழ்நாளில் வேறென்ன வேண்டும் அம்மா!.
சிங்காரப் புன்னகை கண்ணாரக் கண்டாலே
சங்கீத வீணையும் ஏதுக்கம்மா
மங்காத கண்களில் மையிட்டுப் பார்த்தாலே
தங்கமும் வைரமும் ஏதுக்கம்மா!

எம்.ஜி.ஆரிடம் சண்டை போட்டு இந்தப் பாடலை படத்தில் இணைத்துவிட்டார் அப்பா. அவரது கணக்கு தப்பவில்லை. மகாதேவி படம் வெளியானபோது திரை அரங்குகளில் இந்த பாடல் காட்சியில் அழாதவர்களே கிடையாது.

–தொடரும்.

இந்தியாவின் இளம் ஆக்கி நட்சத்திரம்

இந்திய ஆக்கியின் எதிர்கால நம்பிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறார், இளம் வீரர் விவேக் சாகர் பிரசாத். இந்த மத்தியபிரதேச இளம்புயல், ஜாம்பவான் சந்தீப் சிங்குக்குப் பின்னால், குறைந்த வயதில் இந்திய அணியில் இடம்பிடித்த இரண்டாவது வீரர்.

தேசிய அளவில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் விவேக் சாகர் முக்கியமான வீரர் என்பதை உணர்த்தும் வகையில் இவருக்கு வளரும் நட்சத்திரம் விருதை வழங்கிக் கவுரவித்திருக்கிறது, சர்வதேச ஆக்கி சம்மேளனம். ஆனால் எதையும் விட, நாட்டுக்கு விளையாடும் சந்தோஷமே மேல் என்கிறார், 19 வயது விவேக் சாகர்.

அவரது பேட்டி...



வேகம்... விவேகம்... விவேக் சாகர் பிரசாத்

நாட்டுக்காக நான்

"நம் நாட்டுக்காக உச்சநிலையில் விளையாடுவதையே எனக்குக் கிடைத்த பெரும் பேறாக, அங்கீகாரமாகக் கருதுகிறேன். கடந்த 2018–ம் ஆண்டு எனது 17–வது வயதில், நியூசிலாந்தில் நடைபெற்ற நான்கு நாடுகள் ஆக்கி போட்டியில் விளையாடத் தேர்வானேன். அந்த ஆனந்தத்தை விவரிக்க வார்த்தையில்லை.

கடைக்குட்டி

எங்கள் வீட்டுப் பிள்ளைகளில் நான்தான் கடைக்குட்டி. அப்பா ரோகித் பிரசாத், ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியர், அம்மா கமலா தேவி இல்லத்தரசி. எங்கள் வீடுதான் என் பலம். அதுவே எப்போதும் எனக்குத் துணை நின்றது. இப்படி ஒரு பெற்றோர், உடன்பிறப்புகள் அமைந்தது நான் பெற்ற வரம். எனக்காக அவர்கள் நிறைய தியாகங்கள் செய்திருக்கிறார்கள். அதனால்தான் சர்வதேச ஆக்கி சம்மேளன விருது கிடைத்ததை அவர்களுக்குத் தெரிவித்தபோது நான் மிகவும் உணர்ச்சி வசப்பட்டேன். ஆனால் அவர்களோ, இது உன் கடின உழைப்பு, அர்ப்பணிப்புக்குக் கிடைத்த விருது என்று எளிமையாகக் கூறிவிட்டார்கள்.

பேட்மிண்டன், செஸ்... ஆக்கி

நான் எனது சிறுவயதில் பேட்மிண்டன், செஸ் விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டினேன். ஆனால் மெல்ல மெல்ல ஆக்கியின் பக்கம் என் கவனம் திரும்பியது. எங்கள் கிராமத்தில் பெரிய பையன்கள் ஆக்கி விளையாடுவதைப் பார்த்து நானும் இவ்விளையாட்டில் ஆர்வம் கொண்டேன். ஆக்கி களத்தில் இறங்கியபோது எனக்கு வயது பத்து. ஓராண்டு ஆக்கி விளையாடியதுமே, இனி இதுதான் நம் எதிர்காலம் என்று முடிவெடுத்துவிட்டேன். அதன்பிறகு நான் திரும்பிப் பார்க்கவே இல்லை.

கவலை அளித்த காயம்

கடந்த 2015–ம் ஆண்டு, எனக்கு சிறப்பான ஆண்டாக அமைந்தது. அடுத்து வந்த ஜூனியர் உலகக் கோப்பை போட்டியில் நான் நிச்சயம் ஆடுவேன் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். நானும் தான். ஆனால் என் எதிர்கால ஆக்கி வாழ்க்கை மட்டுமல்ல, உயிரும் அபாயத்துக்கு உள்ளானது. ஒரு போட்டியில் எனது சக வீரர் எதிர்பாராதவிதமாக என் தோள்பட்டையில் வலுவாக மோத, எலும்பு உடைந்துபோனது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டேன். ஆனால் எனக்கு நினைவு திரும்பியபோது, எனது பெற்றோரும் உடன் பிறந்தோரும் காயத்தின் தீவிரத்தை மறைத்து ஆறுதல் கூறினர். அவர்கள் அளித்த தெம்பினாலோ என்னவோ, நான் மூன்றே மாதங்களில் இந்திய ஜூனியர் ஆக்கி அணிக்குத் திரும்பினேன். 2017–ல் மலேசியாவில் நடந்த ஜோகூர் சுல்தான் கோப்பை போட்டியில் இந்திய இளம் அணிக்குத் தலைமை தாங்கினேன். இளையோர் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய அணியின் கேப்டனாக வழிநடத்தியதும் பெருமைமிக்க அனுபவம்.

இந்திய சீனியர் அணியில்...

2018–ம் ஆண்டு இந்திய சீனியர் ஆக்கி அணியில் அறிமுகமானது முதல் நான் இதுவரை 60–க்கும் மேற்பட்ட போட்டிகளில் ஆடிவிட்டேன். எனது தாக்குதல் பாணி ஆட்டம், எங்கள் தலைமைப் பயிற்சியாளர் கிரகாம் ரீடுக்குப் பிடித்திருக்கிறது என்று அறிந்தபோது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

உயர்ந்த நம்பிக்கை

புவனேஸ்வரத்தில் நடந்த உலக ஆக்கி லீக் போட்டியில் பெல்ஜியத்துக்கு எதிராக இந்தியாவின் தொடக்க கோலை அடித்தது எனது மறக்க முடியாத தருணம். ஒரு நடுக்கள வீரராக அது எனது நம்பிக்கையை வெகுவாகக் கூட்டியது. அப்போது நான் அடிப்படையான விஷயங்களை சரியாகச் செய்தேன் என்று நினைக்கிறேன். ஒரு முன்கள வீரராகச் செயல்படும் வாய்ப்பு அவ்வப்போது வந்துகொண்டிருந்தது. அதைப் பயன்படுத்தி கோல் அடித்தேன். நான் எனது பலத்தின் அடிப்படையில் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால்தான் அப்போட்டியில் நன்றாக ஆட முடிந்தது.

வளர்ந்துவரும் வீரர் விருது

ஆக்கி இந்தியா அமைப்பு சார்பில், சிறந்த வளர்ந்துவரும் வீரருக்கான விருது சமீபத்தில் எனக்கு வழங்கப்பட்டது. விளையாட்டு வீரர்கள் அங்கீகாரத்தை விட பரிசுத்தொகையை பெரிதாகக் கருதுவதில்லை என்றபோதும், அப்போது கிடைத்த பரிசுப்பணம் எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. அந்த 15 லட்ச ரூபாய், எங்கள் குடும்பத்தின் பொருளாதாரக் கஷ்டத்தைத் தீர்த்தது. ஆக்கி விளையாட்டில் இவ்வளவு பணம் கிடைக்கிறதா என்று என் சொந்த ஊர் இளைஞர்களும் உற்சாகமாகி விட்டார்கள். நிச்சயமாக, மேலும் பல இளைஞர்கள் ஆக்கி விளையாட்டு நோக்கி வர இதுபோன்ற பரிசுகள் ஊக்கமாக இருக்கும். என் பங்குக்கு நானும், சொந்த ஊர் செல்லும்போது அங்குள்ள பசங்களுக்கு டீ–சர்ட், ஆக்கி உப கரணங்கள் என்று கொடுத்து உற்சாகப்படுத்துகிறேன்.

சக இந்திய அணி வீரர்களுடன் வெற்றி ஆர்ப்பரிப்பு!

சர்வதேச ஆக்கி சம்மேளனத்தின் விருது வென்ற மகிழ்ச்சியில் விவேக்...

ஒலிம்பிக் உச்சத்தை நோக்கி...

இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் நமது ஆக்கி அணி சிறப்பாகச் செயல்படும் என்று நம்புகிறேன். ஒட்டுமொத்த அணிக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது. ஒலிம்பிக்கை மனதில் வைத்து ஒவ்வொரு நாளும் நாங்கள் எங்கள் ஆட்டத்தை மேம்படுத்த உழைத்துக் கொண்டிருக்கிறோம். நான் உயரம் குறைவாக இருப்பதாகச் சிலர் சொல்வார்கள். ஆனால் நான் அதை ஒரு குறையாக நினைத்ததே இல்லை. நான் பாட்டுக்கு எனது ஆட்டத்தில் கவனம் செலுத்துகிறேன்.

உதவிய மூத்த வீரர்கள்

நான் ஆக்கியில் வளர்ந்து வந்த நாட்களில் முன்மாதிரியாகக் கருதியது, தற்போதைய கேப்டனான மன்பிரீத் சிங்கை. அதேநேரம், மூத்த வீரர்கள் ஸ்ரீஜேஷும், சிங்லென்சனா சிங்கும்கூட கைகொடுத்தனர். அணியில் நான் எனது இடத்தை நிலைப்படுத்திக்கொள்ள உதவினர்.

குடும்பம், நண்பர்கள்

நான் இவ்விளையாட்டில் இந்த உயரத்தை எட்டியதற்கு, எங்கள் குடும்பத்தினருடன், நண்பர்கள், பயிற்சியாளர் களின் ஊக்குவிப்பு ஒரு முக்கியக் காரணம். குறிப்பாக, எனது ஆரம்பகாலப் பயிற்சியாளர் அசோக்குமார் தயான்சந்துக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். தற்போது எனக்கு சர்வதேச ஆக்கி சம்மேளன விருது அளிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்கு நியாயம் சேர்க்கும் வகையில் மேலும் கடுமையாக உழைக்க விரும்புகிறேன். எனது தாய்தேசத்துக்குப் பெருமை சேர்க்க ஆசைப்படுகிறேன்!"

விவேக் சாகர் பிரசாத் மேலும் பல வெற்றிக் கணங்களில் மகிழட்டும்.

அரசன் முதல் ஆண்டி வரை... பாகுபாடு பாராத கொரோனா!!!

சீனாவின் உகான் நகரில் உருவான உயிர்க்கொல்லி கொரோனா வைரஸ், தற்போது அகிலத்தையே ஆட்டிப்படைத்து வருகிறது. உலகம் முழுவதும் தனது கோரமுகத்தை காட்டிவரும் இந்த வைரசால் அன்றாடம் கொத்துக் கொத்தாக மக்கள் மடிந்து வருகின்றனர். கொரோனாவின் கொந்தளிப்பால் 7 லட்சத்துக்கும் அதிகமானோர் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வைரசால் மாண்டவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்தை தாண்டியுள்ளது. அரசன் முதல் ஆண்டி வரை யாரையும் பாகுபாடு பார்க்காமல் பதம் பார்த்து வருகிறது கொரோனா. இன, மத, மொழி பேதமில்லாமல் வறியவர் முதல் வசதி படைத்தவர் வரை கொரோனாவின் சீற்றத்தில் சிக்கி சின்னாபின்னமாகி வருகின்றனர். அரச குடும்பத்தினர், ஆகச்சிறந்த அரசியல் ஆளுமைகள், திரைப்பட நடிகர், நடிகைகள், விளையாட்டு வீரர்கள் என்று பல்துறை பிரபலங்களும் கொரோனாவின் கோரப்பிடியில் அகப்பட்டுக் கொண்டுள்ளனர். சில முக்கிய நபர்கள் பலியாகியும் உள்ளனர். அவர்களைப் பற்றிய அலசல் பின்வருமாறு:–

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ்

சீனாவுக்கு வெளியே கொரோனா வைரசால் பேரிழப்புகளை சந்தித்துவரும் பகுதியாக ஐரோப்பிய கண்டம் உள்ளது. இந்த வைரசுக்கு இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் என்று பல்வேறு ஐரோப்பிய நாடுகள் நடுநடுங்கி வருகின்றன. ஐரோப்பிய கண்டத்தின் தாதாவான ஒருங்கிணைந்த இங்கிலாந்து ராஜ்ஜியமும் இதற்கு விதிவிலக்கல்ல. குறிப்பாக இங்கிலாந்து அரச குடும்பமும் கொரோனாவின் கொடூரப் பார்வையிலிருந்து தப்ப முடியாமல் போய்விட்டது. பக்கிங்காம் அரண்மனை ஊழியருக்கு ஏற்கனவே வைரஸ் பாதிப்பு உறுதியான நிலையில், இங்கிலாந்து இளவரசர் சார்லசுக்கும் கொரோனா தொற்று சில நாட்களுக்கு முன்பு உறுதிப்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து 71 வயதான வேல்ஸ் இளவரசரான இவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

சார்லஸ் மனைவி கேமிலாவும் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிப்பில் உள்ளார். இங்கிலாந்து மகாராணி 2–ம் எலிசபெத்தும், அவரது கணவர் இளவரசர் பிலிப்பும் வைரஸ் அச்சத்தால் அவர்களே தங்களை சுயமாக தனிமைப்படுத்தி பாதுகாப்பாக இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சார்லஸ் தற்போது குணமடைந்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

மொனாக்கோ இளவரசர் 2-ம் ஆல்பர்ட்

2–ம் ஆல்பர்ட்

செல்வந்தர்கள் செறிந்து வாழும் மொனாக்கோ நாட்டின் ஆட்சியாளரும், இளவரசருமான 2–ம் ஆல்பர்ட்டும்(வயது 62) கொரோனாவால் பாதிக்கப்பட்டு அந்நாட்டில் சிகிச்சை பெற்று வருகிறார். கடந்த 10–ந்தேதி லண்டனில் நடந்த நிகழ்ச்சியில் இங்கிலாந்து இளவரசர் சார்லசோடு மொனாக்கோ இளவரசர் ஆல்பர்ட்டும் கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சியில் இருவரும் எதிரெதிர் வரிசையில் அமர்ந்திருந்தனர். தற்போது 2 இளவரசர்களுக்கும் வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன்

போரிஸ் ஜான்சன்

நாடுகளின் ஆளுமைகளில் கொரோனா பாதிப்புக்கு ஆளாகி இருக்கும் முதல் நபர் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆவார். 55 வயதான இவர் வைரசால் பாதிக்கப்படலாம் என்று ஏற்கனவே ஆருடம் சொல்லப்பட்ட நிலையில் தற்போது அது பலித்துள்ளது. கடந்த வாரத்தில் ஜான்சனுக்கு கொரோனா பாதிப்பு உறுதியானது. இதன்பிறகு 14 நாட்கள் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ள இவர், வீட்டிலிருந்தபடியே காணொலி காட்சி மூலம் இங்கிலாந்து அரசின் கொரோனா தடுப்பு பணிகளை கவனித்து வருகிறார்.

இங்கிலாந்து பிரதமர் மட்டுமின்றி அந்நாட்டின் சுகாதார மந்திரி நாடின் டோரிஸ்(62), சுகாதார செயலாளர் மேட் ஹென்ஹாக்(41) ஆகியோரும் இந்த வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கிலாந்தின் சுகாதாரத் துறையையே கொரோனா பிடித்திருப்பது அவலத்திலும் அவலம்.

கனடா, ஸ்பெயின் பிரதமர்களின் மனைவி

சோபி ட்ரூடோ

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் மனைவி சோபி ட்ரூடோ(44), கடந்த 12–ந்தேதி கொரோனா பாதிப்புக்கு ஆளாகி தனிமைப்படுத்தப்பட்டார். இவரோடு கணவர் ட்ரூடோ, குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தினரும் தங்களை சமூகத்தில் இருந்து விலக்கிக் கொண்டனர். சுமார் 15 நாட்கள் வீட்டிலேயே இருந்தனர். இந்தநிலையில், பூரண குணமடைந்துவிட்டதாகவும், தனது உடல்நலன் தேற விரும்பியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் சோபி ட்ரூடோ சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேபோல், ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செசின் மனைவி பெகோனா ஹோமஸும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வருகிறார்.

மற்ற அரசியல் ஆளுமைகள்

உலக அளவில் ஸ்பெயின் துணை பிரதமர் கார்மென் கால்வோ, அந்நாட்டின் சமத்துவத்துறை மந்திரி ஐரீன் மோன்டரா, ஆஸ்திரேலிய உள்துறை மந்திரி பீட்டர் டட்டன், ஈரான் துணை அதிபர் எசக் ஜஹாங்கிரி, அந்நாட்டின் சுற்றுலா மந்திரி அலி அஸ்கர் மவுனேசன், தொழில் மந்திரி ரீசா ரஹமானி, ஈரான் துணை சுகாதார மந்திரி இராஜ் ஹரிர்சி, அமெரிக்க செனட்டர் ரேனல் பால், மியாமி நகர மேயர் பிரான்சிஸ் சுயரேஸ் உள்ளிட்ட பல அரசியல் ஆளுமைகளும் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு தனிமையில் உள்ளனர்.

திரையுலக பிரபலங்கள்

இட்ரிஸ் எல்பா

திரையுலக பிரபலங்களும் கொரோனாவால் பாதிப்படைந்து வருகின்றனர். 2 முறை ஆஸ்கார் விருதை அள்ளியவரும், 'டாவின்சி கோட்', 'ஏஞ்சல் அண்ட் டெமான்ஸ்' உள்ளிட்ட வரலாற்று சிறப்பு மிக்க படங்களில் கதாநாயகனாக நடித்தவருமான பிரபல அமெரிக்க நடிகர் டாம் ஹாங்ஸுக்கு(63) கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. ஹாங்ஸ் மட்டுமின்றி அவரது மனைவியும் ஹாலிவுட் நடிகையுமான ரீட்டா வில்சனும்(63) இந்த வைரசிடம் அகப்பட்டார். 14 நாட்கள் ஆஸ்திரேலியாவில் தனிமைப்படுத்தப்பட்ட இந்த தம்பதியினர் தற்போது முழுமையாக குணமடைந்து அமெரிக்கா திரும்பி உள்ளனர்.

'பாஸ்ட் அண்ட் பியூரியஸ்', 'தி டார்க் டவர்', 'தோர்', 'அவெஞ்சர்ஸ்' ஆகிய பிரமாண்ட ஹாலிவுட் படங்களில் அசாத்திய நடிப்பை வெளிப்படுத்திய இங்கிலாந்து புகழ் இட்ரிஸ் எல்பாவும்(47) இந்த வைரசால் பாதிப்படைந்து பிரச்சினைகளை சந்தித்து வருகிறார். இவரது மனைவி சப்ரீனா எல்பாவுக்கும் நோய் தொற்று உறுதியான நிலையில், தம்பதியர் தனிமையை அனுபவித்து வருகின்றனர்.

'ஹெல்பாய்', 'இன்சர்ஜென்ட்' பட புகழ் டேனியல் டே கிம்(51), ஹாலிவுட்டின் சிறப்புமிக்க சீரியசான 'கேம் ஆப் திரோனில்' நடித்த நார்வே நடிகர் கிரிஸ்டோபர் ஹிவ்ஜு(41), இங்கிலாந்து நடிகை இந்திரா வர்மா(46), அமெரிக்காவைச் சேர்ந்த ஹாலிவுட் பட தயாரிப்பாளர் ஹார்வி வெயின்ஸ்டென்(68), இந்தியாவைச் சேர்ந்த பிரபல பாலிவுட் பாடகி கனிகா கபூர்(42) என்று திரையுலகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல் நீள்கிறது.

விளையாட்டு வீரர்கள்

பல்லோ டிபாலா

கட்டுமஸ்தான உடல்வாகு கொண்ட விளையாட்டு வீரர்களையும் கொரோனா விட்டுவிடவில்லை. உலகம் முழுவதும் பரவி டோக்கியோ ஒலிம்பிக் உள்ளிட்ட பல விளையாட்டு போட்டிகளை ரத்து செய்து ஸ்தம்பிக்க செய்துள்ள இந்த வைரசின் பிடியில் முன்னணி விளையாட்டு வீரர்கள் பலரும் மாட்டிக்கொண்டுள்ளனர். அமெரிக்காவின் புகழ்பெற்ற என்.பி.ஏ. கூடைப்பந்து லீக்கில் விளையாடி வரும் கெவின் டூரன்ட்(31), ரூடி கோபர்ட்(27), டோனாவான் மிட்செல்(23) உள்ளிட்ட ஆறடி உயர ஜாம்பவான்களே கொரோனாவின் கொதிப்பில் பாதிக்கப்பட்டுள்ளனர். கால்பந்து உலகில் வெறும் 19 வயதான இங்கிலாந்து அணியின் இளம் வீரர் காலும் ஹட்சன் ஒடாய், அர்ஜெண்டினா, இத்தாலி நாட்டின் கால்பந்து நட்சத்திர வீரர்களான பவ்லோ டிபாலா(26), டேனியலி ரொஹானி(25), அமெரிக்க கால்பந்து அணியின் பயிற்சியாளர் சீன் பேடன்(56), ஸ்பெயின் பயிற்சியாளர் மைக்கேல் அர்டீடா(38) ஆகியோர் இந்த வைரசால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கிரிக்கெட் வீரர்களில் யாரும் இதுவரை பாதிக்கப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக தகவல் வெளிவராத நிலையில், ஆஸ்திரேலிய புயல் கேன் ரிச்சர்ட்சன் வைரஸ் அச்சத்தால் தனிமைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பலியான பிரபலங்கள்

மரிய தெரசா

கொரோனா பாதிப்பால் ஸ்பெயின் அரச குடும்பத்தில் உயிரிழப்பும் நேரிட்டது. ஸ்பெயின் இளவரசி மரிய தெரசா(86), இந்த வைரசின் கோர பிடியில் சிக்கி உயிரிழந்தார். அரபு நாடுகளில் அதிகம் பாதிப்புக்குள்ளான ஈரானில், பெண் எம்.பி. பாத்தமே ரஹ்பர்(55) இந்த வைரஸ் பாதிப்பில் பலியான குறிப்பிடத்தக்க நபர் ஆவார்.

ஒட்டுமொத்தமாக சாமானியன் முதல் சக்ரவர்த்தி வரை கொரோனா வைரஸ் என்ற கொடூர அரக்கனின் பிடியில் அல்லோகலப்பட்டு வருகின்றனர்.

உருகுவேயில் கிரிக்கெட்டுக்கு உயிரூட்டும் இந்தியர்கள்

உருகுவே நாட்டின் புகழ்பெற்ற கால்பந்து கிளப், பெனாரல். பத்தாண்டுகளுக்கு முன்பு ஒட்டுமொத்த தென்அமெரிக்க கண்டத்தில் நூற்றாண்டின் சிறந்த கால்பந்து அணியாக இந்த கிளப் அணி தேர்ந்தெடுக்கப்பட்டது.

இப்பிராந்தியத்தில் பிரசித்தி பெற்ற கோபா லிபர்டாடோரஸ் கால்பந்து போட்டியில் 5 முறை பட்டம் வென்றிருக்கிற பெனாரல், உருகுவே தேசியப் போட்டிகளிலும் 50 தடவைகளுக்கு மேல் வாகை சூடியிருக்கிறது. பெனாரல் அணியின் கறுப்பும் மஞ்சளும் கலந்த சீருடைக்கு அந்நாட்டு கால்பந்து ரசிகர்கள் மத்தியில் தனி மதிப்பு உண்டு.

ஆனால் பெனாரல் கிளப் தற்போது கிரிக்கெட்டின் பக்கமாகவும்

தமது கவனத்தைத் திருப்பியிருக்கிறது. அதில் தங்கள் தடத்தை வலுவாகப் பதிக்க முயல்கிறது. இதன் பின்னணியில் இருப்பவர்கள் இந்தியர்கள். உருகுவேயில் வீசத் தொடங்கியிருக்கும் புதிய காற்று குறித்து பெனாரல் கிளப்பின் கிரிக்கெட் பிரிவுத் தலைவர் லியனார்டோ வினாஸ் கூறும்போது, "இரண்டாண்டுகளுக்கு முன்பு, உருகுவேயில் கிரிக்கெட் விளையாடப்படுகிறது என்ற புதிய செய்தி வெளியானது. அப்போதுதான் நாங்கள் இந்த விளையாட்டின் மீது கவனம் செலுத்தத் தொடங்கினோம்" என்கிறார்.

உருகுவே தலைநகர் மான்டிவிடியோவில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் கிரிக்கெட் பிட்சில் தீவிரமாக விளையாடிக் கொண்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள். அவர்கள் அங்குள்ள பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரிபவர்கள். தங்களுடன் உள்ளூர் மக்களையும் சேர்த்துக்கொண்டு கிரிக்கெட் ஆர்வத் தீயை மூட்டுகிறார்கள்.

"உருகுவேயில் கடந்த 60, 70 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடப்படவில்லை. இந்நிலையில் மீண்டும் இம்மண்ணுக்கு கிரிக்கெட்டைக் கொண்டுவந்திருக்கும் இந்தியர்களுடன் நாங்கள் தொடர்பு வைத்துக்கொண்டு செயல்படுகிறோம்" என வினாஸ் சொல்கிறார். உண்மையில், 1891–ம் ஆண்டிலேயே பெனாரல், ஒரு கிரிக்கெட் கிளப்பாகத்தான் தொடங்கப்பட்டது. அதைத் தொடங்கியவர்கள் அங்கு ரெயில்வே இருப்புப் பாதை அமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வெளிநாடுகளைச் சேர்ந்த, ஆங்கிலேய அரசுத் தொழிலாளர்கள்.

"அப்படி ஆரம்பத்தில் கிரிக்கெட்தான் விளையாடப்பட்டது. ஆனால் பின்னர் கால்பந்து விளையாடத் தொடங்கிவிட்டனர். உருகுவே மக்கள் மத்தியில் கால்பந்து ஆழமாக வேரூன்றிவிட்டது. தென்அமெரிக்காவின் மிக முக்கியமான கால்பந்து கிளப்பாகவும் பெனாரல் வளர்ந்தது" என டேனியல் வினாஸ் விளக்குகிறார்.

தற்போது புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கும் உருகுவே கிரிக்கெட் லீக்கில் பங்கேற்கும் எட்டு அணிகளில் ஒன்றாக பெனாரல் அணி விளங்குகிறது. இந்த அணியில் விளையாடும் பெரும்பாலானோர் இந்தியர்களே. மான்டிவிடியோ நகரில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கடற்கரையை ஒட்டிய மைதானத்தில் மகாத்மா காந்தியின் சிலை அருகே இந்தியர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருப்பது சாதாரணமான காட்சி. அவர்கள் ஒருவரான 28 வயது அவிஜித் முகர்ஜி, தனது உருகுவே தோழி வெரோனிகா வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க கிரிக்கெட் ஆடுகிறார்.

"நம் நாட்டில் கிரிக்கெட் விளையாட நிறைய வசதி இருக்கும், எண்ணற்ற மைதானங்கள் இருக்கும். ஆனால் இங்கு கிரிக்கெட் மைதானம் என்பதே அபூர்வம்தான்" என்கிறார் அவிஜித்.

அதனால்தான், "நாங்கள் எங்களுக்காக ஒரு நிரந்தர மைதானத்தைத் தேடுகிறோம்" என்கிறார், இந்தியரும், உருகுவே கிரிக்கெட் சங்கச் செயலாளருமான பீர்பால் மணியாட்டுகுடி.

"இந்த ஆண்டு எங்கள் சங்கத்தின் வாயிலாக 120 பேர் கிரிக்கெட் விளையாடினார்கள். கூடுதல் விசேஷமாக, தற்போது நாங்கள் மகளிர் அணிகளையும் தொடங்கியிருக்கிறோம். பெண்கள் பலரும் ஆர்வத்துடன் கிரிக்கெட் விளையாட முன்வருகிறார்கள். 15 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் தொடரைத் தொடங்கவும் திட்டமிட்டிருக்கிறோம்" என்கிறார், பீர்பால்.

கிரிக்கெட் காதல் கொண்ட இந்தியர்களால், உருகுவேயில் இவ்விளையாட்டு மெல்ல மெல்லத் துளிர்விட்டு வருகிறது.

'அன்பே வா' படப்பிடிப்பின் இடைவேளையில் எம்.ஜி.ஆருடன் ஆரூர்தாஸ், திருலோகசந்தர் ஆலோசனை.

ஆரூர்தாசுக்கு
சிவாஜி, எம்.ஜி.ஆருடன் ஏற்பட்ட உரசல்கள்!

சிவாஜிகணேசனுக்கும், எம்.ஜி.ஆருக்கும் ஒரே சமயத்தில் அதிக படங்களுக்கு வசனம் எழுதியவர் என்ற பெருமை பெற்ற ஆரூர்தாசுக்கு, அவர்களுடன் மோதல்களும் ஏற்பட்டன!

சிவாஜியிடம் ஒரு கதையை ஆரூர்தாஸ் கூறி இருந்தார். ஆனால், அந்த கதையை படமாக எடுப்பது பற்றிய அறிகுறியே இல்லாமல் இருந்தது.

பெற்றால்தான் பிள்ளையா?

இந்த நிலையில், ஆரூர்தாசை எம்.ஜி.ஆர். அவசரமாக அழைத்தார். 'முத்துக்குமரன் பிக்சர்ஸ் தயாரிக்கும் படத்தில் நான் நடிக்க இருக்கிறேன். ஒரே வாரத்தில் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. கிருஷ்ணன் – பஞ்சு டைரக்ஷனில் இப்படம் தயாராவதால், வித்தியாசமான கதையாக இருக்க வேண்டும். என்னுடன் சரோஜாதேவியும், எம்.ஆர்.ராதா அண்ணனும் நடிக்கிறார்கள். அதற்குத் தகுந்த கதை வேண்டும்' என்றார்.

முன்பு சிவாஜிக்கு சொன்ன கதையை சொன்னார், ஆரூர்தாஸ்.

கதை எம்.ஜி.ஆருக்குப் பிடித்துவிட்டது. உடனே படப்பிடிப்பும் ஆரம்பமாகிவிட்டது.

9-12-1966-ல் வெளிவந்து, சக்கை போடு போட்டது. அதுதான் 'பெற்றால்தான் பிள்ளையா.'

எம்.ஜி.ஆரிடம் அன்பு முத்தம் பெற்ற ஆரூர்தாஸ், அவரிடம் இருந்து விலக நேரிட்டது.

இந்தப் படத்தினால், சிவாஜிக்கும், ஆரூர்தாசுக்கும் மோதல் ஏற்பட்டது. அதுபற்றி ஆரூர்தாஸ் கூறியதாவது:–

'சிவாஜியிடம் நான் சொன்ன கதைக்கு அவர் பதில் எதுவும் சொல்லாததால் அதை எம்.ஜி.ஆரிடம் சொன்னேன். 'பெற்றால்தான் பிள்ளையா' என்ற பெயரில் அது படமாக வெளிவந்து வெற்றி பெற்றது.

படம் வெளிவந்த ஒரு வாரத்தில், ஒரு நாள் மாலை சிவாஜி என்னை அழைத்தார். நானும் சென்றேன்.

'முன்பு என்னிடம் சொன்ன அந்த கதைதானே, இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் பெற்றால்தான் பிள்ளையா' என்று கேட்டார், சிவாஜி. நானும், 'ஆமாம்' என்றேன்.

அதற்கு சிவாஜி, 'கதை நன்றாக இருக்கிறது, சண்முகத்திடம் சொல்லி சிவாஜி பிலிம்ஸ்சில் புதிய பறவை போல ஈஸ்ட்மென் கலரில் எடுக்கலாம் என்று என் விருப்பத்தை தெரிவித்தேனே! பிறகு எப்படி எம்.ஜி.ஆரிடம் அந்தக் கதையை சொல்லலாம்? உனக்கு நான் என்ன கெடுதல் செய்தேன்? எனக்குத் தெரியாமல் நீ என்ன பண்ணிவிடுவாய் என்று நம்பி பேசாமல் இருந்துவிட்டேன். நீ எனக்கு துரோகம் பண்ணிவிட்டாய்' என்றார்.

அதற்கு நான் 'சத்தியமா நான் அப்படி இல்லை. நான் கதை சொல்லி பல நாள் வரை நீங்கள் எதுவுமே சொல்லவில்லை. இந்த சந்தர்ப்பத்தில்தான், உடனே படம் பண்ணவேண்டும் என்று எம்.ஜி.ஆர். கதை கேட்டார். சும்மா அந்த கதையைச் சொன்னேன். அதில் ஆக்டிங் பார்ட் அதிகம். ஆக்ஷன் பார்ட் குறைவு. அதனால் அவருக்கு அது பிடிக்காது என்று நினைத்தேன். நான் நினைத்தது நேர்மாறாகிவிட்டது. கதை அவருக்குப் பிடித்து விட்டது. என்னை மன்னித்து விடுங்கள். அதைவிட நல்லதா வேறு ஒரு கதை சொல்கிறேன்' என்றேன்.

உடனே சிவாஜி 'எனக்கு தேவை இல்லை. அதையும் உன் எம்.ஜி.ஆரிடம் சொல்லி காசு வாங்கிக்கொள். இதோ பார்! இந்த நிமிஷம் முதல், எனக்கும் உனக்கும் பேச்சுவார்த்தை இல்லை. இனி என் படத்திற்கு நீ எழுதக்கூடாது என்று நானாக என் வாயால் சொல்லமாட்டேன். அது டைரக்டர், தயாரிப்பாளர் விருப்பம். என்னை வைத்து நீ இல்லை, உன்னை வைத்து நான் இல்லை' என்றார், கோபத்துடன்.

அதன்பிறகு, 3 மாதம் வரை இருவரும் சந்தித்துக் கொள்ளவில்லை.

திருலோகசந்தரின் எல்லாப் படங்களுக்கும் நான்தான் வசனம் எழுதி வந்தேன். அவர் சிவாஜியை வைத்து, தங்கை என்ற படத்தை எடுத்தார். அதற்கும் நான்தான் வசனம் எழுதினேன். சிவாஜியுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்ட காலகட்டம் இது. எனவே, தங்கை படப்பிடிப்பு நடந்தபோது, சிவாஜியை சந்திப்பதை தவிர்த்தேன்.

தங்கை வெளியாகி வெற்றி பெற்றது. அதன்பின், சிவாஜி, பத்மினி, கே.ஆர்.விஜயா நடித்த 'இருமலர்கள்' என்ற படத்தை திருலோகசந்தர் எடுத்தார். அப்படத்துக்கும் நான்தான் வசனம் எழுதினேன்.

ஒரு நாள் படப்பிடிப்பின் போது, நானும், சிவாஜியும் எதிர் எதிரே சந்தித்துக் கொண்டோம். ஒரு கணம் திகைத்து நின்றோம். பிறகு நான் ஒதுங்கி நடக்கத் தொடங்கிய போது, அவர் என் கையைப் பிடித்து நிறுத்தினார்.

'டேய்! அண்ணன் தம்பிகிட்ட கோபப்பட்டுக்கிட்டு பேசாமல் இருக்கலாம். ஆனால் தம்பி அண்ணனுடன் பேசாமல் இருக்கக்கூடாது' என்று கூறிவிட்டு, அவரே தொடர்ந்து 'சாரி! ஐயம் வெரி சாரி பழசையெல்லாம் மறந்துவிடு!' என்றார்.

நான் கண்ணீர் விட்டுக் கதறினேன். அவர் என்னை தழுவிக்கொண்டார்.

அதன்பின் அவரது சொந்தப்படமான 'தெய்வ மகன்' முதல் 'அன்புள்ள அப்பா' வரை அவர் நடித்த பல படங்களுக்கு நான் வசனம் எழுதினேன்.

ஆனால், 'பெற்றால்தான் பிள்ளையா'வுக்கு பிறகு, எம்.ஜி.ஆருக்கு நான் எந்தப் படத்துக்கும் வசனம் எழுதவில்லை என்பது தான் ஆச்சரியம்!'

இவ்வாறு ஆரூர்தாஸ் கூறினார்.

எம்.ஜி.ஆர். கோபம்

தி.மு.க.வை விட்டு எம்.ஜி.ஆர். விலகி, 'அ.தி.மு.க'வை தொடங்கிய பிறகு, தன் கட்சிக்காரர்கள் கட்சி சின்னத்தை கையில் பச்சை குத்திக்கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார்.

ஆரூர்தாசையும் பச்சை குத்திக்கொள்ளும்படி, கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறினார். அவர் மறுத்துவிட்டார்.

இதுபற்றி ஆரூர்தாசிடம் எம்.ஜி.ஆர். விசாரித்தார்.

'ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் போன்ற சர்வாதிகாரிகள் கூட, இப்படி கையில் பச்சை குத்திக்கொள்ளும்படி கட்டளையிடவில்லை. உங்கள் மீது நான் வைத்திருக்கும் அன்புக்காக, என் கையை அசிங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை' என்றார் ஆரூர்தாஸ்.


சிவாஜி – ஆரூர்தாஸ் நட்பு, இறுதிவரை நீடித்தது.

'என்னிடம் இருந்து நீங்கள் விலகிப்போகிறீர்கள் என்று நினைக்கிறேன்' என்றார், எம்.ஜி.ஆர்.

'அதுதான் விதி என்றால், அதை யாராலும் தடுக்க முடியாது' என்று கூறி, எம்.ஜி.ஆரிடம் விடை பெற்றுக் கொண்டார், ஆரூர்தாஸ்.

அதன்பிறகு, எம்.ஜி.ஆர். படங்களுக்கு வசனம் எழுதும் வாய்ப்பை ஆரூர்தாஸ் பெறவில்லை.

(சினிமா கதைபோல் நடந்த திருமணம் – நாளை)

புதன்கிழமை பங்கு வர்த்தகத்தில்

சென்செக்ஸ் 1,203 புள்ளிகள் இழப்பு

நிப்டி 344 புள்ளிகள் இறங்கியது

மும்பை, ஏப்.2-
புதன்கிழமை அன்று பங்கு வர்த்தகம் கடும் சரிவை சந்தித்தது. மும்பை பங்குச்சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 1,203 புள்ளிகளை இழந்தது. தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிப்டி 344 புள்ளிகள் இறங்கியது.

குறியீட்டு எண்கள்

பங்கு வியாபாரம் சரிவு கண்ட நிலையில், மும்பை பங்குச்சந்தையில் நேற்று ஐ.டி. துறை குறியீட்டு எண் அதிகபட்சமாக 5.58 சதவீதம் குறைந்தது. அடுத்து தொழில் துறை குறியீட்டு எண் 5.51 சதவீதம் சரிந்தது. சென்செக்ஸ் கணக்கிட உதவும் 30 நிறுவனப் பங்குகளில் 4 பங்குகளின் விலை உயர்ந்தது. 26 பங்குகளின் விலை சரிந்தது.

இந்தப் பட்டியலில் ஹீரோ மோட்டோகார்ப், பஜாஜ் ஆட்டோ, பஜாஜ் பைனான்ஸ், டைட்டான் கம்பெனி ஆகிய 4 பங்குகளின் விலை ஏற்றம் கண்டது. அதே சமயம் டெக் மகிந்திரா, கோட்டக் மகிந்திரா வங்கி, டாட்டா கன்சல்டன்சி சர்வீசஸ், இன்போசிஸ், ஆக்சிஸ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்துஸ்தான் யூனிலீவர் உள்பட 26 நிறுவன பங்குகளின் விலை குறைந்தது.

சென்செக்ஸ்

